Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்

மலர் 12 | சௌமிய | மாசி 10 | ஜுஹஜ் 14 | (21-2-70) | சனிக்கிழமை | இதழ் —11

மில்க்வைற்
நீலசோப்
மேலுறைகளைச்
சேகரித்து அனுப்பி
பரிசில்களைப்
பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க் வைற்சோப்
தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

# 'பல்கலைக்கழகத்தை வடக்கில் நிறுவ வேண்டும்'

## மாநகர சபைக்கு வரும் பிரேரணை

யாழ்ப்பாணம், சனி

வடக்கு கிழக்கு பகுதி மக்களின் உயர் கல்வி வசதியை முன்னிட்டு நிறுவப்படவிருக்கும் பல்கலைக்கழகத்தை வடபகுதியிலேயே அமைக்கப்படல்வேண்டும் என்ற பிரேரணையை இம்மாதம் 23-ம் தேதி நடைபெறவிருக்கும் யாழ்ப்பாண மாநகரசபை கூட்டத்தில் கொண்டுவருவதற்கு திரு. தம்பு கந்தையா முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

இப்பிரேரணையில் கூறப்பட்டிருப்பதாவது: வடக்கு கிழக்கு பகுதிமக்களின் உயர் கல்வி வசதியை முன்னிட்டு நிறுவப்படவிருக்கும் பல்கலைக்கழகத்தை வடபகுதியிலேயே அமைக்கப்படல் வேண்டும். ஏனெனில் இப்பகுதியிலேயே கூடுதலான பிள்ளைகள் பல்கலைக்கழகத்திற்கு செரிவுசெய்யப்படுகின்றனர். மேலும் கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்கழகத்தை நிறுவுவதன்மூலம் அப்பகுதியின் கல்வி நிலை முன்னேற்றம் அடையுமென்பது தவறான அபிப்பிராயமாகும். காரணம். அப்பகுதியில் பல்கலைக்கழகத்திற்கு கூடுதலான பிள்ளைகள் தெரிவுசெய்யப்படக்கூடிய முறையில் அப்பகுதியின் ஆரம்பக் கல்வியின் தரம் குறைவாக இருப்பதே. முதலில் குறைபாட்டை நிவர்த்தி செய்த பின்பேபல்கலைக்கழகம்பற்றி ஆலோசிக்கப்பட வேண்டும். ஆகவே தேசிய அரசாங்கம் நிறுவ உத்திதேசித்திருக்கும் பல்கலைக்கழகத்தை இனத்தின் பெயரையோ. அன்றி மதத்தின் பெயரையோ கொண்டதல்லாமல் பேராதனையிலும், கொழும்பிலும் இருப்பதைப்போன்ற முறையில் இலங்கைப்பல்கலைக்கழகம் வடமாகாணம் என்ற பெயரில் நிறுவித்தரும்படி இச்சபை கல்வி அமைச்சரை பணிவுடன் கேட்டுககொள்கிறது.

இக்கூட்டத்தில் ஜனப் எம். ஜீ. பசிர் கீழ்க்காணும் பிரேரணையைக் கொண்டு வருவார். வல்வெட்டித்துறையில் பொதுமக்களுக்கு இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட அட்டூழியத்தையும்,பருத்தித்துறை எம்.பி இராணுவத்தினரால் தாக்கப்பட்டதையும் அரசாங்கம் பகிரங்க விசாரணை நடத்தி அகற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இச்சபை பிரதமரை கேட்டுக்கொள்கிறது.

---

தமிழ் உபதபால் அதிபர் சங்கத்தினரை

## பிரதமர் விரைவில் சந்தித்துப்பேசுவார்

(நமது நிருபர்)

அகில இலங்கைத் தமிழ் உப அதிபர்கள் சங்கத்தினருடன் பிரதமர் விரைவில் பேச்சுவார்த்தை நடாத்துவார். இந்தத் தகவலை மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. ஐ. நடராசா தெரிவித்தார்.

உப தபால் அதிபர்களுடைய பென்ஷன், சம்பளம் போன்ற பல்வேறு பிரச்னைகள் குறித்து பிரதமருக்கு சங்கத்தினர் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தனர். இதுசம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு பிரதமர் சம்மதம் தெரிவித்திருப்பதாகத் தகவல் கிடைத்திருப்பதாகவும் திரு. நடராசா தெரிவித்தார். உப தபால் அதிபர்கள் பலவித சஷ்டங்களினுல் மிகவும் அல்லற்பட்டுக்கொண்டிருப்பதாகவும், இந்தப் பிரச்னைக்கு விரைவில் தீர்வு ஏற்படுமென்ற நம்பிக்கை தமக்கிருப்பதாகவும் அவர் கூறினுர்.

பிரதமர் தங்களைச் சந்தித்துப் பேசுவதற்கான திகதியை விரைவில் அறிவிப்பாரென எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினுர்.

---

வல்வெட்டித்துறை

## இராணுவ முகாமுக்கு புதிய அணி வந்தது

கொழும்பு, சனி

அண்மையில் வல்வெட்டித்துறையில் நடந்த சம்பவம் காரணமாக, வல்வெட்டித்துறையிலிருந்து திருப்பிப் பெறப்பட்ட இராணுவத்தினருக்குப் பதிலாக புதிய அணியொன்று நேற்று மாலை கொழும்பிலிருந்து புகையிரதத்தில் வல்வெட்டித்துறையைநோக்கிப்புறப்பட்டுள்ளது.

சி. எல். ஐ.என்றழைக்கப்படும் இந்த அணியில் 135 இராணுவவீரர்களும், 10 உயர்அதிகாரிகளும் வருகிறுர்கள்.

---

கட்டுபெத்தை

## தொழில் நுட்ப கலைவிழா

(வெள்ளவத்தை நிருபர்)

கட்டுபெத்தை உயர் தொழில்நுட்பக் கல்லூரி தமிழ்மன்றத்தினர் இன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்பத்தில் கலைவிழாவொன்றை நடத்துகின்றனர். இன்று காலை ஆரம்பமாகும்விழாவில் கவியரங்கு, விவாத அரங்கு, கலைநிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறும்

---

## ஏற்றத்தாழ்வுகளே வன்முறைக்குகாரணம்

— கிரி

புதுடில்லி, பெப். 20

''சோஷலிச சமுதாயத்தைக் காண்பதற்கு அரசு உறுதிப்பாடான நோக்கத்தைக் கொண்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுகளால் நாடுகிளர்ச்சியுற்ற நிலையில் உள்ளது. நாட்டுப்புறங்களில் ஏற்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுகள் வன்முறைக்கு வழிவகுப்பனவாகவுள்ளன''.

இந்திய ஆட்சிமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து இந்திய ஜனுதிபதி திரு. வி. வி கிரி தமது உரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்-

''நாட்டின் மிகப்பெரிய பிரச்னையாகவுள்ளது வேலையில்லாப்பிரச்னையே என்றும் அவர் கூறினுர்.

ஆங்கிலத்தில் அவர் உரை நிகழ்த்தினுர். அதைஅவரது காரியதரிசி இந்தியில்மொழி பெயர்த்தார். இதற்கு சில உறுப்பினர்கள் பின்னர் ஆட்சேபம் தெரிவித்தனர்.

---

## "அரசியல் லாபத்துக்காக நான் ராணுவத் தாக்குதலுக்குள்ளாகவில்லை'

### பருத்தித்துறையில் துரைரத்தினம்

(வல்வெட்டித்துறை, நிரு.)

'பொதுமக்களை இராணுவத்தினர் தாக்கியபோது நான் அரசியல் லாபம் கருதி அங்குசென்று தாக்குதலுக்குள்ளாக வில்லை. என் கடமையைச் செய்யவே நான் அங்கு சென்றேன்' என்ற பருத்தித்துறை எம். பி. திரு. க துரைரத்தினம் கூறினுர்: பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் தியாகி அருச்சுனராசா அரங்கில் நடந்த திரு. எம். வேலும் மயிலும் தலைமையில் நடந்த கூட்டத்தில் அவர்பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னுர்.

திரு. துரைரத்தினம் மேலும் பேசுகையில் 'வாள் எடுத்தவன் வாளாலே சாவான் என்பதனை அரசாங்கத்துக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். தமிழ்மக்களை தாக்கும்ராணுவமே இலங்கைஜனநாயகத்துக்கேகுழி பறிக்கும். இன்று வடபகுதி கரையோரப்பகுதி இராணுவ ஆட்சிக்குட்பட்டிருக்கிறதென்பதை மிகவும் கவலையுடன் சொல்லவேண்டியிருக்கிறது' என்றுகூறினுர்.

காங்கேசன்துறை எம். பி. திரு: எஸ். ஜே. வீ. செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது

தமிழ்ப்பபகுதிகளிலிருந்து இராணுவத்தை எடுக்க வேண்டும் என அரசாங்கத்தை நாம் அடிக்கடி கேட்டு வருகிறுேம். ஆனுல் அரசாங்கமே அதற்குச் செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை. நாம் தொடர்ந்தும் இராணுவத்தை அகற்றுவதற்காகப் பாடுபட்டுவருகிறுேம். இன்றைய ஆட்சியாளருக்கு மூன்றரை வருடகாலமாக நாம் ஒத்துழைப்புக் கொடுத்து வந்தோம். அதேநேரத்தில் தமிழ்மக்கள் மீது அரசாங்கம் எதையும் புகுத்தமுடியாமல் போய்விட்டது. நாங்கள் விலகியதும் மூன்று பௌத்த பாடசாலைகள்ஏற்படுத்தினர். தமிழினத்திற்குத் தமிழே போதனுமொழியாக இருக்கவேண்டும். ஆனுல் அரசினர் பௌத்த பாடசாலைகளை ஏற்படுத்தி சிங்களத்தைப் போதனு மொழியாக்க முயற்சிக்கிறுர்கள்.

---

வடக்கு

## ராணுவஜீப்புகளில் "வயலஸ்"

(மல்லாகம் நிருபர்)

வடபகுதி கரையோரங்களில் இப்போது ரோந்து புரியும்ஜீப்புகளில் 'வயலஸ்' இணைக்கப்பட்டுள்ளன.

ஒருராணுவ ஜீப்பிலிருந்து இன்னெருராணுவ ஜீப்புக்கும், பலாலியிலுள்ள தலைமை ராணுவமுகாமுக்கும் தகவல்கள் அனுப்புவதற்கு வசதியாகவே இந்த 'வயலஸ்' இணைக்கப்பட்டிருக்கிறதாம்.

சுமார் பத்து ஜீப்புகளில் இந்த 'வயலஸ்' இணைக்கப்பட்டிருக்கிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# இராணுவத்தை அகற்ற சொல்வதால் பயனுண்டா?

வல்வெட்டித்துறை இராணுவத்தாக்குதல், யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகக் கமிஷன் விசாரணை, யாழ்ப்பாணநகரமேயர் தெரிவ ஆகியவைகளே சென்ற வாரத்தில் நடந்த மிகமுக்கியமான சம்பவங்கள்என்று சொல்லலாம்.

வல்வெட்டித்துறையிலோ மற்றும் வடபகுதியிலோ இராணுவத்தாக்குதல் புதிய விஷயமல்ல. இராணுவ, பொலிஸ்தாக்குதல் இடையிடையே இங்கு நடைபெருமலிருந்தால்தான் அது ஆச்சரியமானதாகஇருக்கவேண்டும். ஆனாலும்சென்றவாரம் வல்வெட்டித்துறையில் நடந்த இராணுவத்தாக்குதலில் பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. க. துரைரத்தினம் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றதுசிறிது ஆச்சரியம் தரக்கூடியதுதான். ஆட்சிமன்றப் பிரதிநிதியென்று தெரிந்தும்அவர் அங்கு அமைதியை நிலைநாட்டுவதற்காகச் சென்றது தெரிந்திருந்தும் தாக்கப்பட்டதாக ஒரு சாரார்கூறுகின்றனர். ஆட்சிமன்றப் பிரதிநிதியென்பது தெரியா

இராணுவத்தினருடன் பொலிசாரும் ரோந்துக் காவல்வேலைகளில் ஈடுபடவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது: இது நல்ல ஏற்பாடுதான். இராணுவத்தளபதியும் இதில் திருப்தியடைந்திருக்கிருர். ஆனாலும் கள்ளக் கடத்தல் சட்டவிரோதக் குடியேற்ற ரோந்துநடவடிக்கைகளில் ஈடுபடும், இராணுவத்தினருடன் செல்லும் பொலிசாரின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். இந்த ரோந்து வேலைகளில் ஈடுபடுவதற்காக வடபகுதியிலுள்ள முக்கிய பொலிஸ் நிலயங்களிலிருந்து ஐந்து ஆறுபேர் தனியாக நியமிக்கப்படவிருக்கின்றனர். இதே சமயம் இராணுத்தாக்குதல் என்பது இராணுவத்தினருக்கு வேண்டுமென்றே ஆத்திரமூட்டி தங்கள் காரியங்களைச் செய்வதற்காக கள்ளக்கடத்தல்காரர் செய்யும் தந்திரமென்று இராணுவமேலிடம் கருதிகள்ளக் கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றத்தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் பொருட்டு வடபகுதியில் இராணுவத்தை அதிக

லில்' வைக்கப்பட்டிருந்ததும் மறந்துவிடக்கூடிய சம்பவங்களல்ல

வல்வெட்டித்துறையில் இப்போது நடந்துள்ள தாக்குதல் சம்பவத்தைவிட மிக மோசமான சம்பவங்களும் இதற்கு முன்நடைபெற்றிருக்கின்றன. ஆனுல் இம்முறை இது பலராலும் பெரிதுபடுத்தப்படுகிறது. ஒவ்வொரு கட்சியினரும் கட்சிகளின் கிளைகளும்கூட கண்டனமும் அறிக்கையும் விடுத்துவருகின்றன. இராணுவத்தை வடக்கிலிருந்து நீக்கவேண்டுமென்று ஒரு சாரார் இங்கு வற்புறுத்தும் அதேசமயம் வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றுவதற்குப பதில் அதை அதிகரிக்கவேண்டுமென்று தென்னிலங்கையில் ஒரு சாரார் குரல் எழுப்புகின்றனர். வல்வெட்டித்துறைச் சம்வம்பற்றி பகிரங்கவிசாரணை நடத்தவேண்டுமென்று வேறுபலரும் அறிக்கைகள் விடுகின்றனர்.

அடுத்த தேர்தல் நெருங்குவதும் அதற்கு ஓர் அருமையான வாய்ப்புக்கிடைத்திருக்கிறதென அவர்கள்

கொண்டு நமது இராணுவத்தில் ஒழுங்கும் கட்டுபபாடும் இருக்கிறதாவென்பதுபற்றியும் இராணுவத்தினுள்ளும் கட்சி அரசியல், இனமத வேறுபாடுகள் நுழைந்துள்ளனவா (சமீபத்தில் வகுப்புவாத துண்டுப்பிரசுரங்கள் இராணுவத்தினர் மத்தியில் விநியோகிக்கப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன) என்பதுபற்றியும் விசாரணை செய்யவும் ஒரு சுதந்திர நாட்டின் இராணுவத்தின் கடமை என்ன என்பதைத் தெளிவுபடுத்தவும் ரேயல் கமிஷன்ஒன்றை நியமித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரலாம். இதற்குத் தென்னிலங்கை மக்களின் ஆதரவும் கிடைக்கலாம் தென்னிலங்கைப் பிரதிநிதி ஒருவர்மூலம் ரேயல் கமிஷன் நியமிக்கும் கோரிக்கையை ஆட்சிமன்றத்திலேயே கிளப்பலாம். இதுதான் இப்போது செய்யக்கூடிய விவேகமான காரியமாகத் தோன்றுகிறது.

மன்னர் சம்பவத்தையடுத்து கள்ளக்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இரா

## இராணுவம் பற்றி ரேயல் கமிஷன் விசாரணை வேண்டும்

மல்தான் தாக்கப்பட்டிருக்கிறார் என்பதுஇராணுவத்தினரின் கூற்று. சிறுவர்கள் கல்லெறிந்து இராணுவத்தினரைத்தாக்கியதால் தான் அந்தச்சம்பவமே நடந்ததென்பது அவர்கள் கூறும் விளக்கம். இராணுவத்தாக்குதல் சம்பந்தமாக ஆள் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. 12 பேர் அடையாளம் காட்டப்பட்டனர். ஆனுல் சரியானவர்கள் அடையாளம் காட்டப்படவில்லை. 62 பேரில் அடையாளம் காட்டுவதென்பது அதுவும் முன்னர் அறிமுகமில்லாதவர்களை அடையாளம் காட்டுவதென்பதுசுலபமல்ல. சரியாக அடையாளம் காட்டப்படாததால் எந்தச் சிப்பாய் மீதும் வழக்குத் தொடர்வதற்கு வாய்ப்பில்லையென் பொலிசார் தெரிவித்திருக்கின்றனர். இராணுவத்தினர் மீது கல் எறிந்ததும் உண்மை; இராணுவத்தினர் தாக்கியதும் உண்மை என்பது பொலிஸ் விசாரணையின் முடிவு. எது எப்படியானுலும் தாக்குதல் நடத்திய இராணுவத்தினருக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படமாட்டாது. குற்றம்செய்தவர்களுக்கு அவர்கள் இராணுவத்தினராக இருப்பதால் தண்டனையில்லாமல் தப்பிவிடுவர். வல்வெட்டித்துறைச்சம்பவத்தைத் தொடர்ந்துஇரண்டுதடவைகள் இராணுவத்தளபதி மேஜர்ஜெனரல் சேபால அட்டிகல வடபகுதிக்கு விஜயம் செய்து திரும்பியிருக்கிறார். இராணுவத்தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து

ரிக்கவும் விரைவாகச்செல்லக்கூடிய மோட்டார்வாகனங்களை அனுப்பவும் இராணுவமேலிடம் தீர்மானித்திருக்கிறதாம். ரோந்துநடவடிக்கைகளில்பொலிசாரும் சேர்த்துக் கொள்ளப்படும்போது இங்குள்ள இராணுவத்தினரின் தொகையைக் குறைப்பதற்குப்பதில் ஏன் அதிகரிக்கவேண்டும்? இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலும் ஒழுங்கிலும் நம்பிக்கையில்லை யென்பதால்தான் அவர்களுடன் பொலிசாரும் ரோந்து நடவடிக்கைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறர்கள். பொலிசாரில் நம்பிக்கையில்லையென்பதால் தான்கள்ளக்கடத்தல், சட்டவிரோதக்குடியேற்றத் தடுப்பு ஆகியவைகளைஅதனிடமே முழுக்க முழுக்கஒப்படைக்கமுடியவில்லைப் போலும். ஆக இராணுவத்திலும், பொலிசிலும் அரசாங்கத்துக்கு நம்பிக்கையில்லையென்று கொள்ளலாமா?

மன்னரில் நடந்த துரதிர்ஷ்ட சம்பவங்களின் போது மன்னர் மக்களைப் பொலிசார் பாதுகாத்தனரென்பது உண்மையே. ஆனுலும் எல்லாப்பொலிசாரும் எல்லா நேரமும் ஒரேமாதிரி மனப்பான்மையுடனிருப்பார்களா என்ற கேள்விககும் இடமுண்டு. சில வருடங்களுக்கு முன் வல்வெட்டித்துறையில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமும் அச்சயமம் வாசகசாலையில் பருத்தித்துறைப் பிரதிநிதி உட்பட வேறு பலரும் அதிகாலைவரை 'தடுப்புக் காவ

கருதுவதும் பொதுமக்கள் உணரமுடியாதவிஷயமல்ல.

வடக்கிலிருந்து இராணுவத்தினரை அகற்றவேண்டுமென்றும் இங்குள்ள இராவமுகாம்களையெல்லாம் மூடிவிடவேண்டுமென்றும் வடபகுதி மக்கள் என்னதான் கரடியாகக் கத்தினுலும் அதுநடைபெறமுடியாதென்பது தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் தமிழ்ப் பிரதிநிதிகள் பிரதமரிடம் விடுத்த வேண்டுகோள், எதிர்க்கட்சித்தலைவர்கள் காட்டிய எதிர்ப்பினுல் நிராகரிக்கப்பட்டதிலிருந்தே தெளிவு.

எனவேஇனியும் வடபகுதி மக்கள் மட்டுமோ, வடபகுதியிலுள்ள அரசியல்கட்சிகளோ இராணுவத்தை வடபகுதியிலிருந்துஅகற்றவேண்டுமென்று கூச்சலிடுவது மேலும் மேலும் இங்குஇராணுவத்தை வலுப்படுத்தத் தூண்டுவதாகவே இருக்கும். அதுவும்தேர்தல் நெருங்கும் இச்சமயத்தில் இராணுவத்தை இங்கிருந்து அரசாங்கம் அகற்றமுன்வருமா? இராணுவத்தை இங்கிருந்து அகற்றவேண்டுமென்ற கோரிக்கைக்கு தென்னிலங்கையிலுள்ள முற்போக்கு கட்சிகள்கூட ஒத்துழைக்க முன்வரமாட்டா?

மன்னர், வல்வெட்டித்துறைச் சம்பவங்கள்மட்டுமல்லாமல் இதர பகுதிகளிலும் இடையிடையே சிறுசிறு சம்பவங்கள் நடந்துவருவதையும் இராணுவம் பற்றி [illegible] படும் புகார்களையும்

ணுவ அணிகள் (சிங்கரெஜிமென்ட்போன்றவை) நீக்கப்பட்டு இலங்கை காலாட் படை அணி (ஸி. எல் ஐ) யிடம் விடப்பட்டது. இந்த அணியின்முதல்பிரிவினர்மன்னருக்குச் சென்றுகொண்டிருக்கும்போதே பொல்காவலையில் ரயிலில் அமர்க்களம் செய்தார்களாம். எனவே அணிகளை மாற்றுவதாலோ, அங்கங்கே நடக்கும் சம்பவங்களைப்பற்றி விசாரணை செய்வதாலோ பிரச்னை தீர்ந்துவிடாது. இராணுவம் பற்றி தகுதிவாய்ந்த ஒரு கமிஷன் நியமித்து விசாரணை செய்வதே சிறந்தது. இந்தப் போக்கில் இராணுவத்தை விட்டுக்கொண்டு போனுல் கதை வேறுவிதமாகத் திரும்பினுலும் திரும்பலாம். அரசாங்கம் இதுபற்றிச் சிந்திப்பது நல்லது.

### கமிஷனும் மேயரும்

வடக்கிலா, கிழக்கிலாமற்ருெரு பல்கலைக்கழகத்தை அமைப்பதென்பதுபற்றி ஆராய்ந்து கல்வி அமைச்சருக்கு சிபார்சு செய்வதற்காக நியமிக்கப்பட்ட டாக்டர் ஜி. பி. மலலசேகரா தலைமையிலான மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட விசாரணைக்குழு சென்ற வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து சாட்சியங்களைப் பதிவுசெய்துகொண்டு திரும்பியிருப்பதுடன் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு வாய்ப்பான இடங்களையும் பார்வையிட்டுத் திரும்பியிருக்கிறது. இந்த விசாரணைக் கமிஷனில் சாட்சியமளித்தவர்களில் சிலர் பெரும் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அவைகளின்ஆதரவாளர்களும் அனுதாபிகளுமாவர். இவர்களுட்சிலர் இந்தக் கட்சிகளின் உள் நோககங்களைத் தெரிவித்து ஒருசாதனையை ஏற்படுத்தியிருக்கின்றனராம்!

யாழ்ப்பாண நகரின் புதிய மேயராக திரு. ரி. எஸ் துரைராஜா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். பலரும் பலவிதமாக முயற்சி செய்தனர், சிலர் அபரிமிதமான நம்பிக்கையையும் கொண்டிருந்தனர். எதுவும் நடைபெருதது மட்டுமல்ல கடைசி நேரத்தில் ஏகமனதாக மேயர்தெரிவு நடைபெற்றிருக்கிறது

தமிழ்க்காங்கிரசைச் சேர்ந்த திரு. ரி. எஸ். துரைராஜாவை தமிழ்க்காங்கிரஸ், தமிழ்அரசு 'கனவான்கள் உடன்படிக்கை'யின் அடிப்படையில் இரு கட்சிகளும் கூட்டாக மேயர் பதவிக்கு நிறுத்தின,

யாழ்ப்பாண நகரமேயர் பதவி சம்பந்தமாக தமிழ்க் காங்கிரசும் தமிழ்அரசுக் கட்சியும் ஓர் உடன்பாட்டுக்கு வந்துஒற்றுமையாகச் செயல்பட முடியுமானுல் தமிழ்மக்களின் தேவைகளையும், உரிமைகளையும் பொறுத்த விஷயங்களில் இந்த இரு கட்சிகளும் ஏன் ஓர் உடன்பாட்டுக்கு வந்து ஒற்றுமையாகச் செயல்படமுடியாது?

## 2,000 ஆங்கில உதவி ஆசிரியர் நியமனம்

### மே மாதத்தில் கிடைக்கும்

(கொழும்பு நிருபர்)

பாடசாலைகளில் ஆங்கிலம் நல்ல முறையில் பயிற்றுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இரண்டாயிரம் ஆங்கில உதவி ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

இவ்வருடம் மே மாதம் இவ் ஆங்கில உதவி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். கல்வி இலாகாவிலிருந்து கிடைத்த தகவல்கள இதனைத் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் நடந்த பரீட்சையைக்கொண்டு இவ் உதவி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கத்திரிக் குறளி

புரக்டர் வீட்டில் புடவைகள்
—செய்தித்தலைப்பு

வழக்கறிஞர் வீட்டுக்கு முன்னால் நீண்டு சென்ற ஒரு கியூவரிசையைப் பற்றிய செய்தியாகத்தானிருக்கும். சரிதான் விட்டுத்தள்ளு!

0 0

தபாலில் தந்தி
—செய்தி

'அதாவது தபால்மூலம் தந்தி பேச மூன்று மாதங்களில் கற்றுக்கொள்ளுங்கள்!' விளம்பரம்தானே, அல்லது தந்திகளைத் தபாலிலும் அனுப்பலாம் என்பதாக அறியத்தரும் தபால் பகுதியாரின் புதிய சுற்றறிக்கையாகவுமிருக்கும்.

0

ஒருவர் தோள் மேல் ஒருவராக ஏறி உயர்ந்த மதிற்சுவரைத் தாண்டி சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடினர்.
—புதினச்செய்தி

தப்பி ஓடியவர்கள் தலைமறைவாக இருப்பதற்கு அதற்குமேல் என்னென்ன தீரசாகசச் செயல்கள் புரியவேண்டுமென்பதைக் கற்றுக்கொள்வதற்கு நேரே ஒரு சினிமாக் கொட்டகைக்குள்தான் நுழைந்திருப்பார்கள்.

0 0

பெறுமதி வாய்ந்த இரத்தினக் கற்கள் அடங்கிய சிமிழை உடலில் மறைவாக ஒழித்துவைத்து இந்தியாவுக்குக் கொண்டு செல்ல முயற்சித்ததாக விமானநிலையச் சுங்கப்பகுதியினரால் சந்தேகிக்கப்பட்ட இளம்பெண் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்செல்லப்பட்டு 'எக்ஸ்றே' படப்பிடிப்பு பரிசோதனைக்குள்ளானார்.
-தினசரிச்செய்தி

அந்தப்பெண் இரத்தினக் கல் குப்பிகளை வாய்க்குள்ளே வைத்திருக்கும் பட்சத்தில் ...அவள் வாய்திறந்து பேசும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் இரத்தினக் கற்களாகச் சிதறுமே, அம்மொழி தமிழ்மொழி அல்லாது வேறு எம்மொழியாயிருக்கும். அப்பெண்ணினல்லாள் தமிழச்சியாகவன்றி வேறு யாராக இருக்கமுடியும் என்கிறார், ஒரு தமிழ்ப்பித்தர்.

0 0

மலிவான பாடப்புத்தக விளக்க உரைகளை (நோட்ஸ்) வாங்கிப் படிக்காமல் தடுககும் பொருட்டும் மாணவர்கள் நன்றாகப் படிக்கவேண்டுமென்பதனாலும் பரீட்சைகளின்போது மாணவர்கள் பாடப்புத்தகங்களைப் பார்த்து எழுதுவதை அனுமதிக்கும் ஒரு புதுச் சட்டத்தை பஞ்சாப் அரசு கொண்டு வருகிறது.
—இந்தியச் செய்தி

பாடப்புத்தகங்களை அதன் முதல்தாளிலிருந்து கடைசித்தாள்வரை பார்த்து வைத்துக்கொள்ள மாணவர்கள் இனிமேல் உஷாராகவிருப்பார்கள்.

0 0


பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகள் பெற்று மாகாணம் முழுவதிலும் முதலாவதாகச் சித்தி பெறும் மாணவனுக்கு ஆயிரம் ரூபாவும் இரண்டாவது சன்மானமாக ஐநூறு ரூபாவும் ஆண்டுதோறும் வழங்கி வருகிறோம்.
—ஒரு சென்னைத்தினசரி

'சேசே இனிமேல் இந்தப் பத்திரிகையை வாங்கிப் படிக்கக்கூடாது' — என்று முகத்தைச் சுளித்துக்கொள்கிறான், ஒரு பின்வரிசைமாணவன்.

0 0

திருக்கேதீஸ்வர தரிசனம்

# 'வண்டுபண்செய மாமலர் பொழிலிடை மஞ்ஞை நடமிடும்' கேதீச்சரம்



**கௌரி** அம்பாள் சமேத கேதீஸ்வர பெருமானை தரிசிக்க வேண்டுமென்ற ஆவல் வெகுகாலமாக இருந்தது. ஆனால் சமய சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. கேதீஸ்வரத்தின் மகிமையைப்பற்றி பலர் சொல்லியிருந்ததைக் கேள்விப்பட்டிருந்தேன். சிதம்பரத்திலுள்ள அம்பலத்தரசனுக்கு தூபமிட்டு கொண்டு செய்யும் ஒரு வயோதிப அடியார் எங்கள் இல்லத்துக்கு சென்றவருடம் வந்திருந்தார். அவர் சொல்லியதாவது தான் இந்தியாவிலுள்ள இருநூறுக்கு மேற்பட்ட சிவஸ்தலங்கள்யாவற்றையும் தரிசித்துவிட்டதாகவும் ஈழநாட்டிலுள்ள இருமையை அளித்தது. இந்த வருத்தத்தைபோக்க சென்ற தைப்பூசத்தினத்தன்று ஒரு வாய்ப்புக் கிட்டியது.

அன்று காலை ஆறு மணிக்கு காரில் யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு புறப்பட்டோம். சென்ற மாதம் பெய்த மழையின் காரணமாக பூநகரி பாதை சற்றுச் சீர்கெட்டிருந்தபோதிலும் காலை பத்து மணி வரையில் திருக்கேதீஸ்வரத்தை அடைந்தோம். இந்த யாத்திரையைத் தொடங்கியபோது எங்கள் யாவருக்கும் தேகசுகம் அவ்வளவு நன்றாக இருக்கவில்லை. முற்பனிக் காலமாதலால் யாவருக்கும் ஜலதோசம் பிடித்திருந்தது

### செல்வி மல்லிகா இரத்தினசபாபதி

சிவஸ்தலங்களே பாக்கி என்றும் இந்த தரிசனையை முடிப்பதற்காக பல கஷ்டங்களுக்கு உட்பட்டு ஈழநாட்டுக்கு வந்ததாக கூறினார். பாடல்பெற்ற சிவஸ்தலமாகிய திருக்கேதீஸ்வரத்தைப் பற்றி திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகங்களைப்பாடிக் காட்டிப் புகழ்ந்தார். அயல் நாட்டவர் இப்படி புகழ உள்நாட்டவர்களாகிய நாம் இந்த சிவஸ்தலத்தை இன்னும் தரிசிக்காமல் இருப்பது மிகவும் வருந்தக்கூடிய நிலைசெல்லும் வழியில் தாக்கின வெயிலின் உஷ்ணத்தால் திருக்கேதீஸ்வரம் போய்ச் சேர்ந்ததும் யாவரும் சோர்வுற்றிருந்தோம். ஆனால் பாலாவியில் நீராடி அப்புனிதக்கரையில் கோயில்கொண்டருளியிருக்கும் விக்னேஸ்சுவரரைத் தரிசித்தபோது எங்களைப் பீடித்திருந்த சோர்வு மறைந்தது தென்னிந்தியாவிலுள்ள பல தீர்த்தங்களிலும் நீராடியிருக்கிறேன். ஆனால் பாலாவி நீரிலுள்ள குளுமையும் தென்பூட்டும் தன்மையும் குற்றால அருவியில் நீராடினபோது கூட நான் அனுபவிக்கவில்லை. பாலாவியின் நீர் அதிகமும் தண்ணீர்கலக்கப்பட்டபசும்பால் போலிருந்தது. நீர் கூடஒரு விதமான ருசியைக் கொடுத்தது.

நீராடிவிட்டுப் புறப்பட்டதும் கேதீஸ்வரநாதனின் உச்சிக்கால பூசை ஆரம்பமாயிற்று. நாங்கள் கோவிலுக்குள் புகுந்த நேரத்தில் அங்கு ஒரு விசேட அபிஷே

(13-ம் பக்கம் பார்க்க]

தென் வியட்னும் தலைநகர் சைகோனில்

# கம்பீரமாய் நிற்கும் காளியம்மன் கோவில்

**இரண்டாவது உலகயுத்தத்தினால் வியட்னும் தலைநகரான சைகோன் அல்லோலகல்லோலப்பட்டுக்கொண்டிருந்தது. வானுயர்ந்த கட்டிடங்கள் எல்லாம் தரைமட்டமாகின. நூற்றுக்கணக்கான மக்கள் பலியானார்கள். ஆனால் மக்கள் செறிவுமிக்க அந்த நகரின் ஒரு புறத்தில் எதுவித சேதமும் இன்றி கம்பீரமாக நின்றிருந்த காளியம்மன்கோயில்கட்டிடம்தப்பியதுமட்டுமின்றி அங்கேபுகலிடம்தேடிஅம்பாளிடம் அடைக்கலம் புகுந்த ஆயிரக்கணக்கான மக்களும் அதிசயமாக உயிர் தப்பினார்கள்.**

—வி. ஆர். கே.

தென் வியட்னும் குடியரசின் தலைநகரானசைகோனில் தென்னிந்திய ஆலயங்கள் காணப்படுகின்றன. இந்த வனப்புமிகு பட்டினத்தில் காணப்படும் இத்தகைய மூன்று ஆலயங்களில் ஒன்று சிவவழிபாட்டுக்காக அமைந்தது. மற்றொன்று முருகன் வழிபாட்டுக்காக ஸ்தாபிக்கப்பட்டது, மூன்றுவது ஆலயம் துர்க்கையம்மன் என இந்தியர்கள் அழைக்கும் காளி அம்மன் வழிபாட்டின் பொருட்டு நிறுவப்பட்டது.

இவ்வாலயங்களின் மகத்துவமும் புகழும் வியட்னும் மக்களைப் பெரிதும் ஈர்த்துள்ளதன் காரணமாக அவர்கள் தங்கள் மதமாகிய பௌத்த வழிபாட்டில் காட்டும் அக்கறையிலும் பார்க்க சைவசமய வழிபாட்டில் கவனம் செலுத்தி இவ்வாலயங்களின் பக்தர்களாகவுள்ளனர்.

#### செட்டிமார் வருகை

இவ்வாறு வியட்னுமியர் இந்த ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதற்கு இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளே காரணம். 19-ம் நூற்றுண்டின் நடுப்பகுதியிலேயே முதன் முதலாக வியட்னுமில் இந்தியர்கள் சென்று குடியேறினர் எனக் கூறப்படுகிறது. இதற்கு முன்னர் மலாயா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பெரும் பணத்தை முதலீடு செய்து வியாபாரத்தை ஆரம்பித்த தென் இந்திய நாட்டு கோட்டைச் செட்டிமார்கள் தென் வியட்னுமுக்கும் தமது வியாபார நோக்கமாகச் சென்று குடியேறினர்.

முதலில் சென்ற செட்டிமார்கள் ஈட்டிய லாபத்தைக் கண்ணுற்ற மற்ற செட்டிமார்களிற் பலர் இவர்களைப் பின்பற்றி இந்தியாவிலிருந்து வியட்னுமுக்குப் பொருளீட்டு முகமாகச் சென்று தங்கினர். இவ்வாறு சென்றவர்களில் சிலர் ஒரு காலத்தில் சைகோனிலும் மற்றும் வியட்னுமிய நகரங்களிலும் 5000க்குமேற்பட்ட செட்டிமார்கள் குடியேறி வசித்துவந்தனர் என வரலாறு வாயிலாக அறியக்கூடியதாகவிருக்கிறது.

#### தாய்நாட்டுச் சூழல்

தாய்நாடாகிய தென் இந்தியாவில் காணப்படுவது போன்று இங்குள்ள செழிப்புமிகு நெல் வயல்களும், பல இனக் கனிமரங்களும் இவற்றிற்கும்மேலாக வியட்னுமியர்களின் விருந்தோம்பும் மனப்பான்மையும் சேர்ந்து இந்த நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களுக்கு தம்நாட்டின் சூழ்நிலையையுருவாக்கிக்கொடுக்கவே அவர்கள் இந்த அந்நியநாட்டில் மகிழ்ச்சியோடு சொந்த நாட்டில் வாழ்வதுபோல வாழ வசதியாகயிருந்தது ஆனால் இவ்வாறு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்த செட்டிமார்களுக்கு குறைபாடும் இருக்கத்தான்செய்தது. மிகுந்த சமயப்பற்றுள்ளவர்களான இவர்கள் தென் இந்திய முறைப்படி தாங்கள் வழிபடவும் பூஜைசெய்யவும் இங்கு ஓர் ஆலயமில்லையே என்பதை உணர்ந்து கவலைகொண்டனர்.

#### முதல் ஆலயம்

பெருஞ்செல்வந்தர்களான இவர்களுக்குதங்கள்கோயில் இல்லாக்குறையைப் போக்குவது கஷ்டமாகவிருக்கவில்லை, தங்களுக்கோர் ஆலயம் அமைக்கத் தீர்மானித்த இவர்கள் 1865ம் ஆண்டளவில் தென்வியட்னும் தலைநகரான சைகோனின் மத்தியில் முதலாவது தென் இந்திய ஆலயம் ஒன்றை நிறுவினர். சிவவழிபாட்டில் அதிகம் ஈடுபாடுடையவர்களான இச்செட்டிமார் இதில் சிவனைப் பிரதிஷ்டைசெய்து சிவாலயமாக்கினர்.

இச்சிவாலயத்தைத் தொடர்ந்து இத் தலைநகரிலேயே மேலும் முருகக் கடவுளுக்கொரு ஆலயமும், காளியம்மனுக்கொரு ஆலயமும் இவர்களால் அமைக்கப்பட்டன.

இந்தச்சைவாலயங்களை நிறுவுவதோடு செட்டிமார்கள் நின்றுவிடவில்லை. இவ்வாலயங்களை சிறந்தமுறையில்வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். மேலும் சிவராத்திரி, கார்த்திகை, தஸராபோன்ற பல திருவிழாக்களையும் அவ்

[13ம் பக்கம் பார்க்க]

கொல்லங்கலட்டி அம்பனை சந்தியில் திரு. செல்வநாயகம் 'அமரர் வன்னியசிங்கம் வீதி' பெயர் சூட்டும் வைபவத்தில் பேசுகையில் ''தமிழினமும் நாடும் அவரால் பெருமை பெற்றன'' என்றார்.
-செய்தி

'அம்ப+நஹி' என்ற சிங்களச் சொல்தான் நாளடைவில் மருவி அம்பனை ஆகிவிட்டது என்று ஊர்ப் பெயர் ஆராய்ச்சிகூட இவ்விழாவில் நடைபெற்றிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுந்துளிர்

சென்றவாரம் இப் பகுதியில் கௌரவ பிரேம தாசா இருக்கவேண்டிய இடத்தில் கௌரவ சுகததாசா இடம் பெற்று விட்டமையை குறித்து...

மன்னிக்கவேண்டும் நேயர்களே, மகாகவி காளிதாசனின் சாகுந்தல காவிய சுலோகம் ஒன்றை இவ்வாரம் நேயர்களுக்கு அளித்து அவர்களுடனே கூடிச்சுவைத்து மகிழவேண்டுமென்று எண்ணியவனாக கையில் பேனவை எடுத்தால் கை சென்ற வாரத்துக்கு எதையோ கிண்டிக்கிளற நீண்டு விட்டது.

கொழும்பிலுள்ள பீகிங் தூதராலயத்தில் சீனத்து யுவர்கள் சிலருக்கு சிலகாலம் தமிழ் கற்றுக்கொடுத்த புலவர் பார்வதிநாத சிவத்தைத்தற்செயலாகச் சந்தித்தேன். இப்போது அவர் யாழ்ப்பாணத்தில் தான் எங்கேயோ படிப்பிக்கிருராம்.

''உங்களிடம் தமிழ் கற்ற சீனத்துக்கிளிகளின் வாயில் தமிழ் அழகாகக் கொஞ்சியதா'' என்று புலவர் மகன் புலவரைக்கேட்டேன்:

'சிறிது காலத்திற்குள்ளாக அவர்களில் பலர் ஆசையோடு படித்து எஸ். எஸ். ஸி. தரத்தையே திறமையாக எட்டிப்பிடித்து விட்டார்களாம். புலவர் சிவம் இன்னுமொருவிஷயமும் சொன்ஞர். இலக்கியத் தமிழாக விருந்தால் எந்தத் தமிழ் நூலையும் தங்கு தடையின்றி வாசிக்கும் ஆற்றல் பெற்றுவிட்ட இவர்கள் பேச்சு வழக்கும் கொச்சைத தமிழுமாயிருந்தால் நாபுரள மாட்டாமல் கொஞ்சத் தொடங்கி விடுகின்ருர்களாம்.

''சீனத்துக்கிளிகள் அல்லவா, அதனுல்தான் அப்படி'' என்றேன். புலவர் சிரித்தார்.

பார்வதி நாதசிவத்தின் தந்தையார் மகாலிங்க சிவம் தமிழுலகம் கொண்டாடிய தமிழ்புலமை படைத்தவர்

மங்கையிவள்செலும்
வழியில் நறுந்தருக்கள்
நிழல் செய்து மலிக;
மற்றும்
பொங்குமணல தாமரையின்
பொலந்தாது
போற் பொலிக;
புனித வாவி
எங்கு மலர்ந்திலங்கிடுக;
மந்தமா
ருதம் வீச இனியதோகை
யுங்குயிலுந் துணையாக
அறு தொடர்க்கண்
உகரம் போல் உறுகதூரம்

இந்தச் செய்யுள் ஒன்றே காளிதாசனின் சகுந்தலை காவியத்தைப்போல நெஞ்சத்தில் என்றைக்கும் நினைவிருக்கத் தக்கது.

விநாயகரின் அழைப்பு. அங்கு கோவில் கும்பாபிஷேக மஹோற்சவத்தில் வாசித்துவிட்டு அதன்பின் மலேஷியா நாடுகளுக்கும் சென்று கச்சேரிகள் செய்து தேமதுரக்குழலோசையின் புகழை உலகெலாம் பரப்பத் திட்டமிட்டிருக்கிருராம். எப்படியும் சித்திரை மாதம் அளவெட்டிக் கும்பளாவளைப் பிள்ளையார் கொடியேற்றத்துக்கு முன்பாக ஊர்திநம்பிவிடுவார்.

டில் இவர்களில் சில பேருக்கு ஒரு 'சான்ஸ்' கொடுத்துப்பார்த்தாலென்ன என்று ஒரு யோசனை சமர்ப்பிக்கிருர் கலை அரங்கத்து 'மேகலா.'

0 0 0

## தமிழ்த் தெய்வம்

''சமயகோடிகளெல்லாம் தன் தெய்வம் என் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றதெது?'' என்பது தாயுமானவர் அருள் வாக்கு.

எந்தத் தெய்வத்தைக் குறித்து அவ்விதம் சமயங்கள் என் தெய்வம் தன் தெய்வம் என்று போட்டியிட்டன என்பதைப்பற்றிப் பலகாலமாக ஓர் ஐயம் இருந்துவந்ததென்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் திருவிழாவைப் பார்த்த பிற்பாடு அது தமிழ்த் தெய்வமாகத்தானிருக்க வேண்டும் என்று எண்ணிய தாயும் அமரர் 'கல்கி' அவர்கள் ஒரு சமயம் (1951) கொழும்புத் தமிழ்ச் சங்க அன்பர்களுக்கு அனுப்பிவைத்த ஒரு செய்தியில் குறிப்பிட்டிருந்தார்

தாயுமானரின்கூற்று தமிழ் தெய்வத்துக்கு எப்படிப் பொருத்தமாக அமைகிற தென்பதையும் அவர் விளக்கியிருந்தார்

''சமணர்களும் பௌத்தர்களும் சைவர்களும் வைணவர்களும் சாக்தர்களும் அத்வைதிகளும் பழைய காலத்தில் தமிழ்த் தாயை தங்கள் தெய்வம் என்று போற்றித் தொண்டு புரிந்திருக்கிருர்கள். நம்முடைய காலத்தில் இஸ்லாமியரும் கிறிஸ்து மதத்தவரும் தமிழுக்குச் சிறந்த பணி ஆற்றியிருக்கிருர்கள் ஏன், தெய்வமே இல்லை என்ற மதத்தவரும் கூடத் தமிழ்த் தெய்வம் தங்களுக்கும் சம்மதம் என்று போட்டியிட முன்வருகிருர்கள் வேறு எந்த மொழியும் இவ்விதம் தெய்வத்தன்மை பெற்று எல்லா மதத்தாருடைய போற்றுதலையும் பெற்றதாகத் தெரியவில்லை-''

'கல்கி' யார், இவ்வாறு அந்த செய்தியில் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

## அறியாமை

தனக்கு எல்லாம் தெரியும் என்றநினைப்பில் இருப்பது சிலபெண்களின் வழக்கம். இந்த எண்ணத்தால் நல்ல நூல்களைக் கற்பதில்லை. வீணே வம்பளந்து ஓய்வு நேரத்தை வீணடிக்கிருர்கள். இது அவர்களின் அறியாமையேயாகும்.

ஓய்வு நேரத்தில் கொஞ்சமாவது படிக்க வேண்டும். நல்ல நூல்களையும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் படித்து அதன்மூலம் பிள்ளைகள் முன்னேற, கணவன் புகழுடைய உதவவேண்டும். எழுத்தாளர் மனைவி, கணவருக்கு உற்சாகமூட்டவேண்டும். ஓவியன் மனைவி ரசிகத்தன்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும், பாடகன்மனைவி 'பக்கத்தாளம்' போடவேண்டும் என்று சொல்லவில்லை. 'ஆகா'வாவது போடவேண்டும். மருத்துவ அறிவு குடும்பப்பெண்ணுக்குத் தேவை. பிறரிடம் பேசவும் விருந்தினரை உபசரிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். எல்லாம் தெரியும்என்னும் அகம்பாவத்தை விட்டு இல்லத்தரசிகள் இந் நற்பயன்களையடைய ஓய்வு நேரத்தில் தினமும் பயனடையத்தக்க வகையில் படிக்கவேண்டும்.

# இவ்வாரம் உங்கள் ராசிபலன்

ஜோதிஷ மணி மேல் கரவை
— காவ. சிவப்பிரகாசன் —

**மேடம்:** செல்வாக்கிற்குக் குறைவில்லை. கொடையாளி சினேகம் கிட்டும். குடும்ப சந்தோஷம் கிட்டும். எதிராளி சூழ்ச்சி, பெண்கள் வகைகளிப்பு, செலவினம் அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராதவகையில் பிரயாணம், வயிற்று நோவு உள்எரிவு நோய்கள் தோன்றும். நீரினல் விபத்து நேரலாம். பணநிலை கடைக்கூறில் சீர்பெறும். சோதிடவழி உதவி கிட்டும். தொழில் படிப்புமுன்னேற்றம்உண்டு.

**மிதுனம்:** உத்தியோவகை கஷ்டங்கள் கிழமை நடுப்பகுதியில் நீங்கும். பிறரை ஏமாற்றும்வகைஉண்டு. ஆயினும் பிறரால் ஏமாற்றப்படுவீர். குருவின் கிரணம் பாதுகாப்பளிக்கின்றது. வியாபாரப் பெருக்கம் உண்டு. தேவையற்ற செலவீனம் அதிகரிக்கும். பிரயாணங்கள் களவு, விபத்து ஆகியவற்றிற்கு இடமளிக்கும்.

**கடகம்:** அனுபவிக்கப் போகும் இன்பசூழ்நிலைவாரமுடிவில் ஏமாற்றமாய்முடிவு பெறும். செல்வத்தை பெரிதெனப்பேணி சினேகிதத்தைச் சிதறடிக்காதே. பெண்வழி உதவி உண்டு. யாத்திரை போகப்பலன் உண்டு. தீயினல் பயம் உண்டு. கஷ்டசூழ்நிலை தான்.

**சிங்கம்:** மாதரால் வியாதி உண்டு. வாய்ப்புண் தலைக்கிறுதிநோய்காணும் புண்ணிய ஸ்தலங்கள் சென்று இறைவழிபாடு புரிய பலன் உண்டு. ஆட்சியாளரால் துன்புறுத்தப்படுவீர். பொருள்சேதமுண்டு ஆயினும் சொத்துசேரும். குடும்பத்தில் சந்தோஷம் உண்டு.

**கன்னி:** பணக்கஷ்டம் நீங்கும், சிறு பிணக்குகள் பிறதேசவாழ்வுக்கும்வகைசெய்யும். குடும்பத்தொல்லை ஓரளவு உண்டு. வாகனவகை லாபம் கிட்டும். புத்திர பெருக்கமுண்டு. தொழில் பலிதமுண்டு. கிழமை முற்கூறில் பிரயாணம் தவிர்க்கவும்.

**துலாம்:** பணக்கஷ்டம் உண்டு விஷநீர்பீடைதோன்றும். பிதாவழி இறப்பு நிகழும். பணமுடக்கம் ஏற்படக்கூடிய சூழ்நிலை மாணவர் படிப்பில் முன்னேற்றம் காண்பர். மனஅமைதிகிட்டும். ரோகபயமுண்டு.

**விருச்சிகம்:-** எதிர்பாராத வகையில் பணப்பேறு கிட்டும். பலரும் உம்மை நாடுவர். மதிப்பு உண்டு. வாகன லாபம். சிறு மனச்சஞ்சலம். பங்குவகை முதலீடு செய்யலாம். உல்லாசப்பிரயாணம் நிகழும்.

**தனு:-** வாழ்க்கையில் விறுவிறுப்பான காலம். பணக்கஷ்டம் பூரணமாக நீங்கி விடுகிறது. வழக்குவகை ஈடுபாடு காண்பினும் வெற்றி உண்டு. குறுகிய காலத்தில் தொழில்பேறு கிட்டுகிறது ஆடம்பரவகை செலவினத்தைக் குறைக்கவும்.

**மகரம்-** பிறரால் ஏமாற்றப்படுவீர். கள்வரால், தீயால் பாதிப்புறும் நிலையுண்டு. குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி. வாகனவகை முதலீடு தீமை பயக்கும். இல்லாள் நோய்வாய்ப்படும் ஏதுக்கள் தென்படுகின்றன. திடீர்ப் பிரயாணம் நிகழ இடமுண்டு.

**கும்பம்:-** மனச்சஞ்சலம் ஓரளவு நீங்கியபோதிலும் வாழ்க்கையில் பாதிப்புநிலை குறைவுபடுவதாயில்லை உடலில் உஷ்ணம் சம்பந்தமான நோய்கள் உண்டு. அரச மரியாதை கிட்டும். படிப்பில் முன்னேற்றமுண்டாகும்.

**மீனம்-** பணவரவு குறைவுபடுகின்றது. வீடு அமைக்கக்கூடிய நிலை உருவாகும். சோதரர் நேசம் நல்வாழ்வுக்கு வழி கோலும். தொழில் முன்னேற்றம் உண்டு. கால் வீக்கம், உஷ்ண ரோகம் தென்படும். ஆடம்பர வாழ்வில் முற்படுவர்.

## முக்கிய குறிப்பு

பெப்ரவரி

21 ( — ) பூரணை விரதம்

22 (1944) அன்னை கஸ்தூரிபாய் மறைவு

25 (1857) சாரண இயக்க ஸ்தாபகர் ரொபட் பேடன் பவர் பிரபு தோற்றம்.

# தெய்வத்தமிழ்மொழி பயிலும் சீனத்துக்கிளிகள்

ஆச்சிரமத்திலிருந்து கணவன் வீட்டுக்குச் செல்ல விடைவேண்டி நின்ற சகுந்தலையைக் கண்ணுவர் ஆசீர்வதித்து வழியனுப்புகின்ற சந்தர்ப்பம். சாகுந்தல நாடகத்தில் மிகப்பிரசித்தியான காளிதாசமகாகவியின்காவிய ரசம் ஒழுகி வழியுமிடம்.

கணவன் பிரிவினல் நீண்டு நடக்கிற வழியைச் சகுந்தலைக்குச் சோர்வு பிறவா பிரகாரம் கண்ணுவர் மூலம் அழகு செய்தமைக்கின்ருன் காளிதாச மகாகவி.

''காளிதாசன் வழி அழகு செய்யும்போது அஃது எத்தனை நீண்ட வழியும் அளபெடையாதே என்று சங்கநாதம் செய்கின்றது மகாலிங்கசிவத்தின் குற்றியலுகரக் கற்பனை'' என்று இச் செய்யுளின் நயம் புகழ்ந்து கூறுவார் பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை.

காளிதாசன் பாடியசுலோகத்தின் நேரடி மொழி பெயர்ப்பாக மறைமலை அடிகள் சுவாமி வேதாசலமும், மகாவித்துவான் ரா. இராகவையங்காரும் இயற்றிய இரு செய்யுள்களையும் மகாலிங்க சிவம் மொழிபெயராமலியற்றிய செய்யுளையும் பண்டித மணி எடுத்துக்காட்டி அவற்றை முதனூற் சுலோகத்துடன் ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமை காண்பித்து நம்மை ரசனையில் ஆழ்த்தும் போது... கவிதையை மொழி பெயர்ப்பதென்ற சங்கதி பொம்மைக்கூத்து இராசா இராணி ஜோடிப்புத்தான் என்று யாரோ கூறியது நினைவுக்கு வருகின்றது.

இச்செய்யுள் சாகுந்தலத்தில் அசரீரி வாக்காக எழும் சுலோகம். இங்கு, ஆசிரமத் தந்தையாகிய கண்ணுவர் மேல்வைத்துச் சொல்லப்பட்டது.

'தாமரையின் பச்சைகளுடைய குளங்களால் இரம்மியமான நடுப்பாகத்தையுடையதும், நிழல் மரங்களாய் அடக்கப்பட்ட சூரியனுடைய கிரணவெப்பத்தையுடையதும். தாமரையின் தாதுக்களால் மிருதுவான புழுதியை உடையதுமாய சகுந்தலை செல்லும் வழி, சாந்தமாயும் அநுகூலமாயும் உள்ள காற்றையும் மங்களத்தையும் உடையதாகுக'—என்பது செய்யுளின் பொருள்.

## தேமதுரக் குழலோசை

நாதசுரவித்துவான் அளவெட்டி பத்மநாதன் தூரக் கடல் தாண்டி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் அப்பால் சிங்கப்பூரில் கான மழை பொழியச் சென்றிருக்கிருர். சிங்கப்பூர் சண்முக

பத்மநாதன் வாசிக்காவிட்டால் அளவெட்டி விநாயகருக்கும் திருவிழா கலகலப்படைந்தமாதிரியே இருக்காது. பத்மநாதனுடன் கூட அவருடனே இரண்டாம் நாதசுரமாக இணைந்து வாசிக்கும் செகதீசனும் போயிருக்கிருர்.

## மணிப்புறவம்

பத்மஸ்ரீ... மன்னிக்கவும். இந்திய பூமியின் மேலாகப் பறந்துபோய்க்கொண்டிருப்பதுபோல ஒரு தடுமாற்றம்- பத்மநாதன் நாதசுரம் வாசிப்பதுபற்றி 1957 ல் 'ஈழகேசரி' பத்திரிகையில் ஈழத்து இசையாளர் என்ற தலைப்பில் ''யாழ்தேவி'' எழுதியபோது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:-

''...திருநாவுக்கரசுவின் வாசிப்பு கேட்பவர்களை இருந்த இடத்தில் அப்படியே சொக்கவைத்துவிடக் கூடியதென்றல் அளவெட்டி பத்மநாதனின் வாசிப்பு கேட்பவர்களை நிலை குலைத்துத் தன்வசப்படுத்தி ஈர்க்கும் கவர்ச்சி பெற்றது. பருவப் பெண்ணின் கண்களுக்குள்ள குறுகுறுப்பும் தீட்சண்யமும் பத்மநாதனின் கானம். எங்கேயாவது கோவில் திருவிழா நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அப்பொழுது நல்ல நிலாக் காலமாகவுமிருந்துவிட்டால் திறந்த வெளி மைதானமாக ஓரிடத்தில் அமர்ந்து ஆகாயத்தில் பார்வையை ஓடவிட்டு பத்மநாதனின் குழலோசை காற்றில் மிதந்து வரக் கேட்கவேண்டும் அப்பொழுது, விண்வெளியில் பறந்து செல்வதுபோன்ற உணர்ச்சியே நமக்கு உண்டாகும். கண்சிமிட்டும் நட்சத்திரக் கன்னியருடனே குலவி மகிழ்ந்து நிலவு அமுதை அள்ளிப்பருகி மீண்டதுபோல ஒரு மனத்திருப்தி அவர் வாசிப்பைக் கேட்டபின் ஏற்படுகிறது. வயதில் இளமை, வாசிப்பில் இனிமை, சுபாவத்தில் பெருமையில்லாத இங்கிதம், கடின உழைப்பு ஆகியன பத்மநாதனுக்கு நன்மதிப்பைத் தேடிக்கொடுத்திருக்கின்றன.

இப்படியாகவெல்லாம் கடல் கடந்து புகழ் பரப்பும் யாழ்ப்பாணத்து நாதசுர, தவில் வித்துவான்களின் நாத மணிப்பிரவாகம் மேலும் உலகெங்கும் பரவி அதனல் ஈழம் பெருமைப்பட நமக்குப் புகழீட்டும் வகையில் அடுத்து பாரிஸில் இவ்வாண்டு நடைபெறப்போகும் மூன்ருவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# சொக்கட்டியின் மகன்

## நெல்லை க. பேரன்

அடுக்களைச் செத்தையோடு சாத்தி வைக்கப்பட்டிருந்த கறிப்பெட்டியில் வாசனை காற்றோடு கலந்து அந்தக் குடிசை எங்கிலும் பரவியது. சொக்கட்டிக்குத் தன் வீட்டுக் கறிப்பெட்டியும் தான் அரிசி, மிளகாய், இடித்துக்கொடுக்கும் பொன்னம்பலநயினார்வீட்டு முற்றத்திலுள்ள மல்லிகைச் செடியின் பூக்களும் ஒரேமாதிரித்தான் மணம் வீசின. அவளது அடுக்களையில் மண்ணெண்ணையைக்குடித்துக் கொண்டு கைவிளக்கு மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. இடையிடையே அதுவும் டுர்...டுக்... டுக்... டுக்... என்று துப்பிக் கொண்டிருந்தது. 'இதென்னத்துக்காக்கும் இந்த அநியாய விளக்குத் துப்புது. நேத்துத்தானே நெல்லியடிச் சந்தையில முப்பது சேத்துக்கு வாங்கினது பழஞ்சீலை கிழிச்சுத் திரி போட்டனான்.... துப்புதே... ஹூம் ஏழைகளெண்டால் அதுக்கும் ஒரு பகிடியாக்கும். என்னணை நல்லாக் குடிச்சுப்போட்டு வந்திருக்கிறாய்போலை. உனக்கு விடிஞ்சாப் பொழுதுபட்டால் சாராயத்திலை வாய் கொப்புளிக்காட்டி முகம் விடியாது. நானும் வாயை வயித்தைக்கட்டி நாலு நெத்தலி வித்துப் பொடியனைப் படிக்கவைச்சன்; பொன்னம்பல நயினார் பேசப்பேச யாழ்ப்பாணத்திலை என்னம்போரு தொழில்நுட்பக் கல்லூரிக்கு அனுப்பினன். ஏன் எங்கடை பொன்னம்பல நயினாற்றை பெட்டையும் அங்கைதானே படிக்குதாம்.

ஏனணை, நான் பாட்டிலை சொல்லுறனெண்டு காதிலை விழுத்தாயாம். பொடியன் கொழும்பாலை இண்டைக்கு இராவு வாறதெண்டெல்லோ இவன் நாகமுத்துவுக்குக் கடுதாசி போட்டவன். பக்கத்துவீட்டு நாகமுத்தன் காலமைதான் பொடியன் வாறதைப் பற்றி என்னட்டை சொன்னவன். நெல்லியடியிலை முதல் சோ படம் பாடி முடிஞ்சிருக்கு மணை. வசுவும் இம்மட்டுக்கு வந்து பொடியன் மாத்துமாத் தியேட்டரடியாலை நடந்து வருவான் நல்ல அமாவாசை இருட்டணை... கைவிளக்கைக் கொண்டுபோய்க் கூட்டியாவன்...' சொக்கட்டி பேசிக்கொண்டே இருந்தாள்.

அடுக்களையில் பொடியனுக்கென்று அன்று சந்தையில் விலைபடாத சுறுமீனையும் ஊறலையும் கொண்டு வந்திருந்தாள் எண்ணெய்ச் சட்டியில் இறாலைப் போட்டுப் புரட்டிப் புரட்டி எடுத்தாள். நன்றாகப் பொரிஞ்ச பிறகு கீழே கிடந்த தட்டினை எடுத்து அடுப்புப் புகட்டிலை கிடந்த பாதித் தேங்காயைத் துருவி, அதில் கொட்டி சுறுமீனையும் வதக்கி எடுத்து இரண்டையும் கலந்து சுண்டல் செய்தாள். ''பாவம் பொடியன்... என்னம்போரு கண்ட கடை வழியே கண்டதையும்திண்டு போட்டுக் கயிட்டப்பட்டு வாறப்போ ஆனதாயெண்டால் நான் நல்லா அவிச்சுப்பொரிச்சுக் குடுக்கவேண்டாமோ''—சொக்கட்டி தான் மேலும் பேசினாள். ''ஏனணை பேந்து பாரன் புரண்டு படுக்கிறதை. பொடியன் வாற சமயம் பாத்துக் குடிச்சுப்போட்டு வந்து அடுக்களைக்குள்ளை புரளுகிறாய்... போ... எழும்பு விளக்கைக் கொண்டுபோய் உச்சில் குளத்தடியிலைநிண்டு கூட்டியாவன்...'

வெறி மயக்கத்தில் அடுப்பருகே புரண்டு புரண்டு படுத்த நல்லான் இப்போது சற்றுக் கண் விழித்தான். சொக்கட்டியின் நமைச்சலை அவனால் பொறுக்க முடியவில்லை. நாளெல்லாம் மூட்டை சுமந்து மில்லில் வேலை செய்துவிட்டு வேலை செய்த உடல் அலுப்புத் தீர சாராயம் குடித்துவிட்டு மண்டிப்போய்க் கிடந்த அவனுக்குச் சொக்கட்டி வேலை ஏவியதும் பற்றிக் கொண்டு வந்தது. ''என்னடியாத்தை. சும்மாயிரன் புலம்புறாய்... புலம்பல்... ஏன்... என்ன கேக்குது...'' என்று எரிந்து விழுந்தான். 'என்னணை பொடியன் வாறானெண்டுறன். கோவிக்கிறாய்... போய்க் கூட்டியாவன்'' சொக்கட்டி சொன்னாள்.

'ஏன் அவனென்ன பால் குடிப் பபாவே? நெல்லியடிச் சந்தியிலை இருந்து வீட்டுக்கு வரத் தெரியாதோ அவனுக்கு. முந்தியெண்டால், ஒருதருக்குஞ் சொல்லாமல் இரண்டாஞ்சோ படம் பார்த்துப்போட்டு சாமம் சாமமா வருவான்... இப்ப கொழும்பிலை உத்தியோகம் எண்டாப்போலை புதிசாப் பாதையெல்லாம் மறந்துபோகுதோ? சும்மா படுக்க விடடியாத்தை...'

நல்லான் மீண்டும் மண்டி விட்டான்.

'இதென்ன நாசங்கட்டிப் போட்டுது. பொடியனிலை கொஞ்சமேனும் பாசமிருக்கோ. தச்சந்தோப்பு பிள்ளையார்தான் இதைக் கேட்க வேணும். கிராய்ப் பிள்ளையாரே இந்தப் பாவியின்ரை குடியை நீதான் மாத்த வேணும். 'சொக்கட்டி இறால பொரித்துக்கொண்டிருந்த கையை மேலே உயர்த்திப் பிள்ளையாரை வேண்டினாள். 'ஏனடியாத்தை மச்சக்கையாலை கடவுளைக் கும்பிடுகிறாய்... உன்னைத்தானே கோயிலகளிலே உள்ளட விடாயினமாம். எங்களைக் கிட்ட அண்டாத கடவுள்மாருக்கு நாங்கள் ஏன் காவடிதூக்க வேணும்?' நல்லான்தான் கேட்டான்.

'நீ போகாட்டில் இரணை. அவன் பொடியன் வரட்டும். பிறகு பேசுவம்...' சொக்கட்டி சுறாச் சுண்டலை அடுப்பிலிருந்து இறக்கி வைத்துவிட்டுச் சாணகத்தினால் மெழுகிக்கிடந்த தனது அடுக்களையை விளக்குமாற்றால் கூட்ட ஆரம்பித்தாள்.

'என்னடியாத்தை விளக்கு வைச்சுப்போட்டு இலச்சுமியை கூட்டித் தள்ளக்கூடாது எண்டு சொல்லுவாய்... பொடியன் வாறதெண்டாப்போலை - ஆசாரமெல்லாம் மறந்துபோனாய் போலை' -நல்லான் சால்வையை உதறிக்கொண்டு எழுந்தான். உச்சில் குளத்தடிக்குப்போய் முகத்தை அலம்புவதற்காக விடுவிடென்று நடந்தான். சொக்கட்டியின் இறால் பொரியல் மணம் அவனைத் தட்டியெழுப்பி விட்டது. உழைத்துக் கறுத்த அவனது உடல் அந்த அமாவாசை இருளில் கலந்தது

0 0 0

பொன்னம்பலத்தார் வீட்டில் இன்னும் பெற்றோமாக்ஸ் எரிந்து கொண்டுதான் இருந்தது சந்திரா அன்று நேரத்தோடேயாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து வந்திருந்தாள். அவளுடையகாதலன் குணகரன் அன்றிரவு கொழும்பிலிருந்து வரவிருப்பதும் அவன் தனதுவீட்டின் முன்பாகவுள்ள தெருவைக் கடந்துதான் தனது வீட்டிற்குச் செல்லவேண்டுமென்பதும் சந்திராவுக்குத்தெரியும். அவன்தான் தினமொரு கடிதம் அவளது கல்லூரிக்கு எழுதிக் கொண்டிருக்கிறானே...மீன் விற்கிற சொக்கட்டியுடைய மகன் தான் குணகரன் என்பது சந்திராவுக்கு நன்றாகத்தெரியும். ஊரிலேயே பெரிய மனிதர். கோவில் தர்மகர்த்தா. சங்கக்கடைத்தலைவர். பட்டினசபை அங்கத்தவர் என்றெல்லாம் பட்டங்கள் எடுத்துள்ள தனது தகப்பனார் பொன்னம்பலத்திற்குத் தானும்குணகரனும் காதலிக்கும் விபரம் தெரிந்தால் அப்புறம் என்ன நடக்கும் என்பதும் அவளுக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனாலும் என்ன செய்வது?

தொழில் நுட்பக் கல்லூரியில் இருவரும் ஒன்றாகப் படிக்கும்போது அவனுக்கு முன் வரிசையில்தான் சந்திராவும் இருந்தாள். மாணவர் மன்றத்தின் மதிப்புமிக்க தலைவன் அவன். தமிழிலே தாளாத பற்றுக் கொண்டவன், மாணவர்சஞ்சிகையிலே அவனது கருத்துமிக்க கட்டுரைகளையும் கூட்டத்திலே அடலேறுபோன்ற மிடுக்கான சொற்பொழிவுகளையும் கண்டு அவனது தமிழுணர்வுக்காகவே அவள் அவனைக்காதலித்தாள். அன்றொரு நாள்...மாணவர் இலக்கிய மன்றத்திலே ''கம்பனின் கவித்திறன்'' என்பது பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் இராமன் மிதிலையிலே சீதையைக் கண்ட காட்சியைவர்ணித்த குணகரன், ''அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்...'' என்ற அடிகளைக் கூறிவிட்டுக் கூட்டத்தில் அவளையே கூர்ந்து நோக்கிய போது அவளுக்கு உடலெல்லாம் வியர்த்தது. ஒரே புளகாங்கிதமாக இருந்தது அடேயப்பா, என்ன அலாரிப்பு... இப்படியாக பஸ்சிலேபோகவும்வரவும் அவன் அவளுக்கும் சேர்த்து டிக்கட் எடுக்கவும் அவள் அவனுக்கும் சேர்த்து எடுப்பதுமாக அவர்களது காதல் வளர்ந்து வந்தது. பத்திரிகைகளுக்கு அவன் எழுதுகிற சிறுகதைகளையெல்லாம் சந்திரா தான் முதலில் வாசித்து அவனுக்கு அபிப்பிராயம் தெரிவிப்பாள். உங்களுடைய முதலாவது இரசிகை நானதான் என்று பெருமையோடு கூறுவாள். அடேயப்பா...... நல்ல விசிறிதான்போ... என்று குணகரன் அவளைக் கேலி செய்வான்

இவைகளை நினைக்கும் போதெல்லாம்சந்திராவுக்கு உள்ளம் இனித்தது. இன்று

(12-ம் பக்கம் பார்க்க)

பத்தாவதாண்டுவிழா பாராட்டுக்கதை

சின்னஞ் சிறுகதை

# இலட்சிய வழி எது?

பின்னே திரும்பிப் பாராது அந்த மனிதன் முன்னேக்கி நடந்துகொண்டிருந்தான். அவனது சுவடுகளைப் பின்பற்றி சிறு கூட்டம் தொடர்ந்து வந்தது.

முன்னணியில் செல்பவனே அக்கூட்டத் தலைவன். அவர்கள் செல்லும் பாதையில் கிடந்த கடுமையான பாறுங்கற்கள், முட்கள் என்பன பாதங்களை உறுத்தின: இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. இடையிடையே மலைகள், ஆறுகள் என்பன குறுக்கிட்டன. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தொலைவிலெங்கோ உள்ள இலட்சியதம்பத்தை நோக்கிச் சென்றனர். முன்னணியில் உள்ள தலைவனின் கண்கள் வெகுதீட்சண்யமாகவிருந்தன. அவனது செவிகள் பின்புறத்து ஓசையைக் கவனிக்கவில்லை. உணர்ச்சிகள் முன்னேக்கியே செயற்பட்டன.

'போதும் இவ்வளவு தூரம்; இனிப்பொறுக்க முடியாது' என்றது ஒருகுரல். இன்னெருகுரல் ''இவனையா நம்பிவந்தோம் எத்தனை ஆயிரம் மைல்கள் இனியும் தொடர முடியாது'' என்றது. ''எங்களுக்கு விடிவே கிடையாதா?''-இப்படி ஆத்திரப்பட்டதுவேறொருகுரல். ஆனல் இவைகள் தலைவனுக்குக் கேட்கவேயில்லை.

''அடே இவன் எங்களை எங்கே கூட்டிச் செல்லுகிறான்? முடிவிலாத தூரம். இனிமேல் நாம் அடியெடுத்து வைக்க முடியாது இதற்கு என்ன செய்வது?'' ஒருவன் இப்படிச் சொல்ல மற்றொருவன் ,'இதற்கு முடிவு என்ன'' என்றான். ''முடிவு என்ன முடிவு! இந்தத் தலைவனை முடித்துவிடுவதுதான் என் முடிவு'' என்றான் வேறொருவன். அவ்வளவுதான் கூட்டத்திலுள்ள ஒருவன் தலைவனின் முதுகில் குத்தினன். முன்னேக்கி விழுந்தான். உடலிலே இருந்து குருதி ஆறாகப் பெருகி முன்னேக்கியே வழிந்தது. தலைவன் துடித்துக்கொண்டிருந்தான் அவனது ஆவி பிரியுந்தறுவாயிலிருந்தது.

பின்னே நின்றவருள் ஒருவன் ''அடே வழிகாட்டிவந்தவனை முடித்துவிட்டோம். பின்னேசெல்வதோ கஷ்டம். முன்னே செல்வது எப்படி என்றான்.

துடித்து ஆவி பிரியுந்தறுவாயிலிருந்த தலைவன் கண்களில் ஒளி பிறந்தது. முனகிக்கொண்டே ''நண்பர்களே! உங்களுக்குப் பாதை தெரியவில்லையா? இதோ என்னுடலிலிருந்து பாய்கின்ற குருதி செல்லும் திசைக்கே செல்லுங்கள்'' என்று கூறியபடி கண்களை மூடினன்.

அந்தக் குருதிச் சுவட்டிலே கூட்டந் தொடர்ந்தது.

— இ. நா

ஈழத்தின் பண்பை நாட்ட 'ஈழநாடு'
தமிழக தனத்தை ஈட்ட 'தம்பி அன் கோ'

நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 11 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 12 சத வீதம் |
| ரூ. 10,000/-க்கு மேல் | — | வருடம் 12 சத வீதம் |

மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

வட்டி ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படும்.

மறுவிபரங்கட்கு:

தம்பி அன் கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமத்துறை

— கங்காபுத்திரன் —

## நாக்கும் நாமும்:

மனிதனுக்குடைய நாக்கு அவனது வாழ்வுக்கு மிக அத்தியாவசியமானது. மனிதன் நாக்கினால் சுவைக்கிறான், நாக்கினாலேயே பேசிவருகிறான், நாக்கினாலே ஆக்கமான காரியத்தை சொல்லுகிறான், அந்த நாக்கினாலேதான் சில சமயம் அழிவையும் தேடுகிறான். இந்த நாவைப்பற்றி வள்ளுவர் பெருமான் ஆழமான கருத்துக்களை மக்கள் சமுகத்துக்கு வழங்கியிருக்கிறார்.

''யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு'', என்றும்

''தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.'' என்றும் கூறியுள்ள இந்தக் குறள்கள் காட்டுகின்ற கருத்து விளக்கம் இங்கு அவசியமற்றது. ஆனால் மேதாவியான வள்ளுவர் நாவை எவ்வளவு தூரத்துக்கு ஆராய்ச்சி பண்ணி அழகான அருமையான-தீர்க்கதரிசனம் மிகுந்த கருத்தில்சொல்லியிருக்கிறார் என்பதை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும் சாதாரண மனிதர்களைவிட இந்த நாக்கின் பண்பை நிலைநிறுத்த வேண்டியவர்கள் பாவலர் என்ற ஒரு கருத்தை அண்மையில் ஓர் அறிஞர் தெரிவித்திருக்கிறார். அவர் தனது கருத்தை அழுத்திச் சொல்லும்போது உயிருடன் ஒன்றியிருக்கும் நாக்கை ஒழுக்கத்துடன் ஒன்றச் செய்யவேண்டும் என்றார். வள்ளுவர் நாவில் நின்று பிறந்தவை எத்தனையோ நூற்றாண்டுகள் கடந்தும் வாழ்கின்றன. அவர் பிறந்த எல்லைகளைத் தப்பி அப்பாலும் சென்றுள்ளன. வள்ளுவரின் நாவின் மணிகள். வள்ளுவப் பெருமானுக்கு செந்நாப்போதார் என்ற பெயருமுண்டு.

எனவே வள்ளுவரின் வழியில் நமது நாவையும் வைத்துக்கொண்டால் நமக்கும் நன்மை பிறக்கும். நமது நாவிற் பிறந்தவையும் நாளை நிலைக்கும்.

## சுவையிற் பலவகை

இங்கிலாந்தை ஆட்சி செய்த விக்டோரியா மகாராணி ஒரு பூனையை ஆசையாக வளர்த்துவந்தார். அந்தப் பூனையை மிகவும் அன்புடன் பாதுகாத்துவந்தார். அரண்மனையில் எத்தனையோ பொருட்கள் இருந்தும், அவரது எண்ணத்தில் முக்கிய இடம்பெற்றதாக அந்தப் பூனையிருந்தது.

ஒருதினம் விக்டோரியா மகாராணியாரைப் பார்ப்பதற்கு வெளிநாட்டுத் தூதுவர் ஒருவர் வந்தார். மகாராணியாருக்குஅத்தூதுவர் காணிக்கையாகப் பல பொருட்களை வழங்கினார். அந்தப் பொருட்களைப்பெற்றுக்கொண்ட மகாராணி அவற்றிற்குப் பிரதியாக தான் அருமையாகவளர்த்து வந்த பூனைக்குட்டியை வெளிநாட்டுத்தூதுவருக்குக் கொடுத்தார்.

சிலகாலம் கழிந்தது. அத்தூதுவர் மகாராணியாரை மீண்டும் சந்தித்தார். அப்போது மகாராணியார் தூதுவரிடம் என்னுடைய பூனைக்குட்டி எப்படி? என்றொரு கேள்வியைக் கேட்டார். தூதுவர் 'அதன் மாமிசம் மிகச்சுவையாக விருந்தது'' என்றார். இந்தச்சம்பவத்தையொட்டி நாம் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை, ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு சுவையுண்டு அவர்கள் பயிற்றப்படுகின்ற தன்மையிலேயே சுவையும்வேறுபாடு அடைகின்றது.

## ''மலையே வரினும் தலையே சும...''

''அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை, அச்சமில்லை
அச்சமென்பதில்லையே...''

அமரகவி பாரதி அச்சமின்றி மனிதசமூகம் வாழ வேண்டுமென்பதற்காக மேற்குறிப்பிட்ட மணிக்கவிதையை உணர்ச்சியினுள்ளே புகுத்தி இவ்வாறு வடித்திருக்கிறார். கவிதைத்துறை கைவந்த வல்லாளரான பாரதி அச்சத்தைப்பற்றி வசனத்தில் குறிப்பிட்ட ஓர் உருவகக் கதையின் சாரத்தை இங்கு சொல்லுகின்றேன்:

ஒரு தேசத்திலே கொடிய கோதாரிநோயைஉண்டாக்க கோதாரி நோய்க்கு அடிப்படையான பூதம் புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்தது. அதை÷கண்ட முனிவர் ஒருவர் ''பூதமே நீ குறிப்பிட்ட இடத்துக்குச் செல்க, ஆனால் அங்கு ஆயிரம்மக்களுக்கு மேல் ஒருவரையும் கொல்ல தே'' என்றார். பூதம் சம்மதித்துச் சென்றது. ஆனால் அந்தத்தேசத்தில் பதினாயிரம் மக்கள் வரை மாண்டனர். பூதம் தன் ஆணையை மீறிவிட்டதைக் கண்ட முனிவர் மிகவும் ஆத்திரத்துடன் பூதத்தின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு அது திரும்பிவரும் வழியில் நின்றார். பூதம் அங்கே வந்தது. முனிவர் கோபத்துடன் பூதத்தைப் பார்த்து ''பூதமே நான் சொன்ன சொல்லை நீ மீறிவிட்டாய் உன்னை ஆயிரம் பேரை மட்டுமே கொல்லச் சொன்னேன். நீபத்தாயிரம் பேரைக் கொன்றுவிட்டாய்'' என்றார். பூதம் அமைதியாக ''முனிவரேறே! தங்கள் ஆக்ஞைக்குட்பட்டு யான் ஆயிரம் பேருக்கு மட்டுமே நோயை உண்டாக்கினேன். ஆனால் மிகுதிஒன்பதினாயிரம்பேரும் நோயைக்கண்ட அச்சத்தினால் மடிந்துவிட்டனர்'' என்றது. முனிவர் இதற்குமேல் எதைச்சொல்லமுடியும்.

இன்றைய சமுதாயம் சரியான கொள்கைவழி நிற்பதற்கு தமது சொந்த வாழ்க்கையிற் குறுக்கிடுகின்ற பல் வேறுபட்ட பிரச்னைகளைக் கண்டு அச்சப்படுகின்றதை மறுக்கமுடியுமா? எமக்கு எதுதான் வந்தாலும் பரவாயில்லை. ''மலையே வரினும் தலையே சும'' என்ற கொள்கையை எமது உள்ளங்கள் கொள்ளுமானால் எவரும் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது.

# தொய்வு-ஒரு கர்ம வியாதி

## கட்டுப்படுத்த வழிகளுண்டு

மனிதனால் ஆக்கப்படும் எந்த யந்திரமாவதுதொடர்ந்து இரவு பகலாக ஐம்பது, அறுபது, தொண்ணூறு வருடங்கள் என்று தொழிற்பட முடியாது. அது இடையிடையே நின்றுவிடப்பார்க்கும், அதை அடிக்கடி கழுவி சுத்தம்பண்ணி எண்ணை போடவேண்டும். ஆனால் ஓயாமல் வருடக்கணக்காக ஓடிக்கொண்டிருக்கும் ஒரு யந்திரம் ஒவ்வொரு மனிதனுடைய உடம்பிலும் இருக்கிறது. அதுதான் சுவாசப்பை அல்லது நுரையீரல்.

சாதாரணமாக, ஒரு நிமிடத்தில் 14 முதல் 18 தடவை வரை நாம் காற்றை சுவாசிக்கிறோம். ஓடும்போது அல்லது கடினமான வேலை செய்யும்போது இந்த விகிதம் கூடுகிறது. இப்படியே இருபத்து நான்கு மணி நேரமும், ஒரு நிமிடம் தவறாமல் ஒருவருடைய ஆயுட்காலம் முழுவதும் சுவாசப்பை ஓயாது உறங்காது வேலை செய்துகொண்டேயிருக்கிறது. ஆககூடியது ஆறு நிமிடங்களுக்குமேல் ஒருவர் சுவாசிக்காமல் இருக்க முடியாது. சுவாசம் நின்றுவிட்டால் உயிர் பிரிந்துவிடும்.

இப்படி அற்புதமான ஒரு யந்திரத்தை நாம் என்ன பாடுபடுத்துகிறோம் தெரியுமா? சராசரி ஆயுட்காலம் ஒன்றில் அதை ஐம்பது கோடி தடவை தொழிற்படுத்துகிறோம். கூனி, குறுகி, குனிந்து, வளைந்து அதை நசுக்கிப் பிணைகிறோம். தூசியையும் புகையையும் நச்சுக் காற்றையும் கிருமிகளையும் அதனுள் செலுத்துகிறோம். போதாக்குறைக்கு சிலர் புகையிலைப் புகையையும் புகையிலைத்தூளையும் அதற்குள் அடைகிறோம். நுரையீரலானது இவை எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு தன் கடமையைத் தவறாது செய்கிறது.

### நோய் உண்டாகும் விதம்

நுரையீரல் மிகவும் நுண்ணிதான தசைகளாலும் சவ்வுகளாலும் குழாய்களாலும் அமைக்கப் பெற்றது. மூக்குத்துவாரங்கள் வழியாக இழுக்கப்படும் காற்று சுவாசக் குழாய்மூலம் நுரையீரலை அடைந்து ரத்தத்தைச் சுத்தி செய்த பின்பு அழுக்குக் கலந்த காற்றாக வெளியேவருகிறது. காற்றிலுள்ள தூசி முதலிய அசுத்தங்கள் ரத்தத்தில் கலக்காதபடிக்கு மூக்கிலும் குழாயிலும் நுரையீரலிலும் லட்சக்கணக்கான சுத்திகரிப்புக் கருவிகள் இருக்கின்றன. பிராணவாயுவாக உள்ளே செல்லும் காற்று உடம்பில் ஓடிக்கொண்டிருக்கும் ரத்தத்தைச் சுத்தம்செய்துவிட்டு வெளியேவரும்போது கரியமிலவாயுவாக வருகிறது. காற்று உள்ளே இழுக்கப்படும்போது நுரையீரல் விரிந்தும், வெளியேற்றப்படும்போது சுருங்கியும் கொடுக்கிறது.

அசுத்தமான காற்று முற்றாக வெளியேற்றப்படாமல் சிறிய நுரையீரல் தசைகளுக்குள் தேங்கி நின்றுவிடும்போது, போதிய பிராணவாயு இல்லாமல் மூச்சுத்திணறுகிறது. மூச்சு இழுப்பதும் வெளியிடுவதும் கஷ்டமாகிறது. இதைத்தான் தொய்வு இழுப்பு என்று சொல்லுகிறோம் ஆகையால் முறையாக மூச்சு சுவாசிப்பதை பழகிக்கொள்ளாதவர்களுக்குத்தான் இந்த நோய் உண்டாகிறது என்று கூறலாம்.

### நோயின் காரணங்கள்

ஆஸ்மா எனப்படும் தொய்வு எவருக்கும் உண்டாகலாம், ஆனால் சிறுவயதிலேயே இது அதிகமாகத் தாக்கும். ஆரம்பத்திலேயே முறையான பிராணயமப் பயிற்சியும்தேகப்பயிற்சியும் செய்துகொண்டால் இது முற்றாமல் தடுத்துவிடலாம் வயது ஏறியபின தடுப்பது கடினம்.

தொய்வு பரம்பரையாகவும் வருவதுண்டு. பெற்றோர் அல்லது மிகவும் நெரு

— சுப்புடு —

ங்கிய உறவினர் மூலமும் இது தொடரலாம். ஹேய் ஃபீவர் என்று சொல்லப்படும் ஒருவித காய்ச்சலாலும் இது வரக்கூடும்.

சிலருக்கு சிலவித மணங்கள் அல்லது உணவுகள் ஒத்துக்கொள்ளாது இதை 'அலேர்ஜி' என்று ஆங்கிலத்தில் கூறுவது. இதனாலும் தொய்வு உண்டாகலாம் என்று தெரியவருகிறது.

மனத்தில் ஏற்படும் கோளாறுகளினாலும்ஆஸ்மா உண்டாகலாம் ஒருவனுக்கு பிடிக்காத சூழ்நிலை, வற்புறுத்தல்மீது செய்யப்படும் ஒரு செய்கை முதலியனவும் தொய்வுக்கு காரணமாகின்றன

### பரிகாரங்கள்

ஆஸ்மாவுக்கு உட்கொள்ளும் மருந்துகளும் ஊசிமருந்துகளும் கொடுக்கப்படுகின்றன. இவற்றால் அப்போதைக்குமட்டும் சிறிதளவு சுகம் உண்டாகிறது. சிறுவயதிலிருந்தே முறையான சுவாச அப்பியாசங்களைத் தொடர்ந்து தினந்தோறும் செய்துவருவதால் நோயின் கடுமையைத் தவிர்க்கலாம். வேறு சுகயீனம் காரணமாக இடையில் அப்பியாசங்களை நிறுத்தவேண்டி வந்துவிட்டால், உடம்பு குணமான பின்பு, மறுபடியும் உடனே தொடர்ந்து செய்யவேண்டும் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லா ஆஸ்பத்திரிகளிலும் திறமையான ஊசிமருந்துகள் இப்பொழுது இருக்கின்றன.

### பாதுகாப்புகள்

தொய்வு நோய்களுக்கு குளிர்காலம் சத்துரு. மலைப்பிரதேசங்களிலும் கடற்கரையை அண்டியஇடங்களிலும் வாழ்பவர்களை இது இலகுவில் தாக்கும். மழைக்காலங்களிலும் குளிர்ந்த சீதோஷ்ண நிலைமையிலும் சற்றே ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். வயிற்றில் அமிலம் சம்பந்தமான பொருட்கள் அதிகமானாலும் இழுப்புத் தொடங்கலாம். அத்தகைய உணவுகளைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. நோய்வாய்ப்பட்டவர்கள் இரவில் படுக்கைக்கு போகமுன் இரண்டு மூன்று மணிக்குமுன்பேசாப்பிட்டுவிடுவது உசிதம் எவ்வளவுக்கு வயிறு வெறுமையாயிருக்கிறதோ அவ்வளவு நல்லது;

ஆஸ்மாக்காரர் புகைப்பது நல்லது என்று சிலர் நினைப்பது பெரிய தவறு. அதற்கு நேர்மாறாக அதனால் பெரும்கெடுதி உண்டு. சுவாசப்பைக்குள் செலுத்தப்படும் புகை அதன் நுண்ணிய குழாய்களுக்குள் மடிந்து நின்று கூடிய இன்னல்தரும். சற்றே சூடான பதார்த்தங்களை உட்கொள்ளுதல் உடனுக்குடன் சுகத்தைக் கொடுக்கும். ஆயினும் தேநீர், கோப்பி போன்ற விறுவிறுப்பை உண்டாக்கும் குடிவகைகளை அடிக்கடி குடிக்கப்படாது.

விரைவில் 'ஈழநாடு' வாரமலரில்
வெளிவரவிருக்கிறது
''நானே கொலைகாரன்''
திடுக்கிடும் சம்பவங்களும், பல்சுவையும்
கொண்ட துப்பறியும் நாவல்.
இலங்கையை மையமாகக் கொண்ட
இந்த நாவலை சிலம்பன் தீட்டுகிறார்.
ஆரம்ப நாளை ஆவலுடன் எதிர்பாருங்கள்!

''லேடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபுவழியில் கலைவளர்த்த கலைஞர்!

## அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை

இரசிகன்

இலங்கையின் வடபால் அமைந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழையும் கலைகளையும் பேணி வளர்க்கின்றவர் நீண்ட காலமதாக வாழ்ந்து வருகின்றனர்கள்.

இனம், மதம் என்றவேலிகளைக் கடந்துநின்று தத்தமது ஆற்றலால் பல அறிஞர்கள் தமிழ்த்தொண்டு செய்துவருவதும், கலைத் தொண்டு புரிந்து வருவதும் புதுமையான சங்கதியல்ல. ஆனல் பெரும்பாலான கலைஞர்கள் தம்மதத்தின் பற்றினுலும், நம்பிக்கையினுலும், தமது இனத்தின் தொடர்பினுலும் புரிகின்ற கலைச் சேவையை பிறர் அறியமுடியாமலேபோய் விடுவதுமுண்டு. இங்கே பல கத்தோலிக்க அறிஞர்கள் பல காலமாகப் பைந்தமிழ்த் தொண்டு புரிந்து வருகின்றனர். அவர்களுள் குறிப்பிட்ட சிலரைமட்டுமே மற்றவர்கள் அறிந்துள்ளனர். ஆனல் கலைஞர்கள் பலர் ஒதுங்கியே இருக்கின்றனர் இதற்கு அடிப்படையாக அமைந்தது அவர்கள் வாழ்ந்த சூழ்நிலையும், அவர்கள் மேற்கொண்ட கலைகளின் அமைப்பும் தனியானவையாகவிடுந்தமையே.

யாம் இங்கு அறிமுகப்படுத்துகின்ற அண்ணவியார் அந்தோனிப்பிள்ளை மேற்குறிப்பிட்ட சூழ்நிலை காரணமாக வெளியுலகத் தொடர்பின்றியே வாழ்ந்துளளார்.

ஊர்காவற்றுறைக்குதென்பாலமைந்துள்ள கரம்பன் பகுதியிலே புறம்போக்காக அமைந்துள்ளது மெலிஞ்சிமுனையென்பது. இங்குவாழுகின்ற மக்கள் கடற்ருெழில் புரிபவர்கள். அத்தனைபேரும் கத்தோலிக்கர்கள். பிறசமூகத்தவருக்கு ஒதுங்கி, ஒரு பக்கத்திலே தாமும் சோலிகளும் என்று இவர்கள் காலத்தைக் கடத்தினுலும் தமக்கென்ற தனித்துவமான கலைப்பற்று மிக்கவர்கள். இவர்களது நாட்டுக்கூத்து அயற்கிராமத்தவரின் பாராட்டைப்பெற்றுத் திகழ்வதாகும்.

புதுமையைப்பற்றி நாட்டம் இவர்களுக்கு பலதுறைகளில் இருப்பினும் நாட்டுக்கூத்தை மிகவும் பழைய முறையில் பேணிவருகிருர்கள். கோயிற்கொண்டாட்டங்களிலோ, அன்றி சமுகக் கொண்டாட்டங்களிலோ, இந்த நாட்டுக்கூத்து விசேடமான இடத்தைப் பெறுகின்றது. கடந்த நாற்பதைந்து ஆண்டுகளாக நாட்டுக்கூத்துக் கலை பழைய மரபுடன் இங்கு வளர்வதற்கு யாம் அறிமுகப்படுத்தும் அண்ணுவியார் அந்தோனிப்பிள்ளை முக்கியஸ்தராக விளங்கியுள்ளார்.

அண்ணுவியார் அந்தோனிப்பிள்ளை, மிகச் சிறிய வயது முதற்கொண்டேநாட்டுக்கூத்து ஆடிவருபவர். தனது பன்னிரண்டு வயதிலேயே நாட்டுக்கூத்தில் முதன்முதல் 'பாலபார்ட்' ஏற்றுவந்தவர். அக்காலந்தொட்டு தொடர்ந்து அவர் நாட்டுக்கூத்தில்முக்கிய பாத்திரங்களை ஏற்று பலரது பாராட்டுக்கும் உரியவராஞர். இவரது கண்டம்நாட்டுக்கூத்துக்குரிய இலாகவமாகவும், சோர்வின்றி நீண்ட நேரத்துக்குப் பாடக்கூடிய பான்மையும்பெற்றிருந்தது. சாதாரண தொழிலாளியான இவர் வாழ்க்கைக்குரிய தனது தொழிலைச் செய்கின்ற வேளைதவிர்ந்த ஓய்வு நேரங்களில் நாடகத்தைப்பற்றிய சிந்தனை உடையவராகவே விளங்கினர்.

கரம்பன் மெலிஞ்சிமுனையில் வாழ்ந்து அக்கிராமத்திலேயே கலைப்பணியும் புரிந்துவந்த அண்ணுவியார் அந்தோனிப்பிள்ளையின் பிறந்த ஊர் யாழ்ப்பாணம் நாவாந்துறையாகும். தனது சுற்றத்தவர்களின் தொடர்பினல் மெலிஞ்சிமுனையில் அவர் குடியேறினர்.

இங்குள்ள மக்களின் தொடர்பும் நாடகக்கலையில் அவர்கள் காட்டும் அக்கறையும் இவரது கலையுள்ளத்தை ஆகர்சித்தது. தினமும் அதே சிந்தனையில் கிடக்கும் இவர் காலப்போக்கில் பல நாடகங்களைப் பயிற்றி தானும் நடித்து மக்களிடையே அண்ணுவியராக உருவானுர்.

இவர் பாடசாலைப்பயிற்சி அதிகம் இல்லாதவர். நாடகங்களைப் பயிற்றுவதனுல் பல பாடல்கள் மனப்பாடமாகிவிடும். பலவித சந்தங்கள் நெஞ்சில் இடம் பெறும். தினமும் அவற்றைத் திருப்பித் திருப்பிப் பாடுவார். இதனுல் இவரும் சுயமாக நாட்டுக்கூத்துக்களையாக்கின்ற புலமை பெற்ருர். ஆனந்தசீலன், ஞானனந்தன், தர்மசீலன், திருஞானதீபன் மாளிகை கட்டிய மாதவன், மதிவீரன் மனேகரசீலன், புனித கிறீஸ்தோப்பர் போன்ற நாடகங்களை நாட்டுக்கூத்து இரசிகர்கள் வெகுவாகப் பாராட்டக்கூடியவாறு அரங்கேற்றியுள்ளார் பலநாடகங்களுக்கு இவரே பாடல்கள் யாத்துள்ளார். நாட்டுக்கூத்து என்பது நூற்றுககு நூறு பாடல்களையே கொண்டது. கோபம், சாந்தம், அருவருப்பு, ஆச்சரியம் போன்ற இரசங்களுக்கு அமைய சந்தங்கள் வேறுபடும். சில குறிப்பிட்ட பாத்திரங்கள் மேடையில் தோன்றும்போது வெகு விறுவிறுப்பாக இருக்கும். விடிய விடிய நடக்கும் நாடகத்தின்போது சிலர் உறங்கி விடுவார்கள். இந்த வேளையில் விறுவிறுப்பான பாடல்களில் நல்ல தமிழ்ச்சொற்கள் இடைநின்று காதுக்கு இனிமையூட்டி கருத்துக்கும் இதமளிக்கின்றன. நாடகம் இயற்றியவர் திறமை புலப்படும். அண்ணுவியார் அந்தோனிப்பிள்ளையின் சுயமான நாடகங்களில் இத்தகைய சிறப்பான பாடல்கள் இடம் பெற்றுள்ளன வென்று பல இரசிகர்கள் கூறியுள்ளனர்.

இவர் தனது கிராமத்துப் பாடசாலைச் சிறுவர்களுக்கான பல சிறிய நாடகங்களை இயற்றி அவற்றைப் பயிற்றி மேடையேற்றியுமுள்ளார்.

இவரது பெருமையை மற்றவர்களும் அறிய வேண்டுமென்ற ஆர்வத்தின் பேருக மெலிஞ்சிமுனை மக்கள் இவரைக் கௌரவிக்க 1968-ம் ஆண்டுஏப்ரல்மாதத்தில் ஒருவிழாவை ஏற்பாடு செய்தனர்.

இவ்விழா மிகவும் பரந்த அளவில் நடைபெற்றது. விழாவின் ஞாபகமாக அண்ணுவியார் அந்தோனிப்பிள்ளையைப் பிறருக்கு அறிமுகம் செய்யக் காரியக் குழுவினர் முடிவு செய்தனர்.

இந்தவிழாவில் வணக்கத்துக்குரிய பிதா குணசீலன் ஊர்காவற்றுறை ஆட்சி பன்ற உறுப்பினர் திரு. வி. நவரத்தினம், கலைக்கவி எஸ்

(13-ம் பக்கம் பார்க்க)



[தந்தை கிழிந்த கோட்டைத் தாண்டாமல் செல்லும் தனயரைப்போல் மரபுவழியில் கலைவளர்க்கும் கலைஞர்கள் பலர் இலைமறை காய்போல் ஒதுங்கியிருக்கிருர்கள்- ஒதுங்கியிருந்தார்கள். வாழ்க்கையைத் தாம் கைக்கொண்ட கலைத்தேவிக்கு அர்ப்பணித்தவர்களை மறக்கலாமா? அவர்களால் நம் தமிழ்த்தாய் பொலிவுற்றிருக்கிருள்என்பது உண்மை. மறுக்கமுடியாதது].




### மூன்று நாடகங்கள்

மகாசிவராத்திரியை முன்னிட்டு வதிரிஉல்லியனெல்லை அம்பாள் ஆலயத்தில் கரவை வள்ளுவர் மன்றம் அளிக்கும் 'வாழ்வா சாவா', 'காதலும் கத்தரிக்காயும்' ஆகிய இரு நாடகங்களும், வதிரி அம்பாள் இளைஞர் மன்றத்தினரின் 'காவலன் கடுங்கோன்' என்னும் நாடகமும் மேடையேற்றப்படவிருக்கின்றன. இம்மூன்று நாடகங்களையும் கரவை அருளானந்தம் டைரக்ட் செய்து வருகின்றார். (உடு. நி.)

## பெண்கள் எளிமையாக வாழவேண்டும்!

### எம். ஜி. ஆர். புத்திமதி

எம். ஜி. ஆரின் எளிய தோற்றமும், இனிய பேச்சும் பாரதிக்குப் பிடித்து விட்டது.

டாக்டர் வேலை பார்ககும் பாரதிக்கு எம். ஜி. ஆர். மீது பார்வை விழுந்தது. அதுதான் காதல் பார்வை நடந்து வந்துகொண்டிருந்த எம். ஜி. ஆரை தன் க்ாரிலேயே ஏற்றிக்கொண்டார் பாரதி,

'உங்களின் எளிய தோற்றம் என்னைக் கவர்ந்துவிட்டது!' என்று பாரதி கூறினர்.

பெண்கள் ஆடம்பரமில்லாமல் நடந்துகொள்ள வேண்டும், அப்படி நடந்துகொள்வதுதான் பெண்களுக்குச் சிறப்பைத்தரும் என்று பாரதிக்குப் புத்தி புகட்டும் விதமாகப் பேசினர் எம். ஜி. ஆர்.

இந்தக்காட்சியை வருகிற ஏப்ரல் மாதம் 14-ந் திகதி திரைக்குவரும் ராமச்சந்திரா புரொடக்சன்சின் 'அன்னமிட்ட கை' என்ற படத்தில் காணலாம்.

இந்தப்படத்தில் ஜெயலலிதா கதாநாயகியாகநடிககிறர் கே. வி. மகாதேவன் இசை அமைக்க எம். கிருஷ்ணன் டைரக்டு செய்கிறர். இதன் வெளிப்புறக் காட்சிகள் இந்தமாதம் 23-ந்திகதி முதல் பீர்மேடு தேயிலைத் தோட்டப்பகுதிகளில் படம் ஆக்கப்படுகின்றன.

## பலதும் பத்தும்

- கல்லூரி மாணவர்கள் கதைவசனம் எழுதி ஒரு படம் தயாரிக்கப் போகின்றனர். மாணவர் ஒருவரே டைரக்டும் செய்வார் இப்படத்தின் பெயர் காதல் தெய்வம்
- எம் ஜி. ஆர் வீட்டில் நூல் நிலையம் ஒன்று அமைத்துள்ளார். கண்ணடி அலுமாரியில் அழகாக நூல்கள் அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. சுரங்க அறையில் அமைக்கப்பட்டிருககும் இந்நூல் நிலையத்தில் அமைதியாக இருந்துபடிக்கலாம். 2000 நூல்கள்வரை இருக்கின்றன. தலைவர்கள், பெரியாாகளின் படங்கள் இந்நிலையத்தை அழகு செய்கின்றன
- செவிடர், ஊமைகளுக்கான ஒரு தியேட்டர் மாஸ்கோவில் கட்டப்பட்டுள்ளது. 700 பேர்கள் உட்காரக் கூடிய வசதிகளைக் கொண்டது இத்தியேட்டர்,
- நடிகை வைஜந்திமாலாவின் தாய் மொழி கன்னடம். இவர் புகழ்பெற்றது ஹிந்திப்படங்கள் மூலம். இப்போது இவர் பேசுவது பஞ்சப் மொழி.
- டைரக்டர் ஸ்ரீதர் தன்படங்களில் நடிக்கவரும் நடிக நடிகையருககு புதுப்புதுப் பெயர்களையே சூட்டுவார்.
- நடிகை சோபியா லோரனின் ரசிகர்கள் இப்போது சோபியாவின் புகைப் படங்களைக் கேட்டு கடிதம் எழுதுவதில்லை. அவரது செல்வ மகன் கார்லோவின் படத்தைக் கேட்டுத்தான் எழுதுகிருர்கள். சினிமா உலகில் குழந்தை பிறந்ததும் தாய்க்குமதிப்பில்லாமல் போய்விடுகிறது.
- வங்காளத்தில் மிகப்பிரபல நடிகர் உத்தம் குமார். இவர் பெயரைத் தெரியாத குடும்பமே வங்காளத்தில் இல்லை. 20 வருடங்களாக வங்காளி படங்களில் நடித்து வரும் இவர் முதலில் சாதாரண குமாஸ்தாவாகவே வேலைபார்த்தார்.
- நடிக நடிகையர் பத்திரிகைகளில் கதை எழுத ஆரம்பித்துவிட்டனர். நடிகைகளில் பானுமதியும், ஷீலாவும் நடிகர்களில் ரங்கராவ் நாகேஷ்- கதை எழுதுவதில் சிறந்தவர்கள்.
- விமானப் பணிப்பெண்ணுக வேலைபார்த்த மிஸ் தேவி படங்களில் நடிக்க வந்ததும் காஞ்சனு என்று தன்பெயரை மாற்றிவிட்டார். விமானத்தில் ஏறிப்பழக்கப்பட்ட காஞ்சனு இப்போது புகழ் ஏணியில் ஏறிக்கொண்டிருக்கிருர்.
- நடிகை ஷீலா உடலோடு ஒட்டிய ஆடைகளை அணிந்து நடிக்கவிருப்புவதில்லை, 'அதேகண்கள்' படத்தில் ஒப்பந்தம் செய்தார், ஆனல் நடிக்கவில்லை. உடலோடு ஒட்டக்கூடிய இறுக்கமான ஆடைகள் கொடுக்கப்பட்டன. மறுத்துவிட்டார்.
- நடிகர் சந்திரபாபுவுக்கு எந்த நடிகைகளையாவது திட்டாமல் 10 நிமிடம் பேசமாட்டார். திட்டிக் கொண்டேபேசுவார். ஆனல் அதில் சில உண்மைகளும் இருக்கும்.

சேகரிப்பு: இ. பே.

சுவையான சின்ன சேதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரப் பயணம்-8

## அம்புலியை நோக்கி

# அப்பலோ-11 புறப்பட்டது

**1969 - ஜுலை16:** விண்வெளிவீரர்கள். ஆம்ஸ்ட்ரோங், கேணல் அல்டிரின்' கேணல் கொலின்ஸ் ஆகிய மூவரும் அதிகாலையில் எழுந்ததும் வைத்திய சோதனை செய்துகொண்டனர். காலை உணவு உட்கொண்டு, தோள் பட்டைகளில் அமெரிக்க கொடி பொறிக்கப்பட்ட வெள்ளை விண்வெளி உடைகளை அணிந்துகொண்டனர்.

தங்கியிருந்த இடத்திலிருந்து எட்டுமைல் தொலைவிலிருந்த ஏவுதளத்துக்கு குளிர்சாதனம் பொருத்தப்பட்ட விசேஷ வாகனத்தில் புறப்பட்டனர். அங்கு சட்டர்ன்-5 கணையின் உச்சியிலுள்ள தமது கலத்துக்கு விசைத்தூக்கிமூலம்கொண்டு போகப்பட்டனர்.

சட்டர்ன் - 5 கணையின் எஞ்சின்கள் 6,484000 ருத்தல் எரிபொருளினுல் நிரப்பட்டிருந்தது. விண்வெளி வீரர்கள் மேலேயுள்ள கலத்துக்குள்சென்றடைந்த அதே வேளையில் கீழே 'ஹைடரஜன்' வாயு அடைக்கப்பட்டிருந்த சாதனத்தில் கசிவு ஏற்பட்டு அதனைத் திருத்துவதில் 100 தொழில்நுட்ப நிபுணர்கள் ஈடுபட்டிருந்தனர்.

கட்டளைக்கலத்துக்குள் முதலில் ஆம்ஸ்ரோங் நுழைந்தார். அவரைத் தொடர்ந்து கேணல் கொலின்ஸும், கேணல் ஆல்டிரினும் நுழைந்தார்கள். தங்கள் விண்வெளி உடைகளை கலத்திலுள்ள பிராணவாயு சாதனத்துடன் இணைத்துக்கொண்டார்கள், விசைகளையும் தொடர்புக் கருவிகளையும் பரிசோதித்துக்கொண்டார்கள்.

புளோரிடாவில் கென்னடி முனையிலுள்ள விண்வெளி தளத்தில் அப்பலோ -11 கலத்தை உச்சியில் சுமந்தபடி சட்டர்ன் - ஏவுகணை கம்பீரமாக நின்றது. அப்பலோ - 11 கலத்தின் கட்டளைப் பேழைக்குள் விண்வெளி வீரர்கள் 2,40,000 மைல் தொலைவிலுள்ள சந்திரனைப் போய் அடைவதற்கான பிரயாணத்தைத் தொடங்குவதற்கு ஆயத்தமாய் இருந்தார்கள்.

இரவு மணி 7.02 (9-32 கீழ்த்திசைப்பகல் நேரம்) 3,817 டன் எடையுள்ள சட்டர்ண் - 5 ஏவுகணை தீப்பிழம்புகளை அடிப்பாகத்தில் கக்கியவண்ணம் செவிடுபடும்படியான இடிமுழக்கம் போன்ற பேரிரைச்சலுடன் மேலே கிளம்பியது,

வரலாற்று முக்கியத்துவமிக்க இந்தப்பிரயாணத்தைக் காண்பதற்காக புளோரிடாவில் கூடியிருந்த இலட்

—பேணு—

சக்கணக்கான மக்களும் இனம்தெரியாத உணர்ச்சிப் பிரவாகத்துடன் விண்ணையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதேசமயம் உலகின் பல பாகங்களிலும் எண்ணிறைந்த மக்கள். இந்தப் பிரயாணத்தைப்பற்றிய வானொலி வர்ணனைகளைக் கேட்டுக்கொண்டும் தொலைக்காட்சிகளில் (டெலிவிஷன்) பார்த்துக்கொண்டும் இருந்தார்கள.

அப்பலோ — 11 கலத்தின் ஆரம்பக்கட்டம் மிகவும் திருப்திகரமாகச் செயல்பட்டது. அதனுல் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த பாதைத் திருத்தம் கைவிடப்பட்டது. ஏவுதளத்திலிருந்து மேல்கிளம்பிய 12 நிமிடங்களுக்கெல்லாம் அப்பலோ-11 பூமியைச் சுற்றிய பாதையில் திரும்பி இரண்டரைமணிநேரம் வலம்வந்தபின் சந்திரனை நோக்கிய பாதையில் மணிக்கு 24200 மைல் வேகத்தில் புறப்பட்டது.

''நீங்கள் போகவேண்டிய பாதையில் போய்க்கொண்டிருக்கிறீர்கள்' என்று ஹூஸ்டனிலுள்ள விண்வெளி பயணக் கட்டுப்பாட்டு நிலையத்தினர் விண்வெளிவீரர்களுக்கு அறிவித்தனர்

அடுத்த இரண்டு மணித்தியாலங்களுக்கிடையில் சட்டர்ன் - 5 கணையின் மூன்றும் கட்ட எஞ்சின்களினின்றும் கட்டளைக்கலம் பிரிக்கப்பட்டது' கட்டளைக்கலத்தை கேணல் கொலின்ஸ் பக்கவாட்டில் 180 பாகைக்கு நகர்த்தித் திருப்பி அதன் மூக்குபோன்ற பகுதியை சந்திரக் கலத்துடன் இணைத்தார். இதற்காக அதிக எரிபொருள் செலவாகிவிட்டதாக கொலின்ஸ் அறிவித்தார். ஆனுல் இதுபற்றி கவலைகொள்ளத் தேவையில்லையென் கட்டுப்பாட்டு நிலையத்தினர் அறிவித்தனர் ஏறத்தாழ ஒருமணி நேரத்தின்பின் கலத்தின் 'ரொக்கட்' பகுதி கழற்றிவிடப்பட்டது கட்டுப்போட்டு நிலையத்திலிருந்து ரேடியோ சமிக்ஞையொன்றின்மூலம் இது செய்யப்பட்டது. 'ரொக்கட்' பகுதி கலத்தின் பாதையில் இருக்காதவண்ணம் அது சூரியனைச் சுற்றிய திசையில் துரத்தப்பட்டது இந்தக்கட்டத்தில் பூமியிலிருந்து 50.000 மைல் தொலைவில் அப்பலோ - 11 பிரயாணம் செய்துகொண்டிருந்த அதே சமயம் பூமியின் ஈர்ப்பு விசையின் காரணமாக அதன் வேகம் படிப்படியாகக் குறைந்துகொண்டுமிருந்தது. கப்பல் போக்குவரத்துக்குத் தேவையான சில பணிகளையும் வீரர்கள் அன்று செய்தார்கள். நட்சத்திரக் கூட்டங்களை ஆராய்ந்துஅவர்கள் கவல் சேர்க்துக்கொண்டனர் அன்றையநாள் பணிகள் முடிந்தபின்னர் தளபதி ஆம்ஸ்ரோங் பூமியுடன் தொடர்புகொண்டபொழுது சட்டர்ன் பிரயாணம் பிர' மாதமாகவிருந்தது. அதன் மூன்று கட்டங்களிலும் நாங்கள் புகார் சொல்லும் அளவுக்கு ஒன்றும் ஏற்படவில்லை', என்று குறிப்பிட்டார்· தமக்கு இடதுபக்கமாக விருந்த சாளரத்தின்வழியாக வெளியில் எட்டிப்பார்த்துவிட்டு' யன்னலின் வழியாகப் பார்க்கும்போது வடஅமெரிக்க கண்டம் முழுமையாகத் தெரிகின்றது''என்ருர்.

அன்றிரவுவர்ணத்தொலைக்காட்சியொன்றை அவர்கள் பூமிக்குக்காட்டினுர்கள். அன்றிரவு ஏற்கெனவே திட்டமிடப்பட்டதற்கு இரண்டு மணி முன்னதாகவே அவர்கள் உறங்கத் தொடங்கினுர்கள். இடையில் மத்திய வழித்திருத்தம் செய்ய வண்டியேற்படாததால் இந்தநேரம் மிச்சப்பட்டிருந்தது. (வளரும்)

## சந்திரனில் இறங்கிய இரண்டாவது மனிதர் 'பஸ்' ஆல்டிரின்

நியூயோர்க்கின் புறநகரான மொன்ட்கிளயாரில் எட்வின் யூஜின் ஆல்டிரின் பிறந்தார். ஆறு பெண்களைக் கொண்ட ஒரு குடும்பத்தில் ஒரே செல்லப் பிள்ளையாக அவர் வளர்ந்தார் இவர்தந்தை 74 வயதான கேணல் எட்வின் யூஜின் அல்டிரின் (சீனியர்) முன்னுள் ராணுவ அதிகாரி 'பஸ்' ஆல்டிரின் சிறுவனுக இருந்தபோது இரண்டாவது உலகயுத்தத்தில் அவர் தந்தை பணியாற்றவேண்டி நெடுங்காலம் வெளியில் இருந்தார். சிறுவன் பெண்களின் சூழ்நிலையிலேயே வாழ்ந்தான். இரண்டு மூத்த சகோதரிகள்,தாயார் பாட்டியார். பாட்டியாரின் கடைசிப்பெயர்'மூன்' Moon அதாவது 'நிலா என்பதாகும்- வீட்டில் ஒரு நீக்ரோ சமையல்காரியும், நீக்ரோ தாதிப்பெண்ணும் இருந்தார்கள்.

சின்சினட்டியில் வாழும் அவரது சிறிய சகோதரியான திருமதி பே பொட்டர்தான் ஆல்டிரினின் புனைபெயரான பஸ் BUZ, என்பதற்குக் காரணம். சிறுவயதில் அவருக்கு பிரதர் [Brother) என்பதை உச்சரிக்க வராது. அவர் பஸா (Buzzer)என்றுதான் அழைப்பார். அதனுல் ஆல்ட்ரின் 'பஸ்' என்று அழைக்கப்படலானுர்.

திருமதி பொட்டர் தமது தம்பி சிறுவயதில் 'குழப்படிக்காரப் பையன்' என்கிருர். 'எந்தநேரமும் தாயாருக்கு எரிச்சல் மூட்டிக் கொண்டே இருப்பான்'என்கிருர் அவர்.

ஆரம்பகாலமுதலே அவர் விளையாட்டுகளில் ஆர்வம் காட்டிவந்தார். கடற்கரையில் இப்பொழுதும் அவர் தேகப்பயிற்சி செய்வதை விடவில்லை என்கிருர் அவர் சகோதரி. மற்றப் பிள்ளைகளைப்போலவே அவர் உண... ர்ச்சிவசப்படுவார். ஒரு தினம் வீடு திரும்பியதும் தான் வளர்த்த சீமை எலிகள் தங்களின் குட்டிகளைத் தின்றுவிட்டதையறிந்து கண்ணீர் விட்டழுதார் பஸ் கடற்கரையில் ஒருமுறை பெரிய அலையினுல் மோதப்பட்டு பலகாலம் கடலுக்குப் போகவே பயந்தார். மற்றப்படி அவர் தமது தாயாரின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் பிள்ளையாகவே வளர்ந்து வந்தார்.

1951ல் அமெரிக்க ராணுவக் கல்லூரியில் விசேஷ ... பட்டம் பெற்றுத் தேறினுர். விமானத்துறையில் ஈடுபாடு கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த 'பஸ்' வான் பயணத்துறை எதிர்காலத்தில் மிகவும் பிரபல்யமாகப் போவதையறிந்து விமானியாக பணிபுரிய முடிவு செய்தார். கொரியா சண்டையில் ஒரு ''எஃப்-86 சாப்ரிஜெட்'' விமானத்தைச்செலுத்திஇரு மிக்-15 விமானங்களைச் சுட்டுத்தள்ளிப் பின்னர் ஜெர்மனியில் பணியாற்றினுர்.

1963-ம் ஆண்டு மாஸச்சுசெட்ஸ் தொழில்நுட்பக்கல்லூரியில் வான் பயணத் துறையில் விஞ்ஞானக்கலாநிதிப்பட்டம் பெற்ருர். அதன் பிறகு வான்பயணத் துறை நிபுணர் என்ற வகையில் விண்வெளிக்கு மனிதரை அனுப்பும் நிறுவனத்தில் விமானப்படைப் பிரதிநிதியாக இடம்பெற்ருர். 1966நவம்பரில் ஜெமினி-12 கலத்தில் விண்வெளிக்குச் சென்ற இவர் அண்டவெளியில் ஐந்தரை மணி நேரம் நடந்து சாதனையொன்றை நிலைநாட்டினுர். 'பஸ்'கம்பியூட்டர் இயந்திரம்போன்று செயல்படுபவர் என்று அவருடன் நெருங்கிப்பழகியவர்கள் கூறுவார்கள். அவர் எப்பொழுதுமே தமது வேலைகளில் மூழ்கிக்கிடப்பார் என்று அவர் சகோதரி திருமதி பொட்டர் கூறுவார். கேர்ணல் ஆல்டிரினுக்கும் மனைவி ஜோனுக்கும் மூன்று பிள்ளைகள் இருக்கிருர்கள. ஜே மைகல், ஜெனிஸ், அன்ட்ரு என்பன அவர்களின் பெயர்கள்.

செனனையிலே பல ... ரக்கணக்கான இலங்... மாணவர்கள் வசிக்கி... கள். இவர்கள் ... பெரும்... லானவர்களை ... ஒரே இட... தில் வைத்துப்பார்க்கு... வாய்ப்பு கடந்த புத... கிழமை மாலை கிடைத்த... இலங்கையின் இருபத்திர... டாவது சுதந்திர தி... விழாவை இந்த மாண... கள் கோலாகலமா... கொண்டாடியபோது அ... களின் சிறந்த கலையார்... தையும் அமைப்புத் திற... யும் நேரில் கண்டு மகிழ்... தேன். அவர்கள் தயாரி... நடத்திய கதம்ப நிகழ்... யில் இலங்கையின் பல்வே... சமூகத்தவரின் நடை உடை... பாவனைகளையும், பழக்கவ... கங்களையும், காட்சிக... பாடல்கள், நடனங்க... மூலம் அற்புதமாகச் சித்... ரித்துக் காட்டினுர்கள். க... க்ஷேத்திரத்தில் நடனம் ப... லும் இலங்கை மாணவிக... இந்தக் கொண்டாட்டத்தி... அவர்களுக்கே உரித்தா... பாணியில் அறுவடை ந... னம் ஒன்றும், கோலாட்ட... ஒன்றும் ஆடி மகிழ்வித்... னர். பேராசிரியர் சுந்த... லிங்கத்தாரின் மகன் சத்தி... லிங்கத்தின் குடும்பம்- நீல... வும் குழந்தைகளும் இ... போது சென்னையில் வசிக்... ருர்கள். அவர்களது குழ... தைகள் கலாக்ஷேத்திர... தில் நடனம்பயில்கிருர்கள்... ஏற்கெனவே சத்தியலிங்... மும் நீலாவும் கலாக்ஷேத்... ரத்திலேயே படித்துப் ப... டம் பெற்றவர்கள். இவ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயிலே பல ஆயி
ன இலங்கை
க ர் வசிக்கிறார்
க பெரும்பா
ள ஒரே இடத்
துப்பார்க்கும்
க ந்த புதன்
ாலே கிடைத்தது.
ன் இருபத்திரண்
சுதந்திரதின
இந்த மாணவர்
லாகலமாகக்
டியபோது அவர்
ந்த கலையார்வத்
அமைப்புத் திறனை
கண்டு மகிழ்ந்
வர்கள் தயாரித்து
கதம்ப நிகழ்ச்சி
கையின் பல்வேறு
ரின் நடை உடை
யும், பழக்கவழக்
, காட்சிகள்,
, நடனங்கள்
ற்புதமாகச் சித்த
ட்டினார்கள். கலா
ந்தில் நடனம் பயி
ங்கை மாணவிகள்
காண்டாட்டத்தில்
கே உரித்தான
அறுவடை நட
வும், கோலாட்டம்
ஆடி மகிழ்வித்த
ராசிரியர் சுந்தர
ரின் மகன் சத்திய
ன் குடும்பம்- நீலா
ந்தைகளும் இப்
சன்னையில் வசிக்கி
அவர்களது குழந்
கலாக்ஷேத்திரத்
ரம் பயில்கிறார்கள்.
வே சத்தியலிங்க
வும் கலாக்ஷேத்தி
ய படித்துப் பட்
றவர்கள். இவர்

ச்சி செய்வதை
என்கிறார் அவர்
மற்றப் பிள்ளை
லவே அவர் உண
டுவார். ஒரு
டு திரும்பியதும்
ளர்த்த சீமை எலி
ளின் குட்டிகளைத்
டதைய றிந்து
விட்டழுதார் பஸ்
யில் ஒருமுறை
லையினால் மோதப்
காலம் கடலுக்
கவே பயந்தார்.
அவர் தமது
அபிலாசைகளைப்
சய்யும் பிள்ளையா
ளர்ந்து வந்தார்.
அமெரிக்க ராணு
லூரியில் விசேஷப்
பெற்றுத் தேறி
மானத்துறையில்
கொண்ட குடும்பத்
சர்ந்த 'பஸ்' வான்
துறை எதிர்
தில் மிகவும்
மாகப் போவதை
விமானியாக பணி
முடிவு செய்தார்.
சண்டையில் ஒரு
86 சாப்ரி ஜெட்''
த்தைச்செலுத்திஇரு
விமானங்களைச் சுட்
ளிப் பின்னர் ஜெர்ம
பணியாற்றினர்.

-ம் ஆண்டு மாஸச்சு
தொழில்நுட்பக்கல்
வான் பயணத்
ல் விஞ்ஞானக்கலா
ட்டம் பெற்றார்.
பிறகு வான்பயணத்
திபுணர் என்ற வகை
விண்வெளிக்கு மனி
அனுப்பும் நிறுவனத்
மானப்படைப் பிரதி
க இடம்பெற்றார்.
வம்பரில் ஜெமினி-12
ல் விண்வெளிக்குச்
இவர் அண்டவெளி
ந்தரை மணி நேரம்
சாதனையொன்றை
ட்டினர். 'பஸ்'கம்பி
இயந்திரம்போன்று
படுபவர் என்று அவ
நெருங்கிப்பழகியவா
றுவார்கள். அவர் எப்
துமே தமது வேலை
மூழ்கிக்கிடப்பார்
அவர் சகோதரி
தி பொட்டர் கூறு
கேர்ணல் ஆல்டிரினுக்
மனைவி ஜோனுக்கும்
பிள்ளைகள் இருக்கி
. ஜே மைகல்,
ஸ், அன் ரு என்பன அவ
ன் பெயர்கள்.

# இலங்கை மாணவர்களின் கலைத்திறன்

**சென்னையிலிருந்து சோ. சிவபாதசுந்தரம் எழுதுகிறார்**

களது பொய்ய பெண் மோகனா அன்றைய சுதந்திரதின விழாவில் ஒரு சிங்களப் பாட்டுக்குப் பரதநாட்டியப் பாணியில் அபிநயம் பிடித்து ஆடியது புதுமையாகவும் அழகாகவுமிருந்தது. சிங்களக்கவி 'சுனில் சாந்தா' வின் ஓடக்காரன் பாட்டு என்று கேள்வி. அதற்குச் சத்தியலிங்கமே மிக அற்புதமாகப் பாடித் தம் பெண்ணை ஆடச் செய்தார்.

எல்லாவற்றையும்விட அன்றைய விழாவில் பலருடைய பாராட்டுதலையும் பெற்ற நிகழ்ச்சி ஒரு கதாப்பிரசங்கம். இலங்கை இந்திய நட்புறவை அடிப்படையாகக் கொண்டு, இராமாயணக் கதையை எடுத்து. நவீன மோஸ்தரில், தெரிந்தெடுத்த சினிமாப் பாட்டுக்களைத் தொடுத்து, சபையோர் விழுந்து விழுந்து சிரிக்கும்படி செய்தார்கள். மொத்தத்தில், இலங்கை மாணவர்கள் ஏற்படுத்திய இவ்விழா மிகச் சிறப்பாயமைந்தது. சென்னையிலுள்ள உதவி ஸ்தானிகர் திரு. பர்ணண்டோ அவர்கள் அன்று குறிப்பிட்டதுபோல, இலங்கை அரசாங்க உத்தியாகப் பிரதிநிதிகள் செய்ய வேண்டிய ஒருமைப்பாட்டுப் பணியை இலங்கை மாணவர்களே செய்து காண்பித்துவிட்டார்கள்.

0 0 0

இலங்கை எழுத்தாளருடைய படைப்புக்களில், சமீப காலத்தில் இலங்கையிலேயே எத்தனை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன என்பதைப்பற்றி அதிகமாக இங்குள்ளவர்களுக்குத் தெரியாது. ஆனால், ஒரு சிலருடைய நூல்கள் மாத்திரம் இங்குள்ள இரண்டொரு வெளியீட்டகங்களின் பெயரில் பிரசுரமாகியிருக்கின்றன. இந்த வாரம் செ. கணேசலிங்கத்தின் புதிய நாவலான ''போர்க்கோலம்'' என் கைக்குக் கிடைத்தது, சென்னை பாரி நிலையத்தின் விற்பனை உரிமையோடு வெளிவந்திருக்

## சாதிப் பிரச்னையும் 'நக்ஸலைட்' இயக்கமும்

கும் இந்த நாவலைப் பார்த்தபோது அதிர்ச்சியடைந்தேன். யாழ்ப்பாணத்துச் சாதிவித்தியாசப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, நக்ஸல்பாரிவகையான ஆயுதப் பலாத்கார இயக்கத்துக்கு ஒரு பிரசார நாவலாக அமைந்திருக்கிறது இந்நூல்.

இந்த நாவலுக்கு ''அசுரன்'' என்ற புனைபெயருள்ள ஒருவர் எழுதியுள்ள முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:-

''இந்தியாவிலும் இலங்கையிலும் இப்போது உள்ள முதன்மையான முரண்பாடு மக்களுக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் இருக்கும் முரண்பாடு ஆகும். இம்முதன்மையான முரண்பாட்டைத் தீர்ப்பதில் இருநாடுகளிலும் இயக்கங்கள் தோன்றி வளர்வதை இன்று பார்க்கமுடிகிறது... இந்திய மக்களைப் பொறுத்தவரையில் நிலப்பிரபுத்துவம், தரகு முதலாளி வர்க்கம், ஏகாதிபத்தியம் ஆகிய மலைகளும் அவர்கள் முன்னுள்ளன. இவற்றிற்கு எதிரான புரட்சிகரமான இயக்கங்கள் நக்சல் பாரியிலிருந்து சிறு பொறியாகத் தொடங்கி இன்று சிகாகுளத்தில் அது பெருந்தீயாக மாறி வருவதை நாம் பார்க்கமுடிகிறது...

''போர்க்கோலம்'' என்ற இந்நூல் மக்களுக்கு முன்னிற்கும் நிலப்பிரபுத்துவம் என்ற பிரதானமான முரண்பாட்டைத் தகர்த்தெவனதற்கு புதிய, புரட்சிகரமான வழியைக் காட்டி நிற்கின்றது.''

நிலமானிய அமைப்பு, நிலப்பிரபுத்துவம், பாட்டாளி வர்க்கம் என்ற சங்கேத வார்த்தைகளை உபயோகித்து ஒரு வகை இலக்கியம் இப்போது இலங்கை எழுத்தார் கையில் நடமாடிக்கொண்டு வருவதைப் பார்க்கிறோம். யதார்த்த இலக்கியம் என்று ஒரு பெயரைச் சூட்டி அவர்கள் திருப்திப்படுகிறார்கள். கணேசலிங்கனின் நாவல், அவரை ஆதரிக்கும் இலக்கிய வர்க்கத்தாரின் மகிழ்வுக்காக எழுதப்பட்டிருக்கிறதல்லாமல், தமிழ்இலக்கிய வளர்ச்சிக்கோ அல்லது நாவல் வளர்ச்சிக்கோ இது பயன்படும் என்று சொல்லத் தோன்றவில்லை. கணேசலிங்கனின் ''இயக்கம்'' சம்பந்தமான கொள்கைகள் சிலவற்றை அவரது கதாபாத்திரங்கள் வாயிலாகவே காண்போம்.

''கொழும்புப் பக்கமெல்லாம் நிலைமையெப்படி?'' சுப்பிரமணியன் கேட்டான்.

''இங்கே நீங்கள் சாதிக்கு அடிமை. நாங்கள் அங்கு முதலாளிக்குஅடிமை, இங்கே நீங்கள் வேளாளரோடு போராடுறீங்கள். நாங்கள் அங்கே முதலாளிகளோடு போராடுறம். அவ்வளவுதான் வித்தியாசம்''- வடிவேலு பதில் சொன்னான்.

''வேலைநிறுத்த மெல்லாம் நடக்குதுகானே?''

''ஓம், நல்லாய் நடக்குது! எல்லாம் கூலிப்போராட்டமாய்த்தான் நடக்குது. நீங்க முந்தி வேளாளரிட்டை கூலி கூடத்தராட்டால் வேலைக்குவரமாட்டன்என்று வெருட்டிறேல்லையா. அதைப்போலத்தான் வேலை நிறுத்தங்களாலை பிரச்னைகளெல்லாம் தீரப்போவதில்லையே. உங்களைப்போல முதலாளிகளை- ஆளும் வர்க்கத்தை - எதிர்த்துத் துப்பாக்கி எடுக்கும் துணிச்சல் இன்னும் வளரேல்லை. அது வளர்ந்து ஆட்சியைக் கைப்பற்றினால்தான் எமக்கு விமோசனம் கிடைக்கும்.''

ஆயுதப் புரட்சியைக் கொண்டு ஆட்சியைக்கைப் பற்றவேண்டும்என்பதுசீனப் பொதுவுடைமைவாதிகளின் கொள்கை அந்த முறையில்தான் இந்தியாவில் 'நக்சல்பாரி'' என்ற இடத்தில் ஆரம்பித்த சதிச் செயலாளரின் வன்முறையுமுள்ளது. கணேசலிங்கனின் நாவலிலும் பல இடங்களில் அவர் இந்த வன்முறை இயக்கத்தையே வற்புறுத்துவதாகத் தெரிகிறது. இலங்கையிலே வரப்போகும் பொதுத்தேர்தலைப்பற்றியும் அவர் தமது கதாபத்திரங்கள் மூலமாகத் தமது கருத்துக்கள் சிலவற்றை அம்பலப்படுத்துகிறார்.

''அடுத்த வருசம் இலெக்சன் வருதாம் ஆர் தம்பி வெல்லுவினம்?'' - சுப்பிரமணியன் கேட்டான்.

''ஆர் வெண்டாலும் உங்களுக்கோ எங்களுக்கோ அதிகமாய் எதுவும்கிடைந்து

[12ம் பக்கம் பார்க்க]

# பத்து வருடங்களில் பயன் தரும் உல்லாசப் பிரயாணத் திட்டம்

இலங்கை சமீப காலத்தில் பல துறைகளிலும் முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருப்பது யாவருமறிந்ததே. சமூக பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றம் காண்பதற்கு பதற்கு எண்ணற்ற பலதிட்டங்கள் கடந்த சில ஆண்டுகளாக அரசாங்கத்தால் தீட்டப்பட்டு அவற்றிற்பல செயற்படுத்தப்பட்டும வருகின்றன. இத்தகைய திட்டங்களில ஒன்றுதான் இலங்கை உல்லாசப் பிரயாணத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள பத்துவருடத் திட்டமுமாகும்.

இத் திட்டத்தின்மூலம் நம் நாட்டின் உல்லாசப் பிரயாணத் தொழில் கடந்த நாலு வருடங்களில் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியடைந்துள்ளது. கிழக்கையும் மேற்கையும் இணைக்கத்தக்க வகையில் இந்து சமுத்திரத்தில் மாங்கனி வடிவில் எழில்மிகு தோற்றத்துடன் அமைந்துள்ள இச்சிறு தீவு உல்லாசப் பிரயாணிகளை ஈர்க்கும் சக்தியுடையது என்பதைக் குறிப்பிட வேண்டியதில்லை இவ்வாறு வருடா வருடம் அதிகரித்து வரும் உல்லாசப்பிரயாணிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து அதன் மூலம் நாட்டின் வருவாயையும் முன்னேற்ற அரசாங்கம் மேற்கூறிய 10வருடத் திட்டத்தை 1966ம் ஆண்டு உருவாக்கியது. இத் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி உல்லாசப் பிரயாணிகள் சபையொன்றும் நியமிக்கப்பட்டது. இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகளை உல்லாசப்பிரயாணிகளசபை செயற்படுத்தி வருகிறதனல் உல்லாசப் பிரயாணத் தொழில் திருப்தி அளிக்கத்தக்க வகையில் முன்னேற்றமடைந்து நல்ல வருவாயையும் நாட்டுக்கு அளித்து வருகிறது.

—குணம்—

### சமீபகால முன்னேற்றம்

உல்லாசப் பிரயாணிகள் சபை சமீபத்தில் சேகரித்த புள்ளிவிபரங்களிலிருந்து இலங்கையின் உல்லாசப் பிரயாணத்தொழிலில் சமீபகாலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் கண்டுகொள்ளலாம். 1964 ஆண்டு நாட்டுக்குவந்த உல்லாசப்பிரயாணிகளின் தொகை இதற்கு முன்னைய ஆண்டிலும் பார்க்க 25 வீதத்தால் அதிகரித்தது. 1968-ம் ஆண்டில் நாட்டுக்கு வந்த உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை 19வீதத்தால் அதன்முன்னைய ஆண்டிலும்பார்க்க கூடியுள்ளது. 1969-ம் ஆண்டில் உல்லாசப் பிரயாணிகள்தொகை வருடாவருடம் அதிகரித்துக் கொண்டு வருவது போன்றே இத்தொழில்மூலம் இலங்கை பெறும் வருமானமும் அதிகரித்துள்ளது 1969-ம்ஆண்டு இத் தொழில்மூலம் இலங்கை ஒன்றரைக்கோடி ரூபாவுக்கு மதிகமான வருமானம் கிடைத்துள்ளது

1976ம் ஆண்டு இந்த உல்லாசப்பிரயாணத் தொழிலின் அபிவிருத்தித்திட்டம் பூர்த்தியாகிறது. அதற்கிடையில் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள் யாவற்றையும் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக உல்லாசப்பிரயாணிகள்சபை இலங்கையை 5 பொழுதுபோக்குப் பிரதேசங்களாகப் பிரித்து அபிவிருத்தி வேலைகளைச் செய்து கவனம் செலுத்தி வருகிறது.

## 1969ல் கிடைத்த வருமானம் ஒரு கோடியே 50 லட்சம்

வருகிறது. பொழுதுபோக்கு இடங்களைப்பற்றிய விளம்பரங்கள், பிரயாணிகள் பொருள்களை வாங்குவதற்கேற்ற சந்தை வசதி, அவர்கள் தாங்கிநிற்கும் போது ஏற்படும் செலவினங்களைக் கணித்தல், தங்குவதற்கு ஹோட்டல் வசதிகள் போன்ற உல்லாசப் பிரயாணிகளுக்கு வேண்டிய சகல வசதிகளையும் அரசாங்கம் தற்போது ஏற்படுத்தி வருகிறது இதைவிட விமான தளங்கள், துறைமுகங்கள், கலாச்சார நிறுவனங்கள், கைப்பணிப் பொருள் நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் ஆகியவற்றையும் உல்லாசப்பிரயாணிகள் வசதிக்கேற்ப அமைப்பதில் சபை கொண்டுள்ள பிரதானமான நடவடிக்கை ஹோட்டல் சேவையை விஸ்தரிப்பதாகும். இத்தொழில் விருத்திக்காகவே உருவாக்கப்பட்டது இலங்கை ஹோட்டல் கூட்டுஸ்தாபனம். இத்தாபனமே உல்லாசப் பிரயாணிகளைக் கவரத்தக்க வகையில் ஹோட்டல் சேவையை நடாத்தியும் புதுப்பித்தும் வருகிறது.

1966-ம்ஆண்டில் இருந்து 200 புதிய ஹோட்டல் அறைகளை இலங்கை ஹோட்டல் கூட்டுஸ்தாபனம் நிறுவியுள்ளது. பென்தோட்டையில் 100 ஹோட்டல் அறைகள் இவ்வாண்டிற்குள் பூர்த்தியாகவுள்ளன. 1975ம் ஆண்டில் 9 புதிய ஹோட்டல்கள் கொழும்பில் நிறுவப்படவுள்ளன.

கடந்த ஆண்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு வாகன வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகவான், விசேஷபஸ், கார் போன்ற வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மேலும் இத்தகைய வாகனங்களை இறக்குமதி செய்ய உல்லாசப்பிரயாணிகள்சபை தீர்மானித்துள்ளது.

### ஹோட்டல்சேவை விஸ்தரிப்பு

அடுத்து இவ்வுல்லாசப் பிரயாணத் தொழிலை விருத்தி செய்வதற்கு சபைமேற்

### பொழுதுபோக்கு நிலையங்கள்

ஹோட்டல் வசதிகளோடு உல்லாசப் பிரயாணிகள் பொழுதுபோக்கத்தக்க வகையில் வேறுபல வசதிகளும் சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கையின் தெற்குக் கரையோரக் கிராமங்கள் பொழுதுபோக்கு இடங்களாக அமைக்கப்பட்டு வருகின்றன. இவ்வழகிய கரையோரப்பகுதியில் உல்லாசப் பிரயாணிகளுக்குப் பொழுதுபோக்கு குடிசைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. அத்துடன் சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், கலாச்சார நிலையங்கள் ஆகியனவும் இங்கு உல்லாசப் பிரயாணிகளைக் கவரத்தக்கவகையில் அமைக்கப்படுகின்றன. திசமாரகமாவில் 30 ஹோட்டல் அறைகளும் அமருவாவில் 8 புதிய அறைகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன இவற்றைவிட தற்போது இப்பகுதியில் உல்லாசப் பிரயாணிகளுக்காக கடற்கரைக் குடிசைகள் பலவும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மற்றைய கடற்கரைப் பொழுதுபோக்கிடங்களுக்கும் விரைவில் ஹோட்டல் குடிசைகள் முதலியன விரைவில் நிறுவிக் கொடுக்க உல்லாசப் பிரயாணிகள் சபை நடவடிக்கைகள் மேற்கொள்ளவிருக்கிறது.

அடுத்துச் சரித்திரப் புகழ்பெற்ற நகரங்களான அநுராதபுரம், கண்டி, சிகிரியா, பொலநறுவை ஆகியன இங்குவரும் உல்லாசப்

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேயன் தரை எனும் பெயரே காங்கேசன்துறை ஆயிற்று

யாழ்ப்பாணத்தில் முதல் முதல் குடியேறியவர்கள் சேரரே. பிற்காலத்தில் சேரரே மலையாளிகள் என்று அழைக்கப்படுகின்றனர். மலையாளமும் சேர நாடும் ஒன்றே.

மலையாளத்தில் நாயர் என்னும் வகுப்பிற் பல பிரிவுகள் உள. அவைகளுள் காங்கேயன் அல்லது இடைச்சேரி அல்லது பண்டாரி என்ற ஒரு பிரிவுண்டு. நாயர் தாம் ஆதிக்கம் செலுத்திய குறிச்சிகளுககுத் தமது பெயரையே இட்டனர். 'தரை' என்ற பதம் ஓர் அரசியற் பிரிவைக் குறிக்கும். ஆதலின் காங்கேயன் ஆதிக்கம் செலுத்திய தரை காங்கேயன்தரையாயிற்று. காலக்கிரமத்தில் இது காங்கேயன் துறையாய் மாறிற்று. பின்னரே இது ஒரு இயற்கைத் துறை என்று கண்டுபிடிக்கப் பட்டது.

சேந்தான்குளம், உஸ்மான் குளம் ஆதிகாலத்தில் துறைகளாய் இருந்தன. சேந்தான் என்பது முருகனின் இன்னொரு திருநாமம். உஸ்மான் உன்மத்தனின் திரிப்பு. உன்மத்தன் முருகனின் படையின் தளபதி- (வீரபத்திரன்). கொல்லம் மலையாளத்தின் பழங்கால துறைமுகம். அப்பெயரில் இருந்தே கொழும்பு, கொழும்புத்துறை. கோலாலம்பூர் வந்தன. நாயர் தமது பெருத்த துறைகளுக்கு தேவதைகளின் பெயர்களை கொல்லத்துடன் சேர்த்து இட்டார். தமது துறையாகிய கொல்லத்திற்கு பந்தளாயினி கொல்லம் என்பதே முழுப்பெயர். கூலம் என்ற சொல்லில் இருந்தே கொல்லம் பிறந்தது.

வேபரி அல்லது மாதவன் என்பது நாயரில் இன்னொரு பிரிவு. மாவிட்ட புரத்தில் உள்ள காணிகளின் பெரும் பகுதியின் பெயர் வேபரி. இந்த நாயர்கள் வில் வீரர்களாய் இருந்தவர்கள். மாதவர் இல்லம் மாதவர் இட்டம் ஆகிய பின்புரம் சேர்க்கப்பட்டு மாவிட்டபுரம் ஆயிற்று. (ல் காலக்கிரமத்தில் ட் ஆகும் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்),

மேலும் கீரிமலை என்ற பெயர் நேரிமலை என்ற சொல்லில் இருந்து வந்த திரிபே பல ஊற்றுக்கள் கொண்ட மலையின் பெயர் நேரிமலையல்லவா?

யாழ்ப்பாண சரித்திர ஏடுகளின்படி முதன்முதல் கடற்தொழிலில் ஈடுபட்டவர்கள் மூக்கையரே. அவரின் பின் முக்குவர்கள் அத்தொழிலைச் செய்தார்கள். பட்டர் வகுப்பு பிராமணர்கள் மூக்கையரிலிருந்து தோன்றியவர்களே. மீன் பிடிக்கும் தொழிலையுடைய மூக்கையர் குலத்தில் இருந்த சிலரை, வதிராச சுவாமி பட்டர் பிராமணர்களாக மாற்றிய பொழுது அவர்கள் தமது குலத்தொழிலை இழந்தார்கள். அவர்களுக்குப் பொருளுதவி அளிக்கும்பொருட்டு சுவாமி இவர்களுக்கு கத்தரிக்காய் விதைகளைக் கொடுத்து அவைகளை விளைவித்து சீவிக்கும்படி பணித்தார். பட்டர் வகுப்பு பிராமணர்களின் 'மட்' உடுப்பி என்ற ஊரில் இருந்தது. இதனால் 'மட்' என்னும் இடத்தில் விளைந்த கத்தரிக்காய் மட்டி அல்லது வதிராசகாய் என்று அழைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மட்டுவில் வதிரி என்ற பெயர்கள் பட்டர் பிராமணர்கள் வாழ்ந்ததால் வந்திருக்கக் கூடாதா? அவர்களுடைய 'மட்' மாதகலில் இருந்திருக்காதா? இப்பிராமணர்கள் நாயர் குலத்தில்தான் பெண் எடுப்பவர்கள்.

இலங்கையில் முக்குவர் சிங்களப் பிரதேசத்தில் வாகை என்ற சாதியாய் மாறினர். பின்பு அகம்படி என்று அழைக்கப்படுகின்றனர். கரையர் என்ற பதம் கரைநாட்டில் வாழ்ந்தவர்களைக் குறிக்குமே தவிர மீன் பிடிப்பவரை அன்று. மறவருள் ஒரு பகுதி கரையாளன் என அழைக்கப்படுவர். பிரித்தானியர் செய்த முதல் குடிமதிப்பில் இப்பொழுது வெள்ளாளர் அல்லது கமம் செய்பவர் என்று கூறப்படுவோர் சிலர் மறவர் என்றும் அகம்படி என்றும் கூறப்பட்டுள்ளது.

நாயர்களின் இஷ்ட தேவதைகள் முருகன், பகவதி, ஐயப்பன் ஆகியோர். அத்துடன் நாகவழிபாடும் செய்தனர். பகவதி கோயில்களில் பூசைசெய்த நாயர்கள் குளக்கரை என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் இருந்த இடங்கள் இப்பொழுது ஓடக்கரை என்று அழைக்கப்படலாம்.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் வந்து இறங்கிய பொழுது எமது படைவீரர்களுக்கு உற்சாகமளித்துத் தலைமையும் தாங்கியவர் ஒரு யோகியே. போர்த்துக்கேயர் ஆட்சியில் ஊர் ஊராகச் சென்று சூலத்தைக் காட்டிப் பூசை செய்தவர்களும் இந்து மதத்தைச் காப்பாற்றியவர்களும் யோகிக் குருக்களே, யோகிக் குருக்கள் மலையாளத்தில் நாடோடிகளாய்க் காளிக்குப் பூசை செய்தவர்கள். இதேநேரத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த பிராமணர்கள் கத்தோலிக்கராய் மாறினார்கள். யாழ்ப்பாண அரசனைக் காட்டிக்கொடுத்தவரும் ஒரு பிராமணரே!

ஊர்ப்பெயர்களில் இருந்தே யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பிராமண குலங்களை அறிய முடியும். சீவல்லி தம்பால, பட்டர் என்ற பிராமணர்களே யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்கள். சீவல்லி அச்சுவேலியிலும், தம்பால தம்பாலையிலும், பட்டர் மாதகல், உடுப்பிட்டி மட்டுவில் போன்ற இடங்களிலும் வாழ்ந்தவர்கள். இவர்கள் நிலச் சொந்தக்காரராய் வாழ்ந்திருக்கலாம். சீவல்லி பிராமணர்கள் துளு வெள்ளாளர்களுக்குள் மணக்கும் வழக்கமும், பட்டர் நாயர்குலத்தில் பெண்தேடும் வழக்கமும், தெலுங்குப் பிராமணர்கள் வேறுசாதிகளில் இருந்து பிராமணர்கள் ஆக்கப்பட்டார்கள் என்பதும் உண்மையே. பிராமணர்கள் போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கராயும், ஒல்லாந்தர் காலத்தில்கிறீஸ்தவர்களாயும் மாறினர் என்றால் ஆங்கிலேயர் கடைசிக் காலத்தில் எந்தச் சாதியில் புகுந்தார்கள். எப்படி இவர்கள் சைவர்களாக மாறியிருக்க முடியும்?

நாடோடிகளாய் வீரபத்திரருக்குத் துதிபாடி கிராமம் கிராமமாய் அலைபவர். ஆனால் இலங்கையிலே கரையோரப்பகுதிகளில் ஆதிகாலம் தொட்டு வீரபத்திர ஆலயங்களிருந்தன. வீரபத்திரனைக் கடலுக்குத் தெய்வமாகச் சிங்கள சரித்திர ஏடுகள் குறிக்கின்றன.

கயா இந்துக்களுக்குப்புனிதமானது. புத்தகயா இதன் அருகில் உள்ளது. கயாவிலி

**கே பத்மநாதன்**

ருந்து கொண்டு வரப்பட்ட விக்கினேஸ்வர விக்கிரகம் கஸாத் பிள்ளையார் என்று அழைக்கப்படுவதில் என்ன தப்பு?

மேலும் காங்கேயன்துறைப் பகுதியில் ஊர்ப்பெயர்களை ஆராய்ந்தால் போயிட்டி, பூவண்டான என்ற நாயர்குலம் வசித்த இடம், இவர்கள் பூமாலை கட்டுபவர்.

தாயிட்டி ஒரு தாயின்வழி வந்தோர் வசித்த இடம். நாயர்குலத்தில் ஒருதாய் வழிவந்தோர் ஒரு குலமாகக் கருதப்பட்டார்கள். அக்குலத்துககுத் தலைவன் காத்தாவு என்று அழைக்கப்பட்டான். கடவை என்றசொல் க்த்தாவுவில் இருந்து தோன்றியிருக்கலாம், இல்லங்கள் இட்டங்களாயின.

ஊரண்— நல்ல தண்ணீர் உடையதடாகத்தையுடைய ஊர்-

மயிலிட்டி— மேலவர் அல்லது மேனன் என்ற நாயர் குலத்தவர்இருந்தஇடம்ஒரு நாயர்மேலவர் ஆக்கப்படும் போது அவருக்கு எழுத்தாணியும் பனையேடும் வழங்கப்படும். யாழ்ப்பாணத்தில் உள்ள வெள்ளாளர் ஒல்லாந்தர் காலத்தில்கூட ஒரு எழுத்தாணியையும் ஏட்டையும் தமது மடியில் வைத்திருந்தார்கள்.

தொண்டைமன்னார்— துறைமுகப் பட்டினங்கள் தொண்டி என்று அழைக்கப்பட்டன. உதாரணம்— சேரன் தொண்டி, பாண்டியன் தொண்டி. மேலும்சேக்கிழார் தம்பி பாலறாவயர்க்கு 'தொண்டமான்' என்ற பட்டமும் தொண்டை மண்டலம் நின்று காத்த பெருமாள்' என்ற பட்டமும் கொடுக்கப்பட்டன என்று உமாபதி சிவம் சேக்கிழார் புராணத்தில் கூறியிருக்கிறார். ஆதலால் தொண்டைமான் என்ற பட்டம் பெற்றவர்கள் தொண்டை மன்னர்கள் ஆகமாட்டார்.

வல்வெட்டி— ஒல்லாந்தர் காலத்திலும் யாழ்ப்பாண உயர்குலப்பெண்கள் உட்பட யாவரும் இடுப்பின் மேல் எவ்வித ஆடையும் அணியவில்லை. மலையாளப் பெண்களின் வழக்கமும் முற்காலத்தில் இவ்வாறே அமைந்திருந்தது. ஆனால் அவர்கள் கழுத்தைச்சுற்றி தொங்கவிடும் ஆடையொன்றை அணிவது வழக்கம். இந்த ஆடை வல்லவட்டு அல்லது வல்லவாட்டு என்று அழைக்கப்பட்டது. உயர்வகைப் புடவை இறக்குமதி செய்த இடமாக முற்காலத்தில் வல்வெட்டி இருந்தது.

**எடுத்தாண்ட நூல்கள்**


Malabar and its folk- T K G Panickar

Malabar district Gayetteer Government of India

Thurston's Castes and Tribes of South India Thurston

Madurai Lexicon

Queroz-Conquest of Ceylon

Baldeus Account of Jaffna. Patars.

The Ceylon (British) Gazetteer

History of Jaffna -Various- Tamil Authors.


# குரக்கன் துறையும் வீரசைவமும்

சங்கமர் பண்டாரங்கள் அல்லர் என கடந்த வாரம் ஈழநாடு இதழில்வெளியான கட்டுரையில் திரு. வீரகுரு எழுதியிருந்தார். குரக்கன் துறை ஸ்ரீ வீரபத்திர குருசுவாமி கோவில் கும்பாபிடேக மலரின் தொகுப்பாசிரியர், உரும்பராய் இந்துக்கல்லூரி தமிழ்ப்பேராசிரியரும் கனிட்ட அதிபருமானபண்டிதர், வித்துவான், சைவப்புலவர் சிவ. திரு, இ. நவரத்தினக் குருக்கள் என அந்நூலிற் கூறப்பட்டுள்ளது. அப்பெரியார் நூலின்11-ம் பக்கத்தில் ''இவர்கள் ஐயர், அந்தணர், இலிங்கி, பிராஹ்மணன், சங்கமன், பண்டாரம் என்ற நாமங்களினால் அழைக்கப்பட்டனர்' எனக் கூறிச் சங்கமர்கள் பண்டாரங்கள் என்பதை விளக்குகிறார்.

வீரகுரு அவர்கள் தமது கட்டுரையில் 'நடமாடும் கோவில்கள் வீரசைவக் குருமார் இலிங்கி (இலிங்கம்) கட்டிக்கொள்ளும் தபஸ்வி)' என விளக்குகிறார் ஆசிரியர் திரு. இ. நவரத்தினம் அவர்களால் எழுதப்பட்டு வீரகுரு அவர்களின் ஆசீர்வாதத்துடன் 1952-ம்ஆண்டில் வெளிவந்த 'கீரிமலைவரலாறு'என்னும் நூலில் 12-ம் பக்கத்தில் 'பண்டைய திருத்தம்பலேச்சிரத்தில் குடியேறியிருந்தமக்கள் பெரும்பாலும் தபஸ்விகளேயாவர். அவர்களேபின் தபசி- தவசி என்று வழங்கப்பட்டுவந்து இப்போது பண்டாரங்கள் எனப்படுகின்றனர்' எனக் கூறப்பட்டுள்ளது. ஆகவே இலிங்கதாரிகளாகிய தபஸ்விகளும் பண்டாரங்களே. ஆகவே சங்கமர்கள், தபஸ்விகள், பண்டாரங்கள் என்பவர்கள் ஒருகுலத்தவரே.

இவர்களுள் வீரகுரு அவர்களால் 1950-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'வீரசைவம் அல்லது இலிங்காயதம்' என்னும் நூலின் 13-ம் பக்கத்தில் [illegible]யிருப்பது போல், குருநாதர் அநுக்கிரகஞ் செய்துள்ள இஷ்டலிங்கத்தையேயன்றி மற்றமூர்த்திகளைப் பூசியாது எல்லாப் பக்தியையும் சிவலிங்கப் பெருமானிடத்தே வைத்து வாழ்பவர்கள் யாடும் இருப்பார்களாயின் அவர்கள் மட்டுமே வீரசைவத் துறையில் நிற்பவர்களாவர் ஏனையோர் வீரசைவர்களல்லர்.

'கீரிமலை வரலாறு' என்னும்நூலில் திருத்தம் பலேச்சுரம் பற்றிப் புகழ்ந்த அவர்களே 'கும்பாபிடேக மலரில்' 'திருத்தலசுபரமிருந்ததென்பதற்கு ஒரு பழைய அழிபாடுகளுமில்லை' எனக் கூறுகின்றார்கள்.

**ஆலயப் பிரவேசம்**

வருணாச்சிரம நெறிகடந்து ஆலயப்பிரவேசத்துக்கு வழிகாட்டியவன் நான் என வீரகுரு தமது கட்டுரையிற் கூறுகிறார். 1956-ம் ஆண்டில் ஆலயப் பிரவேசத்தை முன்னின்று நடாத்திய பெரியார்கள் பின்

**க. ஏரம்பமூர்த்தி**

நின்று வெற்றிகண்டவனேயன்றி ஆலயப்பிரவேசத்துக்கு வழிகாட்டியவன் நானல்ல. ஆனால் பலாத்கார முறையில் ஆலயப்பிரவேசம் செய்ய எததனிப்பவர்களை வெறுக்கிறேன்.

1950-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'வீரசைவம்' என்னும் நூலில் 15-ம், 16ம் பக்கங்களில் ''தீண்டாமை என்னும் கொடிய அநாகரிக வழக்கம் வீரசைவத்தில் இல்லை. பிறப்பினால் உயர்வும் தாழ்வும் இல்லை''; 'ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்' என்னும் பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாக உலகில் விளங்கும் சைவசமயம் வீரசைவமேயாம்'; 'பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஸ்ரீபசவ தேவர் சாதிக்கட்டுப்பாட்டையும், தீண்டாமையையும், மக்களைமக்கள் அடிமைகொள்ளும் மனப்பான்மையையும் வேருடன் களைந்தெறிந்தார்' (குறிப்பு- ஸ்ரீபசவதேவர் கன்னடத்தில் வீர சைவநெறியைப் பரப்பியவர்)'' என்றெல்லாம் கூறிய வீரகுரு இன்று தமது குருநாதரை உதாசினம்செய்து மது கொள்கையை மாற்றிக்கொண்டு என்னை வருணாசிரமதர்மத்தை மீறியவன் என இகழ்கின்றார். ஆனால்நானோ இன்றும் கொள்கையைமாற்றாது உழைக்கின்றேன்.

திரு. நவரத்தினக்குருக்களுக்கு வீரபத்திரர் கோவிலில் 1968-ம் ஆண்டில்நடைபெற்ற கும்பாபிடேகத்துக்கும் தொடர்பில்லை என்கிறார் வீரகுரு. 1968-ம்ஆண்டில் வெளிவந்த கும்பாபிடேக மலரைத் தொகுத்தவர் உரும்பராய் இந்துக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியரும் கனிட்டஅதிபருமான பண்டிதர் வித்துவான் சைவப்புலவர் சிவ திரு. இ. நவரத்தினக்குருக்கள் என அந்நூலிற் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அப்பெரியாரின் புகைப்படத்துக்கும் வீரகுரு அவர்களின் புகைப்படத்துக்கும் நூலில் முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது.

1943-ம் ஆண்டில் நடைபெற்ற கும்பாபிடேகம் பற்றி நான் மறைத்துவிட்டதாகக் கூறுகிறார் வீரகுரு அவர்கள். அன்று நடைபெற்ற கும்பாபிடேகத்துக்கும் நாம் எடுத்துக்கொண்ட 'குரக்கன்துறை' என்னும் விடயத்துக்கும் தொடர்பு இல்லையே. 1943-ல் வீரபத்திரர் கோவில் எழுவர்வளவு ஸ்ரீவீரபத்திரர் கோவிலாக இருந்தது. 1968-ம் ஆண்டிலேயே குரக்கன்துறை ஸ்ரீ வீரபத்திரகுருசுவாமி கோவில் எனப் புது நாமம் பெற்றது.

**கோவிற்கடவையும் குரக்கன்துறையும்**

வீரகுரு கூறுவதைக் கவனித்தால் 1966-ம் ஆண்டில் வெளிவந்த 'கோவிற்கடவை' என்னும் நூல்

[14ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ... நாணம் உடையாட்கு அணியெவனே...

அச்சம், மடம், நாணம் பயிர்ப்புஎன்பன நங்கையர்க்குரிய நான்கு குணங்கள். இவற்றில் நாணம் சிறப்புடையது. தன்னிகரில்லாதது. நாணம் இல்லாத பெண் சுவையில்லாத காப்பியம் போல்வாள். அவளுக்குப் பெருமையளிப்பது நாணம் என்னும் பண்பே,

நாணத்தின் சிறப்பினையும் அதன் மாண்பினையும் சிலப்பதிகாரம், திருக்குறள் போன்ற நம் பண்டைய இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இவ்விலக்கியங்கள் வாயிலாக அக்காலமகளிர் நாணத்தையும் கற்பையும் கண்ணை இமை காப்பது போன்று காத்து வந்தனர் என்பதை நாம் அறிகிதடைகிறுன் பதிசொற் தவறுத கண்ணகி அவனேடு தானும் மதுரைக்குச் செல்லப் புறப்படுகிருள். தன் மலையத்தனை செல்வத்தையும் இழந்து, உற்ருர் சுற்றத்தினரையும் துறந்து கற்பின் செல்வியாம் கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரை செல்லும்கோவலன் மாதவிபாற்சென்று வாழ்ந்ரும். சிலப்பதிகாரத் தலைவன் கோவலன் கற்புக்கரசியாம் கண்ணகியை விடுத்து விலைமாதாகிய மாதவிபால் மையல்கொண்டு அவளுடன் சிலகாலம் இன்பமாகக் காலம் கழித்துவிட்டு அதனுல் தன் பொருளெல்லாம் இழந்து வெறுங்கையோடு திரும்பிக் கண்ணகியை வந்தந்த வாழ்வையும், கண்ணகி அக்காலத்தில் அடைந்த ஆற்ருெணுத் துயரத்தையும் நினைந்து உள்ளம் கலங்கினுன். நாணத்துக்கு நல்லிலக்கணமானகண்ணகியை நோக்கிய அவன்

'நாணமும் மடனும்
நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும்
பெருந்துணையாகக்
கொண்டு...'

என அவளைப் போற்றினுன் இளங்கோவடிகள் மட்டுமன்றி வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த வள்ளுவப் பெருந்தகையும் தனது குறுகத் தறித்த குறளில் நாணமாம் நற்பண்பை குறிப்பிடத் தவறவில்லை.

பிணையேர் மடநோக்கும்
நாணும் உடையாட்
கணியெவனே
ஏதில தந்து

எனப் பாடியயுள்ளார். இனிய பார்வையும் நாணமும் கொண்ட இந்நங்கைக்கு செயற்கை அணிகளைச் செய்து அணிவதேன். எனத்தலைவன் தலைவியைப் பாராட்டுவதாக வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.

இவற்றிலிருந்து பெண்களுக்கே உரியநற்பண்புகளில் ஒன்ருகிய நாணத்தின் சிறப்பு பெறப்படுகிறது.

# நெல்லி ரசம்

தேவையானவை
நெல்லிக்காய்
வெள்ளைச்சீனி
சிற்றிக் அமிலம்
பொட்டாசியம் மொற்ற
பைசல்பைற்

செய்கைமுறை:-

நன்ருக முற்றிய நெல்லிக் கனிகளை எடுத்து உரலில் போட்டு துவைத்து அதன் சாற்றையெடுக்க வேண்டும். ஒருருத்தல் நெல்லிக்கனியாலுல் ஒருபைந்து கொதித்து ஆறிய நீரைவிட்டுச் சாற்றைத்தூயதுணியில் வடிகட்டி எடுக்கவேண்டும். எடுக்கும் ஒவ்வொரு போத்தல் சாற்றுக்கும் 1ருத்தல் வெள்ளைச் சீனியையும்ஒரு தேக்கரண்டி சிற்றிக் அமிலத்தையும் சேர்த்து நன்ருகக் கலக்கல்வேண்டும். இந்த சிற்றிக் அமிலம் கிடைக்காத பட்சத்து இரு தேக்கரண்டி நீர் கலக்காத எலுமிச்சம்பழச் சாற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். இக்கலவை பழுதடையாது வருடக்கணக்காக வைத்துப் பயன்படுத்த இத்துடன் ஒவ்வொரு போத்தல் நெல்லிச் சாற்றுக்கும் 10 துளிகள் பொட்டாசியம் மெற்றபைசல்பையிற்'ரை Potassium Metabisulphite) கொதித்தாறிய ஒரு அவுன்ஸ் நீரில் கலந்து சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இவை யாவற்றையும் சேர்த்து நன்ருகக் கலக்கிய

(14-ம் பக்கம் பார்க்க)

# குழவி பற்றி

—சரோஜினி சங்கர்—

**சிரிப்பும் அழுகையும்**

குழந்தையின் அழுகை அதன் குரல்வளையை வளர்ச்சிபெறச் செய்கிறது. வாய்விட்டுச் சிரிக்கச் செய்வது சுவாசகோசத்தைக்காற்றினுல் நிரப்பிச் சுத்தப்படுத்துகிறது. குழந்தையைச் சிரிக்கச் செய்யவேண்டியதுதான் நம்முடைய வேலை. அழுவதை அதுவே கவனித்துக் கொள்ளும்

ஃ

**கண் பார்வை**

குழந்தையின் இரண்டு கண்களும் ஆரம்பத்தில் ஏககாலத்தில் ஒன்றையேபார்ப்பது இல்லை அதனுல் ஒன்றரைக் கண்போல் தோற்றமளிக்கும். ஒரு வயதாகும்வரை இரண்டு கண்களையும் சேர்ந்தாற்போல் உபயோகிக்க குழந்தைக்குத் தெரிவது இல்லை. பின்னரே கற்றுக்கொள்கிறது.

ஃ

**அவசர முடிவு**

பிறந்த குழந்தைகளுக்கு சில நாட்களுக்குக் காது கேட்பதில்லை. இதைக்கொண்டு அவை செவிடு என்று முடிவு செய்துவிடக் கூடாது. காதிலே இருக்கும் திரவம்போனபின்னர்தான் காது கேட்கும். இதற்கு சில நாள் ஆகும்.

ஃ

**வயிற்றில் பூச்சி**

அதிகப் பசி, தூங்கும் போது பற்களைக் கடித்தல், தூக்கத்தில் முனகுதல், கண்களைச் சுற்றிக் கருவளையம் ஆகியவை குழந்யின் வயிற்றில் பூச்சி இருப்பதற்கு அறிகுறி.

ஃ

**அறிவுத் தொடர்பு**

குட்டையாகவும் பருமனுகவும் உள்ள குழந்தைகள் விரைவில் நடக்கக் கற்றுக்கொண்டுவிடும். அறிவுக்கூர்மைக்கும்நடைக்கும் தொடர்புண்டு. அறிவாளிக் குழந்தைகள் விரைவில் நடக்கத் தொடங்கிவிடும், இரண்டுவயது வரை குழந்தை நடக்காமல் இருந்தால்தான் கவலைப்படவேண்டும்.



குடும்பச்சுடர்

தயாரிப்பு: - குணம்

முப்பது ஆண்டுகளுக்கு மேல்
தங்க, வைரநகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்த நாணயமுள்ள ஸ்தாபனம்
ராணி ஆபரண மாளிகை
224, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நவீன - நாகரிக அமைப்புள்ள
தங்க வைர நகைகளைப் பெறுவதற்கு
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
மனேஜர்: A. KARAPUTUGALA

# புற ஆற்றலை வளர்க்கும் 'பாலபவனம்'



பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் குழந்தைகள் தமக்கு வேண்டிய சகல அறிவையும் அங்கு 6 அல்லது 7 மணித்தியாலங்களுள் பெற்றுவிடுகிருர்கள் என நம்நாட்டில் பெற்ருேர்கள் கருதுகிருர்கள். ஆனுல் இது தவருன கருத்தாகும். குழந்தைகளைப் படிப்புக்காக அனுப்பும் பல பள்ளிக்கூடங்களில் பாடத்திட்டத்துக்குப் புறம்பாக அமைந்த பயிற்சிகளைக் குழந்தைகள் பெறுவதற்கு உரிய வசதிகளே இல்லை.

**குழந்தையின் புறஆற்றலை வளர்க்க**

குழந்தைகளின் உடல், மனம் இரண்டும் சிறந்த முறையில் வளரப் பாடங்களுக்குப் புறம்பான வசதிகளும் பயிற்சிகளும் மிக அவசியம்- தங்கள் பாடத்திட்டங்களுக்குப் புறம்பாகத்தங்கள் ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளவோ வெளிப்படுத்தவோ சாதாரண பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்களுக்கு வசதியே இல்லை. இதனுல்குழந்தைகளின் இயற்கைஆற்றல்கள் பெரும்பாலானமாணவர்களிடம் மடிந்துவிடுகின்றன. இத்தகைய புறஆற்றல்களைப்பயில்வித்து வளர்க்க வசதி அவசியம் என்பதை எல்லாப் பள்ளி நிர்வாகிகளும் நன்ருய் உணர்ந்திருந்தபோதிலும் இத்தகைய வசதிகளை அமைத்துத் தருவதற்கு வேண்டிய சௌகரியங்கள் அவர்களுக்கு இல்லை. எனவே பள்ளிக்கூட நேரத்துக்குப் பின்னுல் மாணவர்கள் சென்று தங்கள் சிறப்பாற்றல்களை முன்னேற்றிக்கொள்ள வசதியுள்ள நிறுவனங்களை அரசோ அல்லதுதனியாரோ அமைத்துக் கொடுக்கவேண்டும். இங்கு மாணவர்களுக்கு இன்பமாக பொழுதைப் போக்கும் வசதியும் அத்துடன் சிறப்பாற்றல்களை வளர்த்துக்கொள்ளும் வசதியும் இருக்கவேண்டும்.

**'பாலபவனம்'**

இவ்வாறு குழந்தைகள் அறிவும், சரியான ஓய்வும், ஓய்வுநேரப் பயிற்சியும் பெறத்தக்க சிறந்த வாய்ப்புக்கள் அமைந்த நிறுவனம் டில்லியில் 'பாலபவனம்' என்ற பெயரில் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. இப்பெரிய நிறுவனத்தில் குழந்தைகள் தங்கள்தங்கள்போக்குக்கு ஏற்றபடி கத்தி, உளி,

— கே. ஜி. —

ரம்பம், சாயம், பூசும் தூரிகை, சோதனைக்குழாய், ரசாயனப்பொருள் இவற்றுள் தாங்கள் இஷ்டப்பட்டவற்றை பயன்படுத்திச் செயல்படுத்தித் தங்கள் சிறப்பாற்றல்களை வளர்த்துக்கொளகிருர்கள. இங்கு குழந்தைகளுக்கு உடற்பயிற்சி அவசியமென்பதை உணர்ந்து அவர்களுக்குத் தகுந்த சகல விளையாட்டு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முழுச் சுதந்திரத்தோடும் குழந்தைகள இவற்றில் ஈடுபடுகிருர்கள.

இந்த 'பாலவன' நிர்வாகிகள். அழகும் தூய்மையும் நிறைந்த சூழ்நிலை ஒன்றைப் பாலபவனில் அமைத்துக் கொடுத்துளளதோடு நின்றுவிடாது நுண்கலை, தொழில்கள, விஞ்ஞானம், இசை, நாட்டியம், சட்டிபானை வனைதல் முதலிய வித்தைகளுக்கு வேண்டிய பயிற்சிகளையும் இங்கே அளிக்கிருர்கள். இவற்றில் குழந்தைகள தாங்கள விரும்பும் கலையை நல்ல முறையில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களிடம் பயில்கிருர்கள. இதனுல் முன்னேறி இறுதியில் குழந்தை ஒரு கலையிலோ தொழிலிலோ நிபுணத்துவம் பெற இந்த நிறுவனம் உதவுகிறது.

**பாலபவனத்திட்டம்**

இக்கலைத் தொழில்களால் குழந்தைகள நன்மையடைய வேண்டுமென்பதற்காக ஒரு திட்டம் இப்பாலபவனத்தில் ஏற்படுத்தப்பட்டுளளது. ஒவ்வொரு குழந்தையும் ஏதாவது இருஅம்சங்களைப் பயில முதலில் பெயர் கொடுக்க வேண்டும். தினமும் நாலு மாதங்களுக்கு இரண்டு மணித்தியாலங்கள பயில வேண்டும். நாலு மாதப் பயிற்சியின்பின் குழந்தைகள வெளியேறவேண்டுமென்ப

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேவாரத் திருவமுது

# வயல் சூழ் திருக்கலய நல்லூர்

— க. வை. ஆ. சர்மா —

கழுநீர்கவர்
கழனிக்கலயநல்லூர்

பெற்றிமையொன் றறியாத
தக்கனது வேள்விப்
பெருந்தேவர் சிரந்
தோள்பற்
கரங்கண்பீ டழியச்
செற்றுமதிக் கலைசிதையத்
திருவிரலால் தேய்வித்(து)
அருள்பெருகு சிவபெரு
மான்
சேர்தரும்ஊர் வினவில்
தெற்றுகொடி முல்லையொடு
மல்லிகைசெண் பகமுந்
திரைபொருது வருபுனல்
சேர்
அரிசிலின்தென்
கரைமேல்
கற்றினநன் கரும்பின்முலை
கறிகற்கக் கறவை

கமழ்கழுநீர் கவர்கழனிக்
கலயநல்லூர் காணே.

தவப்பேற்றின் பெருமையை உணராமல் இறுமாப்புக்கொண்டான் தட்சப்பிரஜாபதி. அவனே, பிரமதேவனது புதல்வன். உபப்பிரமாக்களுள் ஒருவன். சிவபிரானைக் குறித்து அவன்செய்த தவமோ எல்லையற்றது. ஆயினும், அவற்றாலான பயன் என்ன? அகந்தை அவனை விடவில்லை. தவப்பேற்றினால், உலக அன்னை உமாதேவியையே மகளாகப் பெற்று வளர்த்தான்: அதனால் அன்னைபராசக்திக்குத் தாட்சாயணிஎனவும் பெயராயிற்று. முழுமுதற்கடவுளாய் அவனுக்கு வரங்கொடுத்த சிவபிரானையேமருமகனாகவும் பெற்றான். அவ்வாறானபின், சிவபிரானைப் பரம்பொருள் என உணரும் சக்தி அவனை விட்டு விலகியது. அதனால் பரனைப் புறக்கணித்து ஒரு பெரிய யாகஞ் செய்யத் தொடங்கினான். சிவனைத்தவிர எல்லாத் தேவர்களையும் அந்த யாகத்துக்கு அழைத்து அவிர்ப்பாகங் கொடுத்தான். கைலாசபதியானவர் உலகியல் முறையைத் தக்கனுக்கு உணர்த்தத் திருவுளங்கொண்டு வீரபத்திரமூர்த்தியை அனுப்பியருளினார். அவரது வருகையைக் கண்ட தக்கன் அவர் வந்த காரணத்தைக் கேட்டான். சிவபிரானுக்குரிய அவிர்ப்பாகத்தைக் கொடுக்கும்படி கூறியருளினர். அவன்அதனை மறுக்கவே யாக சங்காரந் தொடங்கியது. தக்கனது தலை கொய்யப்பட்டது. இந்திரனது தோள்கள்முறிக்கப்பட்டன. சூரியனுடைய பற்கள் பறிக்கப்பட்டன. அக்கினிதேவனுடைய கரங்கள் வெட்டுண்டன. பகன் எனப்படும் பிறிதொரு சூரியனுடைய கண்கள் பிடுங்கப்பட்டன. சந்திரதேவனது உடல் தேய்க்கப்பட்டது. இவ்வாறு நேர்ந்த அழிவுகளோ அளவற்றன. சிவாபராதம் செய்தவர் மாத்திரமல்ல. சிவாபராதம் செய்வதற்கு உடந்தையாக இருத்தலும் மகா பாதகச் செயல் என்பது தக்கயாக சங்காரத்தினால் உலகிற்கு உணர்த்தியவாறாயிற்று. இவ்வாறு மறக்கருணையினாலும் அவரவர் செய்த தீவினைப்பயனை நுகர்வித்துஆன்மாக்களுக்கெல்லாம் அருள் புரியும் சிவபரம்பொருள் சாந்நித்தியமாகக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஊர் யாது? எனில் —

பின்னிப் படருகின்ற முல்லைக்கொடிகள், மல்லிகை, செண்பகம் என்று சொல்லப்படும் கொடிப்பூக்களைத் திரைகள் கொணடுவந்து ஒதுக்கும் அரிசில் நதியின் தென்கரையிலே பசுக்கன்றுகள் கரும்பின் முளைகளைக் கறித்தபடி தாய்ப் பசுக்களிடம் பால்சுவைக்கவும், கறவைப்பசுக்கள் நறுமணங் கமழும் செங்கழுநீர் ப்பூக்களைக் குதட்டும்படியாகவும் அமைந்த இயற்கை வளத்தோடு கூடிய வயல்சூழ்ந்த திருக்கலயநல்லூராகும்.

---

சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இரவு இன்னும் சிலநிமிடங்களில் குணகரன் வரப்போகிறான். தனது இருகண்களாலும் ஆசைதீர அவனைப் பார்க்கப்போகிறோம் என்று மகிழ்ச்சிக்கடலில் திளைத்திருந்தாள். வீட்டு முற்றத்து மண்டபத்தில் கதிரையைப் போட்டுக்கொண்டு தெருப் பக்கமாக உட்கார்ந்து பாரதிதாசனின், ''குடும்ப விளக்கு'' என்ற கவிதை நாவலை வாசித்துக்கொண்டிருந்தாள். ''கொடு வாளினை எடடா! மிகு கொடியோர் செயலறவே! குகை வாழ் ஒரு புலியே உயர் குண மேவிய தமிழா!'' என்றும் ''நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்'' என்றும் பாரதிதாசனது வார்த்தைகளைக் குணகரன் அடிக்கடி நண்பர்களோடு பேசுவது அவளுக்குத் தெரியும். அவனைப் பார்த்துத்தான் பாரதியையும் பாரதிதாசனையும் அவள் அதிகமாக நேசித்தாள். புத்தகத்தை அடிக்கடி நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். ஆம்...அதன் மட்டையிடுக்கிற்குள்தான் குணகரன் எழுதிய கடிதத்தை வைத்திருந்தாள். மீண்டும் அக்கடிதத்தைப் படிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாள். 'குடும்பவிளக்கின்' பின்புற அட்டையை மெதுவாக அகற்றினாள். உள்ளே பார்த்தாள். அவளுக்கு நெஞ்சு பகீரென்றது. திடுக்குற்றாள். அன்று காலையில் கல்லூரியில் வைத்து வாசித்துவிட்டுப்பத்திரமாக அதற்குள் செருகி வைத்த அக்கடிதத்தை இப்போது காணவில்லை. நன்றாகத் தேடிப்பார்த்தாள். காணவேயில்லை. எங்கே போயிருக்கும்? யோசித்துப் பார்த்தாள். கல்லூரியிலிருந்துவந்ததும் முன்விறாந்தைமேசையில் புத்தகங்களை வைத்துவிட்டு உள்ளே உடை மாறறச் சென்றதும் அப்போது தகப்பனார் பொன்னம்பலம் அந்தப்பக்கமாக வந்ததும் ஞாபகம் வந்தது. ஓ வேளை அவர்தான் எடுத்திருப்பாரோ?...சே! அவருக்கு அட்டைக்குள் கடிதம் இருப்பது எப்படித்தெரியும்? அப்பா வீட்டில் இருக்கிறாரா என்பதை அறிவதற்காக அங்குமிங்கும் தேடிப் பார்த்தாள். அவரைக் காணவேயில்லை, அம்மாவைக் கேட்டாள். எங்கேயாவது சங்கக்கடைக் கூட்டத்திற்குப் போயிருப்பார் என்று கூறினாள். அடடா, இப்போது என்ன செய்வது? கடிதம் அப்பாவின் கையில் அகப்பட்டிருந்தால் இதுவரையில் ஏதாவது அசம்பாவிதம் நேர்ந்திருக்குமே என்று எண்ணி அஞ்சினாள். 'சரி...எதுவானாலும் நடக்கட்டும் என்று மனம்துணிந்தவளாக மீண்டும் நாற்காலியில் உட்கார்ந்தாள். புத்தகத்தில் அவள் மனம் செல்லவேயில்லை.

0 0 0

'இந்த அலவாங்கால் ஒரே அடி...ம் ... மண்டையைப்பார்த்துப் போடுங்கடா... மடையன்... இன்னோடு ஒழிஞ்சான். தரித்திரநாய் ... மீன்காரியின்ரை மேனுக்குக் காதலாம்காதல். ...அதுவும் என்ரை மேளோடையோ?... இந்தப் பொன்னம்பலம் ஆரெண்டதை நாளைக்கு இந்த ஊரறியட்டும்...டேய்...சின்னான்... நல்லான்ரை மகனை உனக்குத் தெரியும் தானேடா...இதாலேதான் வருவன்''... புளியமரத்துக்குப்பின்னால் பொன்னம்பலத்தின் குரல் கர்ணகடூரமாக ஒலித்தது. ஒரு கையில் ஐந்து பட்டரி டோச் லைட்டும் மறு கையில் கருணைகரனின் காதல் கடிதமுமாக உறுமி நின்ற புலியைப்போல அங்குமிங்கும் அந்த அமாவாசை இருளில் நடுறோட்டில் நடந்துகொண்டிருந்தார் பொன்னம்பலம். அவர்பருக்கிய அரைப்போத்தல் சாராயத்துக்காக தன்னுடையஇனத்தைச்சேர்ந்த நல்லானின் மகன் என்பதையும் பாராமல் சின்னான் கையில்பெரிய இரும்பு அலவாங்குடன்குணகரனை அடிப்பதற்காகப் புளியமரத்தின் பின்னால் காவல் இருந்தான். புளியமரக்காற்றுப் படப்பட அவனது வயிறு எரிவெடுத்து மூளையெல்லாம் வெறியேறியது. குணகரனை அடித்து விழுத்துவதையே குறியாகக் கொண்டு ''அதெல்லாம நான் கவனிக்கிறன் நயினார்...'' என்று முணுமுணுத்தான். பொன்னம்பலம் மீண்டும் ஒரு தடவை கசங்கிப்போய்த் தனது கையில் இருந்த கடிதத்தைப் பிரித்து டோச் வெளிச்சத்தில் படித்துப் பார்த்தார்.

அன்புள்ள சந்திரா,

இன்று இரவு யாழ் தேவியில் வீடு வருகிறேன். உனது தந்தையாரிடம் சம்மதம் பெற்றுவிட்டாயா? அவரது நாட்டாண்மைத்தனமும்சாதித்தடிப்பும் எனக்கு நன்கு தெரியும். இந்த வானமே இடிந்து உச்சியில் வீழ்ந்தாலும் எமது காதலை எவராலும் அசைக்கமுடியாது. கலங்காதே கண்ணே... தெருவைத் தாண்டி என் வீடு செல்லும்போது நிலவைப் பழிக்கும் உன்குளிர் முகத்தில் புன்னகையை வரவழைத்துவிட்டேஅப்பால் செல்வேன். தவறாமல் வாசலருகே காத்திரு கண்ணே...

உன் அன்புள்ள
காதலன்,
குணகரன்.

''அயோக்கியப் பயலுக்கு அழிவு நெருங்கிவிட்டது.... என்று மனம் குமிறினர், பொன்னம்பலம் தூரத்தில் வெளிச்சம் தெரிந்தது. கார் ஒன்று வந்துகொண்டிருந்தது ''ஒருவேளை காரில் வருவானோ...? சே! கால் நடையைத் தவிர வேறு கதியில்லை அவனுக்கு'' என்று நினைத்தார்பொன்னம்பலம். ''ஆ! அதோ வருகிறான் போலத் தெரிகிறது. தூரத்தில் பூட்ஸ் சத்தம் கேட்கிறது; நல்லவேளை...சுருட்டுப் பற்றவைக்கத் தீப்பெட்டி எடுக்க மேசையண்டை சென்ற நான் காத்திராப் பிரகாரமாகச் சந்திராவின் புத்தகத்தைக்கீழே தட்டி விழுத்தியிராவிட்டால் புத்தகத்தின்பின்மட்டை கழன்று இந்தக் கள்ளக்காதல் கடிதம் தன் கைக்கு வந்திருக்குமா? தன் மானந்தான் கப்பலேறாமல் காப்பாற்றப் பட்டிருக்குமா?'' என்று பொன்னம்பலத்தார் சிந்தித்தார். இதுபற்றிச் சந்திராவைஅவர் எதுவுமே கேட்க விரும்பவில்லை. கேட்பதில் பயனுமில்லை என்பதும் அவருக்குத் தெரியும் எனவே தான் அந்தப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தது அவருக்குத்தெரியாதபடி செய்துவிட்டுக் கடிதத்துடன் தனது நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடலானார். இப்படி எத்தனையோபேரை ஆட்களை வைத்து அடிப்பித்த அவருக்கு இது மட்டும் என்ன பிரமாதம்...?

''ஆ... ஐயோ! அம்மா!'' பலமான அலறல் ஒலி. ஆம்... சின்னான்குணகரனை அடித்துவிட்டான். டோச் வெளிச்சத்தில் குணகரனின் முகத்தைக் கண்ட பொன்னம்பலம் அவனது மண்டையிலிருந்து இரத்தம் ஆறாகப் பாய்வதைப் பார்த்துச் சிரித்தார். ''வாடா சின்னான்...'' அவர் போய்விட்டார்.

இருல் பொரித்துவைத்து மகனின் வரவுக்காகக் காத்திருந்த சொக்கட்டி நன்றாக அயர்ந்து, உறங்கிக்கொண்டிருந்தாள். நல்லானும் இரவு சுருப்பொரியலோடை ஒரு 'பிடி' பிடித்துவிட்டுப் படுத்து உறங்கினான். மகன் இராத்திரி வரவில்லையாக்கும் என்று நினைத்தான்.

மறுநாள் காலை புளியமரத்தடியில் குணகரன் கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறான் என்றசெய்திகேட்டுச் சொக்கட்டிஎழுந்திருக்கவேயில்லை. நல்லான்என்னசெய்வான். பாவம்... மேல் விசாரணை செய்யவோ பொலிசாரின் உதவியை நாடிக் கொலையாளியைக் கண்டுபிடிக்கவோ பணவசதியில்லை. மனவலுவுமில்லை

குணகரனின் மரணச் செய்திகேட்டுச் சந்திரா அனைத்தையும்புரிந்துகொண்டாள். இனிமேல்திருமணமே செய்துகொள்வதில்லை எனத் தீர்மானித்தாள். தந்தையை அவள் எதுவுமே கேட்கவில்லை. அவரும் அவளை வற்புறுத்தவில்லை, இன்னும் சந்திரா கன்னிதான். அவளுடைய [illegible] முடிவேயில்லை.

(யாவும் கற்பனை)

---

## இலங்கை......

(9ம் பக்கத் தொடர்ச்சி)

விடப்போவதில்லை'' வடிவேலு பதட்டமின்றிப் பதில்சொன்னான்.

''கூட்டாட்சி பிறகும்வந்தால் ஏதேன் நன்மைகிடைக்காதா?''

''தேர்தலால் வரும் இதே அரசியலமைப்புகளுள் நின்றுகொண்டுஎன்னதான் செய்ய முடியும் ... கேரளத்திலும் மேற்கு வங்காளத்திலும் நடப்பதைப் பார்க்கேலையா?''

''அங்கயெல்லாம் இடதுசாரி ஆட்சிதானே ஏற்பட்டிருக்கு. சோஷலிஸத்தை ஏன் ஏற்படுத்தமுடியாது?''

''...தற்போதைய அரசியலமைப்பையும் அதன் கீழ் ஆட்சி செலுத்தும் வர்கத்தையும் வைத்துக்கொண்டு எவற்றையும் சாதிக்கமுடியாது. ஆயுதப் புரட்சி இல்லாமல் தற்போது ஆளும் வர்க்கத்தை ஒழித்துவிடலாமென்று நினைப்பது பகற்கனவு.''

இந்தமாதிரி தமது ''நக்ஸலைட்'' இயக்கப் பிரசாரமாகவே கணேசலிங்கன் நாவலை எழுதியிருக்கிறார். இலக்கியப் பயனற்ற நாவல். யாழ்ப்பாணத்து சாதிவித்தியாசத்தைப்பற்றி எழுத வந்த ஆசிரியருக்கு மேற்குவங்காளத்திலும் நிலவும் அரசியல் விவகாரம் எதற்கோ தெரியவில்லை.

---

## பத்து வருட......

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரயாணிகள் பார்வையில் இருந்து ஒருபொழுதும் தவறுவதில்லை, இந்த இடங்களில் தற்போது உல்லாசப் பிரயாணிகள் தங்கிப் பார்வையிடத் தக்கவாறு வசதிகள் செய்யப்பட்டுள்ள போதும் சபைஇப்பிரதேசங்களில் முகாமிட்டுப் பொழுதுபோக்கத்தக்க வசதிகளையும் செய்துகொடுக்கவுள்ளது.

இவ்வாறு ஹோட்டல் சேவை விஸ்தரிப்பு, கடற்கரையோரப் பொழுதுபோக்குக் குடிசைகள் அமைத்தல், சிற்றுண்டிச்சாலைகள் கடைகள், கலாச்சாரப் பொழுதுபோக்கு நிலையங்கள் நிர்மாணித்தல், சரித்திரப் புகழ்பெற்ற நகரங்களில் கூடிய முகாம் வசதிகள் செய்து கொடுத்தல் வாகன வசதிகள், விளம்பர சேவைகள், வரவேற்புச் சேவைகள் போன்ற இன்னோரன்ன பல பல்முக அபிவிருத்தி வேலைகளை இலங்கை உல்லாசப் பிரயாணிகள்சபை மேற்கொண்டு செயல்படுத்திவருவதால் உல்லாசப் பிரயாணத் தொழில் துரிதவளர்ச்சியடைந்து வருகிறது. இத்தொழிலபிவிருத்திக்கான 10 வருடதிட்ட நிகழ்ச்சிகள் 1976ல் பூர்த்தியானல் 307,000 உல்லாசப் பிரயாணிகளை வரவேற்கத் தக்கவகையில் இலங்கையமையும் எனத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

வளர்ச்சியடைந்துவரும் இவ்வுல்லாசப் பிரயாணத் தொழில்மூலம் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதோடு வேலையற்றபலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது. நாட்டின் கலை, கலாச்சாரப் பண்புகளும் பிறநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் வருகையால் அவர்கள்மூலம் பிறநாடுகளுக்குப் பரவுகிறது. இதனால் பிறநாட்டாருக்கும் நம்மருக்குமிடையே நட்புறவும் நல்லெண்ணமும் கலை, கலாச்சாரத் தொடர்புகளும் வளர்ச்சியடைகின்றன

---

## உடம்பு
## ஒரு சரக்கு பை

துன்பச் சரக்குகளை வைத்திருக்கும் ஒரு சரக்குப்பைதான் இந்த உடம்பு. நமது உடம்பு 'மெய்' என்று நினையாமல் அதை ஒரு 'பொய்' என்று மறந்துவிட்டு வாழமுடியாமல் தவிர்ப்பவர்களுக்கு உங்களிடமுள்ளதை அள்ளிக் கொடுங்கள். இந்த மனப்பான்மை உங்களிடம் வளர்ந்துவருமானால் தன்நலப்பற்று நீங்கிப் பாசபந்தமென்னும் வலிய நோயிலிருந்து விடுபட்டுக் கவலையற்று வாழ்வார்கள். வாழ்க்கையில் நிறைவைக் காணும் பேரின்ப வீடு தானாகவே உங்கள் இருதயத்தில் திறந்துகிடக்கும்.

-ஔவையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீஸ்வர....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் நடந்துகொண்டிருந்தது. அபிஷேகத்தின் பின் எல்லா மூர்த்திகளுக்கும் பூசைகள் கிரமமாக நடந்தன. ஒவ்வொரு சந்தியிலும் பூசைகள் முடிவில் கேதீஸ்வர திருப்பதிகங்கள் சில ஒரு வயோதிப அடியாரால் பயபக்தியுடன் பாடப்பட்டது. ஒவ்வொரு பதிகத்தையும் உள்ளம் நெகிழக்கூடியவகையில் அம்முதியவர் பாடினார். இந்த முறை திருக்கேதீஸ்வரத்தில் நாம் காணக்கூடிய ஒரு தனிச்சிறப்பு. நானூறு வருடங்களாக மண்ணில் மறைந்திருந்த புராதன மஹாலிங்க மூர்த்திக்கு தீப ஆராதனை நடக்கும்போது ஏதோ ஒரு அபூர்வசக்தி இத்தலத்தின் பண்டைப்பெருமைகளை எம் கண் முன் கொண்டுவந்துவைத்துமெய் சிலிர்த்து கண் கலங்கச்செய்தது. பூசைகள் முடிந்தபின் விபூதி பிரசாதம் முதலியன வாங்கியபின் நாங்கள் தங்கியிருந்த திருஞானசம்பந்த மடத்துக்கு சென்று உணவு அருந்தி சற்று இளைப்பாறினோம். இளைப்பாறியெழுந்ததும் எங்கள் யாவரையும் பீடித்திருந்த ஜலதோசம், அலுப்பு முதலியன மாயமாய் மறைந்தன.

''அங்கத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருள்வான்''

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியிருப்பது பொய்யாகுமோ.

அன்று பிற்பகல் கேதீஸ்வரநாதனின் திருக்கோவிலின் சுற்றுடலைச் சுற்றிப் பார்த்தோம். தேவாரகாலத்தில் இந்த சிவஸ்தலம் மிகவும் சீரும் சிறப்பும்பெற்று விளங்கியிருந்த உண்மையை இந்த நீர்வளம் நிலவளம் நிறைந்த சுற்றுடல் மிகவும் தெளிவாகக் காட்டியது. மண்டோதரிக்கு இறைவன் அருள்செய்த ஸ்தலமென்றும் கேது வழிபட்டமையால் கேதீஸ்வரம் என்னும் பெயரைப் பெற்றது என்றும் படித்திருக்கிறோம். இந்த அருள் இன்றும் திருக்கேதீஸ்வரத்தில் தாண்டவம் ஆடுவதை அங்கு சென்று தரிசித்தவர்களே அறிவார். தேவாரகாலத்தில் கேதீஸ்வரத்தில் ஓங்கி வளர்ந்த பொழில்கள் அழகுசெய்தன.

''கனைகடல் கடிகமழ் பொழில் அணி மாதோட்டம்''

''மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர்''

''வாழை அம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம்''

என்று படித்தோம்.

அன்று இருந்த மாமரங்களுக்குப் பதிலாக இன்று பல வேப்பமரங்கள் கோயில் சுற்றுடலில் நெருங்கி வளர்ந்து இருப்பதைக்காணலாம். ஏதோகாகம், குருவிபோட்ட விதையிலிருந்து முளைத்து வளர்ந்து மனிதனுக்கு பலவகையால் பயன்தரும் விருட்சமல்லவா வேம்பு. இந்த வேப்பமரங்களுக்கூடாக வரும் காற்று தேகத்துக்கு உற்சாகத்தையும் வலிமையையும் கொடுக்கிறது. கோடைக்காலத்தில் இம்மரங்களின் கீழ் இருந்து அநுபவித்தவர்களுக்கே இதன் உண்மை புலனாகும். கோவிலின் வீதிக்கு அப்பால் சற்று தூரத்திலுள்ள கிடங்கிலிருக்கும் செங்கல் சுவர்கள் தங்கள் சரித்திரத்தைக் கூறுமாற் கூறின. செங்கல் சுண்ணாம்பு முதலியவற்றால் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் ஆக்கப்பெற்ற இச்சுவர்கள் இன்றும் மிகவும் உறுதியாய் இருக்கிறது. இந்தச் சுவர்களும் கட்டிடங்களும் அழிந்து நிலத்துக்குள் சிதைந்துபோவதற்கு ஏதோ பெரும் பிரளயமும் மண்மாரியும் அடித்திருக்கவேண்டும். இவைகளை பார்த்துக் கொண்டும் சிந்தித்துக் கொண்டும் நின்றபொழுது மாதோட்டப் பத்தியில் எழுந்தருளியிருக்கும் இறைவன்

''மத்தம் மதயானை யுரி போர்த்த மணவாளனின்''

சாயரட்சை பூசைக்கு நேரமாகிவிட்டதால் மீண்டும் சென்று தரிசித்தோம்.

இந்தக்கோவிலில் நான் கண்ட இன்னொரு அற்புதத்தை இவ்விடம் குறிக்காமல் இருக்க முடியாது. நாள்தோறும் சாயரட்சை பூசை மாலை ஐந்தரை மணிக்கு நடைபெறுகிறது. இந்தப்பூசை தொடங்குவதற்கு மணி அடித்தவுடன் கோவில் வெளிவீதியில் திரியும் மயில்கள் பறந்துவந்து கோவில் மதில் சுவர்களில் வரிசையாக வீற்றிருக்கும் சகலபூசைகளும் முடிந்தபின் இந்த மயில்களுள் மிகப்பெரியதான ஓர் ஆண் மயில் ராஜகோபுர உச்சியில் இருக்கும் மின்சார விளக்கை தாங்கும் கம்பத்தின் நடுவில் ஏறி விளக்குக்கு மேல் ஒய்யாரமாக உட்கார்ந்து கொள்கிறது. (வேறு இரு சிறு மயில்கள் பெண் மயில்களாகயிருக்கலாம்) அதே கோபுரத்தின் இருபக்கமும் வந்து உட்கார்ந்து கொள்கிறது. இம்மூன்று மயில்களும் அடுத்த நாட்காலை ஏழு மணி வரை இப்படியேயிருந்தன. கடும் மழை, காற்று வீசியகாலத்தில் கூட இம்மயில்கள் இப்படியே இருந்தனவென்று அங்கிருந்த அடியார் ஒருவர் சொன்னார். ஆண்மயிலின் தோகைகள் காற்றடிக்கும் போது விரிந்து அபாயமாக அசைந்தபோதிலும் அந்த மயில் ஆடாமல் அசையாமல் இருந்ததைப் பார்க்க வியப்பாகவிருந்தது. இம்மயில்கள் இப்படி ஒழுங்கு தவறாமல் நாள்தோறும் கோபுரத்தில் வீற்றிருக்கக் காரணம் ஒருவேளை தெய்வ கட்டளை போலும். பொதுவாக பறவைகள் இராக்காலத்தை மரங்களிலேயே கழிக்கின்றன. மரங்களிலுள்ள கிளைகள், இலைகள் பறவைகளுக்கு காற்றுக்கும் மழைக்கும் பாதுகாப்பு அளிப்பதால் தான் பறவைகள் மரங்களைநாடுகின்றன. ஆனால் பெரும் தோகையுள்ள மயில் மிகவும் உயரத்திலுள்ள ராஜகோபுரஉச்சியிலுள்ள மின்சார விளக்கு கம்பத்தில் ஏறி கம்பீரமாக வீற்றிருப்பது வியக்கத்தக்க அழகான காட்சியும்கூட. இதில் ஏதோ தெய்வீகத் தொடர்பு இருக்கிறது போலும். தேவாரகாலத்தில்

கூட இவ்விடத்தில் அனேக மயில்கள் இருந்தன என்ற உண்மையை சம்பந்தர்தேவாரத்தில்,

''வண்டு பண்செய மாமலர் பொழிலிடை மஞ்ஞை நடமிடும்

என்ற வரிகளால் அறிகிறோம். நம்நாட்டில் சில கோவில்களில் மயில்களையும் கிளிகளையும் கூண்டிற்குள் அடைத்து வைத்திருக்கிறார்கள். இது தெய்வகூடத்தில்ஒரு சிறைக்கூடம் இருப்பதுபோல் ஆகிறது. இதனால் அப்பட்சிகள் தங்கள் சுதந்திரத்தை இழந்து கூண்டின் ஒரு மூலையில் மூடி முடங்கி தளர்ச்சியுடன் இருப்பதை காணும் பொழுது மிகவும் பரிதாபமாயிருக்கும். ஆனால் கேதீஸ்வரத்திலுள்ள மயில்களும், மான்களும் தங்கள் இஷ்டப்படி உரிமையுடன் உலாவித் திரிகின்றன. அடர்ந்தகாடு அருகாமையில்இருந்தபோதிலும் இம்மான்களும் மயில்களும் கோவில் சுற்றுடலை விட்டுப்பிரிவதில்லை. இதுவும் கேதீஸ்வரத்திலுள்ள ஒரு தெய்வீகத்தன்மை. சிலவருடங்களுக்கு முன் நாகபாம்புகள் பூசை நேரத்தில் சுவாமி அம்மன் சன்னதியில் ஊர்ந்துவந்து படமெடுத்து ஆடியதாக அங்கு வெகுகாலமாக இருந்துவரும் ஓர் அடியார் சொன்னார். மயிலின் ஆதிக்கம் வந்தபின் பாம்புகளின் நடமாட்டம் குறைந்துவிட்டதாம்.

பண்டைப்பெருமை வாய்ந்த இச் சிவன்தலம்இடைக்காலத்தில் சிதைவுற்று காடடைந்து கிடந்தது. இதை இன்று இருக்கும் நன்நிலைமைக்கு கொண்டுவந்ததற்காக நாம் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபையாருக்கும் முக்கியமாக அமரர் பெரியார் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களுக்கும் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். பண்டைப் பெருமைவாய்ந்த இத்திருக்கோவிலை புனருத்தாரணம் செய்வித்த இன்னும் அங்கு வசித்து தொண்டாற்றிவரும் அடியார்களின் பக்தியும் சேவையும் போற்றத்தக்கது.

ஆயிரக்கணக்கான யாத்ரீகர் தங்கக்கூடிய பெரிய மடங்களும் நீர் மின்சாரம் முதலிய நவீன வசதிகளையுமுடைய சிவஸ்தலம் ஒன்றை இலங்கையில் காண வேண்டுமானால் ஒருதரம் திருக்கேதீஸ்வரம் போய்வர வேண்டும். இலங்கையில்மற்றெங்கும் காணாத ஒருகாந்த சக்தி, மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் அமையப் பெற்ற இத்தலத்திற்கு உண்டென்பதற்கு ஐயமில்லை.

## மரபுவழியில்...

(7-பக்கத் தொடர்ச்சி

தாக்கி, கவிஞர் இ. நாகராஜன், காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராஜா ஆகியோர்களின் முன்னிலையில் கலையரசு சொர்ணலிங்கம் அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளைக்கு 'கலைக்குரிசில்' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தார். அன்று அண்ணாவியார் யாத்ததும் பழக்கியதுமான கிறிஸ்தோபர் சரித்திரம் என்ற நாடகமும் அரங்கேற்றப்பட்டது.

அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை அதன்பின் இரண்டு ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்ந்திருந்தார்.

கடந்தஆண்டு டிசம்பர் மாதம் 24-ந்திகதி சிலகாலமாக நோயுற்றிருந்த அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை அவர்கள் மறைந்தனர். இவரது மறைவின் போது பல பெரியார்கள் கலந்து கொண்டனர். ஊர் மக்கள் ஒன்று கூடித்தமது மரியாதையைச் செலுத்தினர்.

# உலக மகா யுத்தத்தின் போது அற்புதங்கள் நிகழ்ந்த வரலாறு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினங்களில் எடுக்க வழி வகுத்தனர். இந்த ஆலய பூஜை அலுவல்களைக் கவனிக்க இந்தியாவிலிருந்து ஒரு குருக்களையும் அவருக்கு உதவியாளர்களாகச் சிலரையும் தருவித்தனர்.

இவ்வாறு ஆலய நிர்வாகம், ஆராதனைகள், திருவிழாக்கள் முதலியவற்றோடு சிறப்பாக நிகழ்ந்துவரும் காலத்தில் இரண்டாவது உலக மகா யுத்தம்ஆரம்பமானது இதனால் தங்கள் உயிருக்கும் வர்த்தகத்துக்கும் ஆபத்து ஏற்படப்போவதைச் செட்டிமார்கள் உணர்ந்தனர். இங்குள்ள கஷ்டமான சூழ்நிலையில் தாங்கள் தொடர்ந்து இருப்பது உசிதமல்ல என்பதை அறிந்த செட்டிமார்கள் தாங்கள் கட்டாயமாக நாடு திரும்பவேண்டியதை உணர்ந்து தாயகம் திரும்பினர்.

செட்டிமார்கள் நாட்டை விட்டுப்போனதும் அவர்கள் நிறுவி ஆதரித்து நிர்வகித்த ஆலயங்கள் சிலகாலத்துக்கு நிதியுதவி ஆதரிப்பவர்கள் குறைந்து காணப்பட்டன. இதனால் இவ்வாலயங்கள் கடந்தகால செழிப்பான நிலையையெடுத்துக் காட்டும் ஞாபகச் சின்னங்களாக அமைந்துவிடுமோ என்ற பீதி மக்கள் மத்தியில் நிலவத்தொடங்கியது.

ஆலயங்கள் குறித்து இத்தகைய நிலைமையையுருவாக்கிய அதே உலக மகா யுத்தம் எதிர்பாராதவகையில் இவ்வாலயங்களுக்குப் புகழ்சரத்தக்கவாறு ஒரு திருப்பத்தையும் ஏற்படுத்தியது.

பசுவிக் யுத்தம் மித உக்கிரமாக நடநதுகொண்டிருந்தது, வியட்னாமும் அதன் அருகே உள்ள பிரதேசங்களும் மிகவும் பீதியடைந்தன வியட்னாம் தலைநகரான சைகோன் அடிக்கடி குண்டுவீசுதலுக்கு உட்பட்டது. விசாலமான மண்டபங்களைக்கொண்ட காளியம்மன் ஆலயம் மிகவும் குடிசனம் நெருக்கமாகவுள்ள பகுதியில் அமைந்துள்ளதால் குண்டுவீச்சுக்குப் பயந்த வியட்னாம் மக்கள் இக்கோவிலைத் தஞ்சமடைந்தனர். இக்காளி அம்மன் ஆலயத்தைச் சூழ்ந்துள்ள கட்டிடங்கள்யாவும் குண்டு வீச்சினால் தாக்கப்பட்டுத் தரை மட்டமாகின. இதனால் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். எண்ணற்றவர்கள் காயமடைந்தனர். ஆனால் காளியம்மன் ஆலயம் ஒருவித தாக்குதலுக்கும் உட்படாது தன்னைத் தஞ்சமென்று வந்தடைந்தவர்களுக் கெல்லாம் அபயமளித்து அவர்களையும் காப்பாற்றித் தானும் கம்பீரமாக உயர்ந்து நின்றது.

## ஆச்சரியம்

இதைவிட ஆச்சரியப் படத்தக்க சம்பவம் ஒன்றும் நிகழ்ந்தது யுத்த பீதியடைந்த ஆயிரக் கணக்கானோர்க்குப் புகலிடமளித்த இந்தக் காளியம்மன் ஆலயத்தின்மீதும் குண்டுகள் வீசப்பட்டன. ஒரு குண்டு ஆலயத்தை ஊடுருவிக் கொண்டு ஆலயத்தின் உள் பகுதியில சென்றுவிழுந்தது. ஆனால் யாவரும் ஆச்சரியமடையும்படி அக்குண்டினால் ஆலயத்துக்கோ அல்லது அங்கு ஒதுங்கியிருந்த மக்களுக்கோ ஒருவித ஆபத்தும் ஏற்படவில்லை. இக்குண்டு வீச்சினால் மோசமான நிலைமையை எதிர்பார்த்துக் கொண்டு பயத்தோடுஅங்கு குழுமியிருந்த வியட்னாமிய மக்கள் காளியம்மனின் அருளினாலேயே தாங்கள் அதிசயமாகத் தப்பியதையுணர்ந்தார்கள்.

இந்த ஆச்சரியமான சம்பவத்திலிருந்து வியட்னாம்மக்களிடையே காளியம்மனின் கீர்த்தியும் சக்தியும் பரவியது. இந்தியத் தெய்வமான இக்காளியம்மனோடு தொடர்புடைய புராண வரலாறுபற்றி வியட்னாமியர் கவலைப்படவுமில்லை, அது பற்றியறியவேண்டுமென ஆவல் கொள்ளவுமில்லை. ஆனால் ஜப்பானிய குண்டு வீச்சில்இருந்து தங்களைக் காளியம்மனால் பாதுகாக்க முடியுமானால் தினமும் தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைப் போக்கும் சக்தியும் அவளிடம் இருக்கவேண்டுமென நம்பினார்கள்.

காளியம்மன்பால் இம்மக்களுக்கேற்பட்ட நம்பிக்கையையும் பக்தியையும் இன்றும்கூட நூற்றுக்கணக்கான வியட்னாமியர் காளியம்மன் ஆலய முன்றலில் நின்று வணங்குவதையும் காணிக்கைகள் செலுத்துவதையும் காணலாம். இளைஞர்களும் முதியவர்களும், ஆண்களும் பெண்களும், பிள்ளைகளும் ஆயிரக்கணக்காகக் குழுமி நின்று காளியம்மனை வணங்கும்காட்சி வியட்னாமில் இந்நாளில் சர்வசாதாரணமானதொரு நிகழ்ச்சியாகி விட்டது.

இந்த வியட்னாமியர்கள் தங்களுக்குரிய வழிபாட்டு முறையிலேயே காளியம்மனை வணங்குகிறார்கள். சர்ப்பூரம், சாம்பிராணி ஆகியவற்றைக் கொழுத்தியும், பழம், தேங்காய் முதலியவற்றை அம்பாளுக்கு அர்ப்பணித்தும் வழிபடுவதோடு சிலர் மௌனமாக ஆலயத்தைச் சுற்றிவருவார்கள். சிலர் இருகைகளையும் கூப்பியபடி தலையைத் தாழ்த்தியவண்ணம் நிலத்தில் இருந்துகொண்டு அம்மனைத் தொழுவர். இவ்வாறு வழிபடுபவர்கள் தங்கள் வழிபாட்டை முடித்துக் கொண்டு செல்லும் போது அங்குள்ள உண்டியலில் சில நாணயங்களைத் தங்கள் அன்புக் காணிக்கையாகப் போட்டுவிட்டுப் போவர்.

தினமும் நூற்றுக்கணக்கான வியட்னாமியர் இவ்வாலயத்திற்கு வந்து வழிபட்டு செல்கிறார்களெனவும் அவர்களுக்குச் சிறந்த தினமாகிய பூரணை தினங்களில் இந்த எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் கூடுகிறது எனவும் இந்த அம்பாள் ஆலயத்துக்குப் பொறுப்பான பூசகர் கூறுகிறார் இப்பக்தர்கள் தொகை அதிகரிக்க அதிகரிக்க ஆலய வடுவாயும் அதிகரிக்கிறது.

எந்தவொரு வேலைக்குச் செல்லும்போதும் வியட்னாமியர் காளியம்மனை வணங்கி அவள் ஆசீர்வாதத்தை வேண்டிக் கொள்ளாமல் செல்வதில்லை. ஒரு நோயினின்றும் குணமடைய வேண்டுமோ அல்லது பாடசாலைக்குப் பிள்ளையை அனுப்பவேண்டுமோ அல்லது விவாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமோ அல்லது புதிய கட்டிடம் ஒன்றைப் போடவேண்டுமோ அல்லது புதிய வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டுமோ அதற்கு முதலில் காளியம்மனைத் தரிசித்தலை வியட்னாமியர் ஒரு கட்டாய கடமையாகக் கொள்வர். இவ்வாறு பெரும் செல்வாக்கைப் பெற்று புகழ்பெற்றுள்ள இக்காளியம்மன் ஆலயம் அதை நிறுவியவர்கள் நினைத்த அளவிலும் பார்க்க அதிக செல்வச் செழிப்புடையதாக இன்று திகழ்கிறது.

இது குறித்துத் தற்போது சைகோனில் உள்ள சிறிய செட்டியார் சமூகம் பெருமைப்படுகிறது. இச் சிறப்பு வாய்ந்த ஆலயத்தைக் குறித்து அங்கு தற்போதுள்ள செட்டியார்களில் ஒருவர் ''நாங்கள் இன்னும் பத்து அல்லது இருபது வருடங்களில் போய்விடுவோம். எதிர்காலத்தில் வியட்னாமில் இந்திய சமூகத்தினர் ஒருவரும் இருக்கமாட்டார்கள். ஆனால் எங்களது ஆலயங்கள் பாழடையும் என்ற பீதி எங்களுக்கில்லை. வியட்னாமியர் வாழ்க்கையில் இவ்வாலயங்கள் இன்றியமையாத நம்பிக்கைப் பொருள்களாக உள்ளன. இந்தத் தென்னிந்திய ஆலயங்கள் வியட்னாமியர் பண்பாட்டின் ஒரு பகுதியாக வந்து கொண்டிருக்கிறது என்று கூறின் மிகைபடக் கூறலாகாது என்றும் குறிப்பிட்டார்.

மொழியாக்கம் —குணம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போலி இசைக்கலைஞர்

—"அனங்கன்"—

காக்காய் பிடித்தங்கு கன்னலிசைப் பட்டங்கள்
'சோக்'காகச் சூடுவரே சோடித்து -நோக்குங்கால்
சுதியும் சதிசெய்யும், சூதிற்கெது வெல்லும்
விதியின் சதியென்பா ரவர்.

சுதியும் சதிசெய்யும் சூதுசெவி சொல்லக்
கெதியும் விதியென்றே காண்பர் - துதியால்
பொருளும் பொறுக்குவர் போலிப் புகழ்சேர்
குருடும் செவிடுமிலர் கோள்.

பாடத்தை யொப்புவித்துப் பட்டங்கள் வாங்குபவர்
பாடுவரோ இங்கிதமாய் மேடையிலே?- வீடுதரும்
சங்கீதம் தெய்வீகம், சார்ந்தவரின் பூர்வீகம்
இங்கீது காசுக்கு ஏது?

முன்னே விபரித்த முக்கிய ராகமதில்
பின்னே தொடருமொரு பல்லவியைப்
- பின்னுமொரு
தாளத்தின் தக்கநடை தானமைக்கக் கையறியான்
மேளத்தில் வித்தகனே சொல்.

# 206660 ருத்தல் பால்தரும் பசு

உலகிலே மிகக்கூடிய அளவுபாலைச் சுரந்து கொடுத்து பெருமளவில் வெண்ணெயை உற்பத்திசெய்து அசுர சாதனையை நிலைநாட்டிய பசு ஒன்று இங்கிலாந்தில் வளர்ந்து வருகிறது. பதினேழு வயசு நிரம்பிய இப்பசுவின் பெயர் 'கியூலேக்ரெட்ராஸ்'. இதை இதன் உரிமையாளர் 'ரோஸி' என்று மிகச் செல்லமாக அழைக்கின்றார் இப்பசு 206660 இருத்தல் பாலைச் சுரந்து கொடுத்து அதன்மூலம் 10229 இருத்தல் வெண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது.

'ரோஸி' தன் முதல் கன்றுக்குட்டியை 1954 அக்டோபர் 17-ந் திகதி ஈன்றது. 1967 அக்டோபர் 15-ந் திகதி 'ரோஸி' தன் பன்னிரண்டாவது கன்றுக் குட்டியை ஈன்றுள்ளது.

# இறையருள்

மழைத் தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை பள்ளமான இடத்துக்கு ஓடிவந்து விடுகிறது. அதுபோல இறைவன் அருள் தற்பெருமையையும் அகந்தையையும் உடையவர்களின் உள்ளத்தில் தங்கி நிற்பதில்லை பணிவுள்ளவர்களின் உள்ளத்தையே போய் அடைகிறது.

—பரமஹம்ஸர்.

சின்னஞ்சிறு புழுவுக்குக்கூடத் தீங்கிழைக்க நான் விரும்பவில்லை. ஆனால் கள்ளச் சந்தைக்காரர்கள் அனைவரும் சாகும்வரை தூக்கில் தொங்குவார்களானல் அதுவே எனக்கு மிகுந்த இன்பத்தை விளைவிக்கும்.

-ஜவஹர்லால்.

# குரக்கன்துறையும் . . .

[10ம் பககத் தொடர்ச்சி] ஒன்றை மட்டுமே காங்கேசன்துறையின் புராதன நாமம் குரக்கன்துறை என்பதற்கு ஆதாரமாகக்கொள்கிறார்கள் என்பது வெள்ளிடைமலை. கோவிற்கடவை ஆசிரியர் கூறும் குரக்கன்துறை பற்றி திரு. குமாரசாமி அவர்களால் எழுதப்பட்டு 15-1-70 ஈழநாடு இதழில் வெளிவந்த கட்டுரையிற் கூறியுள்ளார். அக்கட்டுரைக்கு விளக்கம்தரும் எனது கட்டுரையில் நான் கோவிற்கடவை ஆசிரியர் கூறும் குராக்கன்துறை பற்றி விளக்கியுள்ளேன். கோவிற்கடவை ஆசிரியர் கூறும் திருத்தம்பலசுர வரலாறு, நகுலேசுவர வரலாறு, மாவிட்டபுரவரலாறு, கயாமுனிவராம் பவாநந்தமுனிவர் வரலாறு முதலிய வரலாறுகள், வரலாறுகூறும் நூலகளை ஆதாரமாகக் கொண்டவை. அவர் கூறும் குரக்கன்துறை அவரது சொந்த அபிப்பிராயம் என்பது 'இருக்கலாம்' என அவர் கூறுவதில் இருந்து நன்கு தொனிக்கிறது கோவிற்கடவை ஆசிரியர் கூறும் திருத்தம்பலேசுரம் கீரிமலைக்கு அண்மையில் இருக்கவில்லை. நகுலேஸ்வரர் கோவில் நகுலமுனிவரின் சமாதி. மாவிட்டபுரம் மகா எள்ளிபுரம் என்னும் சிங்களச் சொல்லின் திரிபு. கயாமுனிவராம் பவாநந்தமுனிவர் புத்தசமயத்தவர் எனக் கோவிற்கடவையிலுள்ளவரலாறுகளைக் கண்டிக்கும் கும்பாபிடேகமலர், கோவிற்கடவை ஆசிரியர் கூறும தமது சொந்த அபிப்பிராயமாகிய குரக்கன்துறை என்பதற்கு முதலிடம் கொடுத்து ஓர் ஊரின் புராதன பெயராக்கி வரலாறுகளைச் சிதைத்து ஒரு கோவிலையும் உருவாக்கிவிட்டது என்பதை வாசகர்களுக்கு விளக்கிவிட்டார் வீரகுரு

30-12-69 கட்டுரையில் "மனிதன் காங்கேயன் வந்திறங்கிய காரணத்தால் இலிங்கதாரிகள் வந்திறங்கிய குரக்கன்துறையெனப் பெயர் பெற்றது" என வெளிவந்தது. இது கும்பாபிடேக மலரில் இல்லை எனக் கூறுகிறார் திரு. வீரகுரு. இவ்வசனத்தில் "குரக்கன் துறை" என்னும் சொல்லுக்கும் "யெனப்" என்னும் சொல்லுக்கும் இடையில் ஒரு சொல்லுக்குறைகிறதை வாசகர்கள் அறிவர். அச்சொல் "காங்கேசன்துறை." இச்சொல்லைச் சேர்த்து வாசித்தால் அவ்வசனம் "மனிதன் காங்கேயன் வந்திறங்கிய காரணத்கால் இலிங்கதாரிகள் வந்திறங்கிய குரக்கன்துறை காங்கேசன்துறையெனப் பெயர் பெற்றது" எனவரும். கும்பாபிடேக மலரிற் கூறப்பட்டுள்ள (1) "இலிங்காயதருக்குக் கன்னடியர் என்ற பெயருமுண்டு." (2) "கன்னட நாட்டு மக்கள் இலங்கையின் வடபாகத்திலுள்ள ஓடக்கரையென்ற குரக்கன்துறையிலிறங்கிக் கரையையடுத்த மேற்பூமிகளிற் குடியேறி." (3) "காங்கேயனென்ற மனிதன் வந்திறங்கிய குரக்கன் துறையே காங்கேசன்துறையெனப் பெயர் பெற்றது" என்னும் வசனங்களைச்சேர்ப்பின் என்ன பொருள்கிடைக்கும் என்பதை வாசகர்கள் அறிவர்.

# நெல்லிரசம்...

(11-ம்பக்கத் தொடர்ச்சி) பின்னர் அகன்ற வாயை உடைய போத்தலில் இந்த நெல்லிரசத்தை ஊற்றி அதில்உள்ளவற்றை அடைய வைக்கவேண்டும். ஒருமாத காலம்வரை இப்படிப் படிய வைத்துவிட்டுப்பின்னர் நன்ருகத் தெளிந்த பின்னர் போத்தலில் ஊற்றி அத்துடன் கலர், வனிலா ஆகியவற்றையும் சிறிது சேர்த்துக் கொள்ளவும். போத்தலைக் காற்றுப் புகாமல் நன்ருக அடைத்துவிட வேண்டும், முறைப்படி இவ்வாறு தயாரித்த நெல்லிரசத்தை பல மாதக்கணக்காக பழுதடையாது வைத்துப் பயன்படுத்தலாம்.

# புற ஆற்றலை...

(11-ம்பக்கத் தொடர்ச்சி) தில்லை. விரும்பினல் திரும்பவும் வந்து இங்குள்ள நிகழ்ச்சிகளில் பங்குபற்றலாம்.

மேலும் இப்பாலபவனத்தில் மாணவர்களுக்கு நன்மை பயக்கத்தக்கபல 'கிளப்புகள்' உள்ளன. இவற்றின் சார்பில் உல்லாசப் பிரயாணிகளும் நாட்டின் வேறு பகுதிகளுககு மேற்கொள்ளப்படுகின்றன. இதனல் குழந்தைகள் மற்றப்பகுதிக் குழந்தைகளோடு கலந்து பழகி அவர்களது மொழி, பண்பாடு ஆகியவற்றையறியும் வாய்ப்பு ஏற்படுகிறது. சிநேக மனப்பான்மையும் ஒற்றுமையும் வளர்கிறது.

பாகுபாடற்ற சேவை

இப்பாலபவனத்தில்ஏழை-பணக்காரன், ஜாதி என்ற பாகுபாடில்லை. யார்வேண்டுமானாலும் அதில் சேரலாம். எனினும் இங்குள்ள வசதிகளை கொடுக்க முடியாத பெற்றோர்களிடமிருந்தே இந்தக்குழந்தைகளை ஏற்பது இந்த பாலபவனத்தின் குறிக்கோளாகும். வசதியற்றவர்களுக்கு உதவுவதே நோக்கமாகும். அதாவது கீழ்த்தர, மத்தியதர வருமானமுள்ளவர்களுக்கே இங்கு முதலிடம் குழந்தைகளுக்குப் போக்குவரத்து வசதிகளும் இப்பவனத்தால் அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கூடங்களுக்கும் அவற்றின் பாடத்திட்டத்துக்கு உதவியாக இப்பாலபவனம் இருந்துவருகிறது. இதைவிட இங்கு வெட்டவெளி அரங்கம், வாசிகசாலை, பொருட்காட்சிச்சாலை, சினிமாப்படக்[illegible]திரம் ஆகியனவும் உள்ளன.

இங்கு சிறிய ரயிலொன்று மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க பயன்படுத்தப்படுகிறது. ரயில்ஓட்டவும் ரயில் சேவை சம்பந்தமான சகல வேலைகளையும்கூட கற்றுக் கொடுக்கிறார்கள் என்றல் இப்பாலபவனத்தின் பயனை எத்தகையது எனக் கூறவும் வேண்டுமா?

இத்தகைய பலகரப்பட்ட நன்மைகளை அளிக்கத்தக்க 'பாலபவனங்களை' நம்நாட்டிலும் அமைத்தால் இங்குள்ள குழந்தைகளும் பாடசாலை நேரம்போக ஓய்வு நேரத்தில் ஓரிரு மணித்தியாலங்களை படிப்புக்குப் புறம்பான தங்கள் ஆற்றலை வளர்க்க உதவியாகவிருக்கும். அவர்களுக்கு எந்தெந்தத் துறையில் நாட்டம் செல்[illegible] ஆசிரியர்களும் அறிந்து அவர்களின் வருங்காலத்தை வளமானதாக்கலாம்.


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா2-30 மணி
எம்.ஜி.ஆர். — சரோஜாதேவி
நடித்த
தாலி பாக்கியம்

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
ஜெமினி-அஞ்சலிதேவி
நடித்த
எல்லோரும் இந்நாட்டு மன்னர்

Now Showing
MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya, Predoya 4 Shows
James Stewart, HenryFonda
in
FIRE CREEK
(Color)
Coming shortly
HELGA


REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M
Poya PrePoya 4 Shows
Frankie Howerd
Sidney James
in
CARRY ON DOCTOR
(Color)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30 9,30-
பிரிபோயா, போயா 2-30
ஜெமினி-வைஜயந்திமாலா
பத்மினி
நடித்தது
ஆயிரக்கணக்கான ரஸிகர்கள் ஆவலுடன்
எதிர்பார்த்திருந்த
ஜெமினியின் பிரமாண்டமான தயாரிப்பு
வஞ்சிக்கோட்டை வாலிபன்
(புதிய கொப்பி)
குறிப்பு:- இரவு 9-55க்கு யாழ்ப்பாணம் திரும்புவதற்கு பஸ் வசதி செய்யப்பட்டிருக்கிறது

உங்களை மகிழ்விக்க பவனி வருகிறார்கள்
எம். ஜி. ஆர் ஜெயலலிதா
காதல் வாகனம்
வின்ஸரில்
தினசரி 4 காட்சிகள்

ராஜா (யாழ்ப்பாணம்)
(தினசரி 2காட்சிகள்)
ரவிச்சந்திரன் - ராஜ்ஸ்ரீ
நடித்த
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
டில்லி மாப்பிள்ளை

ராணி (யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப் பெண்

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் புதிய சாதனையை
ஏற்படுத்திய மாபெரும் வண்ணத்திரை ஓவியம்.
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்று
"பேசும்படத்தின்" மூன்று விருதுகள் பெற்ற
வெற்றிச்சித்திரம்
(1) சிறந்த படம் (2) சிறந்த நடிகர் (சிவாஜி)
(3) சிறந்த உபநடிகர் (பாலையா)
நாதஸ்வர இசை:
மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள்
சிவாஜிகணேசன் பத்மினி
பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த

சிவாஜிகணேசன் அளிக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
தில்லானு மோகனம்பாள்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எமது முது சொத்து கிராமியக் கலைகள்

## கண்டியன் நடனமும் காவடி ஆட்டமும்

ஏ. ரி. பொன்னுத்துரை

உள்ளூராட்சிவாரம் ஈழத்தின் பல்வேறு பிராந்தியங்களிலும் மிகக்கோலாகலமாகக் கொண்டாடப்பட்டிருக்கும் வேளை இது. கலை இலக்கியம் என்ற துறைகளில் நம்மவர் கொண்டுள்ள அயரா அபிமானத்தை, புதிய முறையில் இவற்றைப் புடம்செய்யவேண்டும் என்ற அரசினரின் உயரிய குறிக்கோளை இவ்வாண்டு நடைமுறைக்கு வந்த இப்புதிய திட்டம் காட்டுகின்றது. கிராமசபைகள் முதல் மாநகரசபைகள் வரை இவ்வாரத்தைப் பயன்தரும் வகையில் கொண்டாடியுள்ளனர். இலக்கிய அரங்குகள், நூல் அறிமுகவிழாக்கள், கிராமியக்கலை நிகழ்ச்சிகள், நடன நாடக விழாக்கள் போன்ற பல சென்றவாரம், எல்லாப் பகுதிகளிலும் இடம்பெற்றன. இவ்வேளையில் தமிழ் மக்களாகிய நாம் சிந்தித்துச் செயலாற்றப்பல இருக்கின்றன. நமது முதுசொத்தாகிய காவடி கரகம், கும்மி, கோலாட்டம், வசந்தன் போன்ற கிராமியக்கலைகளை எள்ளி நகையாடுவதை ஏளனம் செய்வதை நாம் நிறுத்திக் கொள்ளவேண்டும். அவற்றைப் புதுமெருகுடன், புனிதமாகக் காட்டினால் அவை எமக்குப் பெரும்புகழீட்டும் என்று எண்ண வேண்டும். எமது சிங்களச் சகோதரர்கள் தமது கிராமியக்கலைகளை வளர்க்கத் துடிக்கும் விழிப்புணர்ச்சியைக் கண்டால் நாம் வெட்கமுறவும் நேரிடலாம்.

ஈழத்தைப் பார்வையிட வரும் பல மேற்கத்திய உல்லாசப் பிரயாணிகள் கண்டிப்பகுதியை விரும்பி நாடுகின்றனர். இப்படி வரும் உல்லாசப் பிரயாணிகளின் அவதானத்தை ஈர்ப்பதற்கு சிங்களச் சகோதரர் தமது கிராமிய கலைகளைச் செப்பமிட விழைகின்றனர். கண்டியில் உள்ள ஒரு கலைக்கழகமும், விடுதிகள் யூனியன் நிறுவனமும் கண்டிய நடனத்தைக் கவர்ச்சிகரமாக புதியமுறையில் காட்டத் திட்டம் தீட்டுகின்றன. இந்த நடனம் உட்பட பலவித கிராமியக்கலைகளின் விவரமடங்கிய துண்டுப் பிரசுரங்களை அழகாக அச்சடித்து. அவர்களுக்குக் கொடுக்கத்தக்க வேலையையும் 'பி-ஏ என்ரரெயின் மென்ட்காரர்' செய்யமுன் வந்துள்ளனர். ஒரு முறையில் முப்பது கலைஞர்கள் ஆடும்வகையில் கண்டிய நடனத்தை அமைத்துத் தினமும் இரவு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் நடாத்தவும் ஒழுங்குகள் செய்கின்றனர். அந்நியர்களுக்கு இந்நடனத்தைப் புதிய மெருகுடன் காட்டப் புதிய ஒளி அமைப்பையும் கையாள எண்ணியுள்ளனர். இப்படியான புதிய ஆர்வங்கள் எமது சகோதர மக்களிடம் துளிர்விட்டுத் தழைக்க, நாம் சோம்பேறிகளாக ஏப்பம்விடும் நியாயங்களைப் பேசிக்கொண்டிருக்கிறோம் ஒரு காலத்தில் அநாகரீகமென நம்மவர் சிலர் கருதிய கண்டிய நடனம், இன்று அகில உலகிலுமே அரங்கேறும் நடனமாய் அமைந்து விட்டது. இன்னும் சிலகாலத்தில் எமது தமிழ் விழாக்களில்கூட இடம்பெறவும் கூடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது இந்தநிலையை உற்று நோக்கினால், நமது கிராமியக் கலைகளை நாம் வளர்க்க பெரிதும் முனைய வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம். நம்மவர் மத்தியில் ஒரு காலத்தில் நன்கு பேணப்பட்ட காவடி, கரகம் என்பவை தாள லயத்துடன் கதகளி நடன நிழல் விரவிய சிறந்த கிராமியக் கலைகளாக மிளிர்ந்தன. அழகான நார்பட்டு உடுத்தி, கழுத்தில் தங்கச் சங்கிலி அணிந்து மயிலிறகால் அமைந்த காவடிகளைக் கழுத்தில் தாங்கி, காலில் சதங்கை ஒலி கலீரிட ஒரே முறையில் ஐவர்வரை, தாளக்கட்டுக்கமைய ஆடும் காவடி ஆட்டத்தை மற்றைய சமூகத்தவர் எவ்வளவு விருப்புடன் ரசிக்கின்றனர் என்பதை நாம் மறக்கிறோம் இதனை ஏதோ அநாகரிகத்தின் சின்னம் என இப்போது எண்ணுகிறோம் இது மடைமையிலும் மடைமை. காவடி ஆட்டத்தில் பலவகை உண்டு. கப்பலாட்டம். கிங்கிணி ஆட்டம், நடன ஆட்டம் எனப் பலவகை. சுழன்று சுழன்று ஆடும் ஆட்டம், காவடியை மாற்றி மாற்றி ஆடும் ஆட்டம் எனப் பல நுட்பங்கள் அமைந்த ஆட்டங்களும் உண்டு கரக ஆட்டம் எவ்வளவோ கவர்ச்சியுடையது. இன்று சில நர்த்தனகாரர் காட்டும் செம்பு நடனம், வட்டில் நடனம் என்பவை எல்லாம் அன்றைய கரகத்தில் இடம்பெற்றன. மூன்று பேர் சேர்ந்து ஆடக்கூடியவகையிலும் கரகங்கள் அமைந்திருந்தன. காவடிக்கு எப்படி அண்ணாவியின் தாள இசை முக்கியத்துவம் பெற்றதோ அப்படியே கரகத்துக்கு உடுக்கு இசை மிகமிக முக்கியம் பெற்றிருந்தது. இந்த இருவகைக் கிராமியக்கலை வல்லுநர்களை நாம் ஒன்றுகூட்டி இக்கலைகள் வளரவகை செய்தல் வேண்டும்.

கோலாட்டம், வசந்தன் என்பவை அன்று நம்மவர் மத்தியில் முக்கியத்துவம் பெற்று நிலவின. கிராமப்புற பாடசாலைகள் இவற்றை வளர்த்தன. சமீபத்தில்கூட சுதந்திரதினத்தை முன்னிட்டு மாத்தளைப்பகுதியில் தமிழ் கல்லூரியினர் நடாத்திய கோலாட்ட நிகழ்ச்சியை சிங்கள அன்பர்கள் விதந்து போற்றினர். பன்னிரண்டு நிறக் கயிற்றுக் கொடிகளைக் கட்டி, கூடை பின்னல், சங்கிலி பின்னல், கொடி பின்னல் போன்ற பல சிறப்பம்சங்கள் பொருந்தக் கோலாட்டங்கள் அன்று ஆடப்பட்டன. வசந்தன் ஆட்டமும் இந்தவகையைச் சேர்ந்ததே. இந்த ஆட்டத்துக்கு கிராமியப் பாடல்கள் பெரிதும் சேர்க்கப்பட்ட மரபை நாம் காண்கிறோம். வயலில் நாற்று நடுதல், அருவி வெட்டுதல் போன்ற அம்சங்கள் இதில் இருப்பதால், இவைபற்றிய கிராமிய இலக்கியம் இந்த ஆட்டத்துக் உறுதுணையாகின்றன. இவற்றையும் நாம் பேணிக்காக்கக் கடப்பாடுடையவர்களாகிறோம்.

இக்கலைகளை மரபு முறைப்படி ஆனால் இக்கால மக்கள் பார்த்து இரசிக்கும் வகையில் புடமிட்டு மெருகேற்றவேண்டும். இந்தத் தொண்டினை உள்ளூராட்சி நிறுவனங்களே பொறுப்பேற்றுச் செய்யவேண்டும். காவடி, கரகம், கோலாட்டம், வசந்தன் போன்ற கிராமியக் கலைகளை முறைப்படி அறிந்த முதியவர்களை, வாலிபர்களை அழைத்து கருத்தரங்கு நடாத்தி, மெருகூட்டிய நிகழ்ச்சிகளை வருடமொருமுறையாவது மக்கள் முன் நடாத்துதல்வேண்டும். இத்துறைகளில் துறைபோகியவர்களைச்சேர்த்துக் கௌரவிக்கவேண்டும். அப்படியானால்தான் இளைஞர் உலகமும் இத்துறைகளில் ஆர்வத்துடன் ஈடுபடும் கிராமியக் கலைகள் அநாகரிகத்தின் சின்னம் என்ற கருத்தைப் புதைத்து, அவற்றைப்பேணிகாத்து வளர்க்க கல்லூரிகள், பொதுஸ்தாபனங்கள், முக்கியமாக உள்ளூராட்சி நிறுவனங்கள் முன்வரவேண்டும். உள்ளூராட்சித் தலைவர்கள் சம்மேளனம் இத்துறையை வளர்க்க முறையாகத் திட்டம் வகுக்குமேயானால், உல்லாசப் பிரயாணிகள்கூட வட பிராந்தியத்துக்குப் படையெடுக்கமாட்டார்களா?

### தங்கக்கடல்

நாம் மிகவும் மதிப்புவாய்ந்ததாகக் கருதும் தங்கம் சாதாரண கடல்நீரில் இருந்து கிடைக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். லட்சங்கோடி தொன்கடல்நீரில் ஆறுதொன் தங்கம் கிடைக்கும் அல்லது ஒருமைல் அளவு கடல்நீரில் 22000 பவுண் தங்கம் அதாவது 35,0000000 ரூபாய் விலை மதிப்புடைய தங்கம்கிடைக்கும். மொத்தத்தில் கடல் முழுவதிலும் இருந்து 230,0000000 தொன்எடை உள்ளதங்கம் கிடைக்குமென்று தெரிகிறதாம்.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அச்சுவேலியில் சங்கானை ரேட்டுக்கு அண்மையில் குடியிருப்பு, பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான கல் இல்லாத நிலம் 10 1/2 பரப்பு. முழுவதும் வான் பயிரிடப்பட்டுள்ளது. தொழிற்பேட்டை, சந்தை, பாடசாலைகளுக்கு மத்தியான இடம். விலை ரூபா 2000 ஒரு பரப்பு. கந்தசாமி, ஆசிரிய கலாசாலை, வசாவிளான். 1849

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடுகள்: 6ஆம், 7ஆம், 8ஆம் வகுப்புகளுக்கு முதலாம் தவணை வழிகாட்டிக்குஅமைவாக புதுமுறை மாதிரி கைவினாக்கள்; வினா-விடைகள் எல்லாப் பாடங்களுக்கும் தனித்தனியாக வெளிவந்துள்ளன. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். 1865

### தேவை


எமது ஸ்தாபனத்தில் கூலிவேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. நல்ல சம்பளம், போனஸ் வழங்கப்படும். கல்லர் வேலை தெரிந்தவர்களுக்கு விஷேச சலுகை வழங்கப்படும் தொடர்புகொள்ளவும். மாப்பியன் மில், மானிப்பாய், சுதுமலை. 1859

கொமிஷன் அடிப்படையில் வேலை செய்வதற்கு கன்வஸ்சேஸ் (Canvassers) தேவை. நேரில் சந்திக்கவும். பிரமன்ஸ் லிமிட்டெட், 2-ம் மாடி, சங்கரப்பிள்ளை கட்டிடம், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1864

### WANTED

Required immediately one experienced Foreman for service station. One salesman for Motor Spares. Firm in Jaffna town. Security required. Apply stating particulars. Attach testimonials(copies) Apply-Advt. No. 1866, C/o Eelanadu, Jaffna. 1866


## அமி ஜோன்சன்—3



விமானப் பொறியியலாளர் பயிற்சியில் தேறியவுடன் அவுஸ்திரேலியாவுக்குப் பறந்து செல்லவேண்டுமென்ற தனது நீண்டநாள் நீங்காத ஆசையை நிறைவேற்றத் தீவிரமாக ஈடுபட்டார். 12 ஆயிரம் மைல்கள் தூரம், 24 அடியே நீளமான, திறந்த விமானத்தில் தன்னந் தனியளாக அதுவும் ஒருபெண் பறந்து செல்கிறாள் என்றால் பரபரப்புக்குக் கேட்கவா வேண்டும்? 1930-ம் ஆண்டு மே மாதம் 5-ந் திகதி, ஐந்து சிறு விமானங்கள் ஆரம்பக் கட்டத்தில் பாதுகாப்பாக வர பறந்தார் அமி ஜோன்சன்.

பாதுகாப்பாக வந்த விமானங்கள் பின்னே தங்கிவிட, 'ஜேசன்' என்றபெயருடைய தனது விமானத்தில் தனியாகத் தொடர்ந்து பறந்தார். ஆங்கிலக் கால்வாயைக் கடந்து, பச்சைப் பசேல் என்ற பரந்த வெளிகளைக் கடந்து, ஐரோப்பாவின் அழகிய நகரங்களைக் கடந்து, 10 மணித்தியாலங்களுக்குப் பின் 800 மைல்களுக்கு அப்பாலுள்ள வியன்னா [illegible] கினார். ஆரம்ப கட்டம் இலகுவாகத்தான் இருந்தது.

ஆனால், இதன்பின்னர், ஒவ்வொரு கட்டத்திலும், கஷ்டத்தையும் கவலையையும் தரக்கூடிய நிகழ்ச்சிகளைத்தான் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. வியன்னாவை விட்டுப் புறப்பட்டவுடனேயே, விமானப் பெற்ரோல் தாங்கியில் பழுதேற்பட்டு, படுசிரமப்படவேண்டியிருந்தது. இப்பொழுது இஸ்டான்டில் என்றழைக்கப்படும் [illegible] ஸ்டான்டிநோபல் விமான நிலையத்தில் விமானத்திற்கு 'மூக்குடைபட்டது'!

கருமேகங்கள் சூழ்ந்த துருக்கியின் ரோறஸ் மலைப் பிராந்தியங்களுக்கூடாக, வெகு அபாயகரமான மலைச் சிகரங்களைத் தாண்டிப் பறக்கவேண்டியிருந்தது. எந்த நேரத்தில், என்ன ஆபத்து நிகழுமோ, என்ன விபத்து நேரிடுமோ என்றறியாத நிலையில், எப்படியோ வெற்றிகரமாகத் தனது பயணத்தைத் தொடர்ந்தார் அமி ஜோன்சன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## மகாத்மா மணிமொழிகள்!

சத்தியத்தில நிற்பதென்பது பஞ்சணையில் படுத்திருப்பதல்ல; உண்மையைக் கடைப்பிடிப்பதற்கு தியாகம் தேவைப்படுகின்றது. வானமே இடிந்து தலையில் விழுவதாய் இருந்தாலும் நாம் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.

0 0 0

ஒரு நோக்கமுமில்லாமல் வெறுமனே இலக்கியத்தைப் படைப்பதைவிட, நல்ல விவேகத்தோடு கைத்தொழில் பயிற்சி பெறுவது அறிவை விசாலப்படுத்த எவ்வளவோ உதவியாயிருக்கும்.






### மகா சிவராத்திரி உற்சவம்

# திருக்கேதீஸ்வரம் செல்ல, பஸ், புகைவண்டி ஏற்பாடுகள்

## யாத்திரிகர்களுக்கு உணவு சிற்றுண்டி வழங்கப்படும்

யாழ்ப்பாணம், சனி

திருக்கேதீச்சரத்தில்நடைபெறும் மகா சிவராத்திரி உற்சவத்திற்காக புகையிரதப்பகுதியினரும், திருக்கேதீச்சரபுகையிரதயாத்திரிகர் தொண்டர்சபையினரும் கீழ்க்கண்ட ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

6-3-70காலை 5-35மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் 'உத்தரதேவி' கடுகதி புகை வண்டியிலும் கொழும்பிலிருந்து காலை 5-45 மணிக்குப் புறப்படும் 'யாழ்தேவி' கடுகதி புகை வண்டியிலும் நேரே திருக்கேதீச்சரம் செல்லும்விசேட பெட்டிகள் இணைக்கப்படும்.

இப்பெட்டிகள் மதவாச்சியில் பிரிக்கப்பட்டு அங்கிருந்து திருக்கேதீச்சரம் செல்லும் விசேட வண்டியொன்றுடன் இணைக்கப்படும். இவ்விசேட வண்டி மதவாச்சியிலிருந்து காலை 10-15 மணிக்குப் புறப்பட்டுத் திருக்கேதீச்சரம் புகைவண்டி நிலையத்தை பகல் 11-49 மணிக்கு செல்லும்.

காங்கேசன் துறையிலிருந்து காலை 6-30 மணிக்கு புறப்படும் வண்டியிலும் கொழும்பிலிருந்து காலை 6-45 மணிக்குப் புறப்படும் வண்டியிலும் நேரே திருக்கேதீச்சரம் செல்லும் பெட்டிகள்இணைக்கப்படும். இவை மதவாச்சியில் பிரிக்கப்பட்டு அங்கிருந்து பிற்பகல் 1-54 மணிக்கு புறப்படும் வண்டியுடன் இணைக்கப்படும்.இவ்வண்டி பிற்பகல் 4-10 மணிக்கு திருக்கேதீச்சரம் புகைவண்டிநிலையத்தை அடையும்.

7-3-70ல் கொழும்புநோக்கிச்செல்லும் வண்டி ஒன்று திருக்கேதீச்சரம்புகைவண்டி நிலையத்திலிருந்து காலை 10 மணிக்கு புறப்படும். இவ்வண்டி கொழும்பு நிலையத்தைப் பிற்பகல் 7 மணிக்கு அடையும்.

யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும்வண்டிஒன்று திருக்கேதீச்சரம் நிலையத்திலிருந்து பகல் 11 மணிக்கு புறப்படும். இவ்வண்டி பிற்பகல் 6 மணிக்கு யாழ்ப்பாண நிலையத்தை அடையும்.

கொழும்புக்குச் செல்லும் யாழ்தேவி' கடுகதிப் புகைவண்டியையும் காங்கேசன் துறைக்குச் செல்லும் 'உத்தரதேவி' கடுகதிப் புகைவண்டியையும் இணைக்கும் விசேட வண்டியொன்று திருக்கேதீச்சர நிலையத்திலிருந்து பிற்பகல் 3-22 மணிக்குப் புறப்படும். இவ்வண்டியில் யாழ்தேவியுடனும் உத்தரதேவியுடனும் இணைத்து நேரே கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் செல்லும் பெட்டிகள் இருக்கும். யாத்திரீகர்கள் மதவாச்சியில் இறங்கி மாற வேண்டிய அவசியம் ஏற்படாது.

இணைப்பு பஸ் சேவை 5-3-70-ல் அதிகாலையிலிருந்து 7-3-70 இரவு வரை திருக்கேதீஸ்வரம் புகைவண்டி நிலையத்துக்கும் கோவிலுக்கும் புகைவண்டி இணைப்பு பஸ்சேவை இருக்கும். மன்னார் புகைவண்டி நிலயத்திலிருந்து கோவிலுக்குச் செல்வகற்கு பஸ்சேவை இருக்கமாட்டாது. ஆகையால் புகைவண்டிமூலம் பிரயாணம் செய்யும் யாத்திரீகர்கள் திருக்கேதீச்சரம் புகைவண்டி நிலையத்தில்இறங்கி பஸ்மூலம் கோவிலுக்குச் செல்லுதல்வேண்டும்.

மலிவு பிரயாணச் சீட்டுக்கள்: சகல புகைவண்டி நிலையங்களிலுமிருந்து கேதீச்சரம் புகைவண்டி நிலையத்துக்கு மலிவுச் சீட்டுக்கள் வழங்கப்படும், பத்துப் பேரும் அதற்கு மேற்பட்டவர்களும் கொண்ட குழுவினருக்கு மிகவும் மலிவான குழு மலிவுச்சீட்டுக்கள்வழங்கப்படும்.

6-3-70ல்காலையிலும் பகலிலும் மதவாச்சிப் புகைவண்டி நிலையத்தை அடையும் யாத்திரீகர்கட்கு அங்கு உணவு சிற்றுண்டிகள் வழங்கப்படும். திருக்கேதீச்சரம் புகைவண்டி நிலையத்தில் உணவு வழங்கப்படும்.

7-3-70-ல் தீர்த்தம் முடிந்தவுடன் திருக்கேதீச்சரம் புகைவண்டி நிலயத்தை அடையும் யாத்திரீகர்கட்கு அங்கு விரதகாரருக்கு ஏற்ப சுத்தமான முறையில் தயார் செய்யப்பட்ட அன்னம் கறிகள் கொண்ட அன்னப்பொட்டலங்கள் வழங்கப்படும். மதவாச்சி நிலையத்தில் சிற்றுண்டிகளும் உணவும் வழங்கப்படும்.

மன்னார் மாவட்ட அதிபரினதும் திருக்கேதீச்சரம் புகைவண்டி யாத்திரீகர் தொண்டர்சபையினரினதும் முயற்சியால் சென்ற ஆண்டு முதல் புகைவண்டிப் பகுதியினர் யாத்திரீகர்கட்கு இவ்வித ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

### உத்தரவாதவிலை தற்காலிக உயர்வு

#### வெங்காய விவசாயிகளுக்கு ஒரு நல்ல செய்தி

மாவிட்டபுரம், வெள்ளி

''இதுவரைக்கும் இருந்து வந்த சின்னவெங்காயத்தின் ஆடிமாத உத்தரவாத விலை வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சமாஜம் எடுத்த முயற்சியால் ரூ. 3-36 சதம்அதிகரிக்கப்பட்டுள்ளது என்று வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சமாஜத் தலைவர் திரு. என், ரி. சிவஞானம் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

1965-ம் ஆண்டிலிருந்து இற்றைவரைக்கும் சின்ன வெங்காயத்தின் ஆடி மாத உத்தரவாதவிலை ரூபா22-40 சதமாக இருந்துவந்தது.

இவ்விலைத் திட்டத்தை மாற்றியமைப்பதற்காக கடந்தகாலங்களில் சமாஜம் அல்லும்பகலும் அயராது பாடுபட்டுவந்ததன் விளைவாக சின்னவெங்காய உத்தரவாதவிலை 22-40ல் இருந்து 25-76 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

### 'உதயம்' நூல் வெளியீட்டுவிழா

(நமது நிருபர்)

எழுத்தாளர் 'நீர்வை பொன்னையன்' எழுதிய 'உதயம்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழா இன்று மாலை 5 மணிக்கு வண்ணை சிவன்கோவிலடியிலுள்ள கணக்கியல் கல்லூரி மண்டபத்தில் திரு. எம். கார்த்திகேசு தலைமையில் நடைபெறும்.



யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசி மாதம் 10-ந் திகதி [21-2-70]

## போட்டியில்லா ஏற்பாடு

யாழ்ப்பாண மாநகரசபைக்குப் போட்டியில்லாமல் இம்முறை மேயரைத் தெரிவு செய்ததுபோல் இனி எப்போதும் செய்வது விரும்பத்தக்கது என்று அன்று எழுதியிருந்தோம். ஆனல் இது முடியக் கூடியதா என்று நமது மாநகரசபையை அறிந்தவர்கள் சந்தேகப்படக்கூடும்.

மனமுண்டானல் நிச்சயம் மார்க்கமுண்டு.

சென்னை கார்ப்பரேஷனுக்கு ஒவ்வொரு வருஷமும் போட்டி (பகிரங்கமாக) இல்லாமல் சென்ற சுமார் 35 வருஷங்களுக்குமேல் தெரிவுசெய்து வருகிறார்கள். இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர், ஹரிஜனங்கள் என்று மாறி மாறி ஒருவர் மேயராக வருவதென்றும் அந்தந்த சமூகத்தைச் சேர்ந்த மெம்பர், அங்கத்தவர்கள் முதல்நாள் கூடி தெரிவுசெய்தவரையே, மறுநாள் சபையில் ஏகமனதாக மேயராகத் தெரிவு செய்வதென்றும் கனவான்கள் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டு அது நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. அங்கும் வருஷத்துக்கு ஒரு மேயர்.

யாழ்ப்பாணத்திலே அவ்வித சாதி, சமய வேறுபாட்டை அடிப்படையாகக் கொள்ளாமல் ஒவ்வொரு வட்டாரப் பிரதிநிதியும் வரிசை முறையாக ஒருவருட மேயராக இருப்பதென்று கனவான்கள் ஒப்பந்தம் செய்தால், எல்லா வட்டாரங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கும் அது திருப்தி அளிக்கக்கூடும். அல்லது வேறு ஏதாயினும் ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்வது அசாத்தியமல்ல.

மாநகரசபை மேயர், நகருக்கே முதல்பிரஜையாவதுடன், எல்லோருடைய விசுவாசத்தையும் நன்மதிப்பையும் பெற்றவராக இருக்கவேண்டுமாதலால், இந்தத் தேர்தலை போட்டியில்லாத முறையில் நடத்துவதே பலவிதங்களிலும் சிறந்ததாகும்.


### உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

காங்கேசன்துறை தமிழ்க்கனல் மன்றத்தினர் வடமாகாண ரீதியாக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று நடாத்தவிருக்கின்றனர். கலந்து கொள்ள விரும்பும் மன்றங்கள் கீழ்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். மு. இராஜேஸ்வரன், செயலாளர், தமிழ்க்கனல் மன்றம், காங்கேசன்துறை.

1654

### தேவை

நெசவு செய்வதற்கும் நூல் சுற்றுவதற்கும் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். சின்னத்துரை, மொம்சாக் மாளிகை, 11/D ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

1869


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org